# பாட்டும் தொகையும்

## - ஓர் அறிமுகம்

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்

முதற் பதிப்பு : நவம்பர் - 1994

விலை : ரூ. 25-00

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை,
சென்னை-600 108

அச்சிட்டோர்;
ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்
7/40, கிழக்குச் செட்டித் தெரு
பரங்கிமலை, சென்னை-16.

# முன்னுரை

பாட்டும் தொகையும் சங்க இலக்கியங்கள் என வழங்கப்பெறும். பாட்டு எனப்படுவது பத்துப்பாட் டாகும்; தொகை எனப்படுவது எட்டுத் தொகை யாகும். பத்துப் பாட்டில் செம் பாகம் ஆற்றுப்படைகளாகும். ஆற்றுப்படை நூல்கள் மனித நேயத்தை மலர்விக்கின்றன. முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை முதலி யன பாட்டோவியங்களாக அமைந்து, பழந் தமிழர் பண்பாட்டினைச் சிறக்க உணர்த்தி நிற்கின்றன.

நற்றிணை முதலாக அமைந்துள்ள எட்டுத் தொகை நூல்கள் அகமும் புறமும் திணை யொழுக்கங்களாகக் கொண்டு திகழ்கின்றன. வீட்டு வாழ்வும் நாட்டு வாழ்வும் இந்நூல்களால் விளக்கமுறுகின்றன.

'மூத்தோர்கள் பாடியருள் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்' என்னும் தொடர் பொருள் பொதிந்த வொன்றாகும்.

உயரிய அரிய நூல்களின் உள்ளடக்கத்தினை எளியோரும் புரிந்து கொள்ளும் வகையில் இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது. தமிழ் மக்கள் பொற்கால இலக்கியத்தின் பயனை நன்குணர்ந்து துய்ப்பார்களாக.

—சி. பா.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| **பத்துப்பாட்டு** | | **1—72** |
| *1.* | திருமுருகாற்றுப்படை | ... 3 |
| *2.* | பொருநராற்றுப்படை | ... 11 |
| *3.* | சிறுபாணாற்றுப்படை | ... 16 |
| *4.* | பெரும்பாணாற்றுப்படை | ... 21 |
| *5.* | முல்லைப் பாட்டு | ... 29 |
| *6.* | மதுரைக் காஞ்சி | ... 34 |
| *7.* | நெடுநல்வாடை | ... 41 |
| *8.* | குறிஞ்சிப் பாட்டு | ... 46 |
| *9.* | பட்டினப் பாலை | ... 59 |
| *10.* | மலைபடுகடாம் | ... 69 |
| **எட்டுத் தொகை** | | **73—156** |
| *1.* | நற்றிணை | ... 75 |
| *2.* | குறுந்தொகை | ... 84 |
| *3.* | ஐங்குறுநூறு | ... 91 |
| *4.* | பதிற்றுப்பத்து | ... 97 |
| *5.* | பரிபாடல் | ... 104 |
| *6.* | கலித்தொகை | ... 113 |
| *7.* | அகநானூறு | ... 125 |
| *8.* | புறநானூறு | ... 132 |

# பத்துப் பாட்டு

# 1. திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டுள் முலாவதாக அமைந்துள்ளது திரு முருகாற்றுப்படையாகும். பத்துப்பாட்டுள் ஐந்து ஆற்றுப் படை நூல்கள் அமைந்திருக்கின்றன. அத்தொகுப்பில் முதலாவதாக அமைவதும் திருமுருகாற்றுப்படையே யாகும். திருமுருகாற்றுப்படைக்கும் பிற ஆற்றுப்படை நூற்களுக்கும் அடிப்படையில் ஒரு வேறுபாடு உண்டு. ஏனைய ஆற்றுப்படைகள் வறுமையில் வாடும் ஒருவன், தன் பசிப்பிணி தீரப் பொருள் வேண்டி வள்ளலை நாடித் தேடிச் செல்லும்வகையில் ஆற்றுப்படுத்தும் போக்கில் அமைந்திருப்பவை; இம்மைப் பயன் கருதியவை. ஆனால் திருமுருகாற்றுப்படை இம்மையின்பமும் மறுமைப் பயனும் கருதி அமைந்த நூலாகும். அருட்செல்வம் வேண்டுவான் ஒருவனை முருகனிடத்தே ஆற்றுப்படுத்தும் நூல் திருமுருகாற்றுப்படையாகும். நற்றிணை, குறுந் தொகை முதலான எட்டுத்தொகை நூற்களுக்கு நூலின் முகப்பில் கடவுள் வாழ்த்துப்பா உண்டு. அம்முறையில் பத்துப்பாட்டிற்குத் தனியாகக் கடவுள் வாழ்த்துப்பாடல் ஒன்று எழுதிச் சேர்க்காமல் முருகப் பெருமானின் அருளைப் பரவும் போக்கில் அமைந்துள்ள திருமுரு காற்றுப்படை பத்துப்பாட்டில் முதலாவதாக இடம் பெற்றுள்ளது எனலாம்.

பத்துப்பாட்டில், ஏன் சங்க இலக்கியத்திலேயே திருமுருகாற்றுப்படைக்கு ஒரு தனி இடம் உண்டு. எட்டுத்

தொகை நூல்களில், அதிலும் குறிப்பாகப் பரிபாடலில் முருகவழிபாட்டினைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. என்றாலும் முதன்முதலாக முறையாக முழுமையாக முருகப்பெருமான் உறையும் இடங்களைக் கூறி, ஒவ்வோரிடத்திலும் வாழும் மக்கள் மேற்கொள்ளும் வழிபாட்டினை விரிவாகவும் விளக்கமாகவும் கூறும் நூல் திருமுருகாற்றுப்படை எனலாம். இந்தக் காரணமே சைவ உலகில் திருமுருகாற்றுப்படைக்கு ஒரு தனியிடத்தைத் தந்து, பிற்காலத்தில் தொகுக்கப்பெற்ற பன்னிருதிருமுறை களில் பதினோராந் திருமுறையில் ஒரு நூலாக அமைக்கப் பட்டது எனலாம். ஆயினும் இக்காரணங்கொண்டு இந் நூல் பிற்காலத்தைச் சார்ந்த நூல் எனச் சிலர் கூறுவது பொருந்தாது எனலாம். ஏனெனில் நூலின் அமைப்பு முறை, நோக்கம், சொல்லாட்சி முதலிய காரணங்களால் இது சங்க இலக்கியங்களில் ஒன்றெனவும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நூல் எனவுமே கொள்ள இடமுண்டு.

திருமுருகாற்றுப்படைக்கும் பிற ஆற்றுப்படை களுக்கும் வேறுசில வேறுபாடுகளும் உண்டு. பிற ஆற்றுப் படைகள் ஆற்றுப்படுத்தப்படுவோரது பெயரால் வழங்கும். திருமுருகாற்றுப்படையோ பாட்டுடைத் தலைவன் பெயரால் வழங்குகின்றது. மேலும் சில ஆற்றுப்படை நூற்களில் பொதுவாகக் காணப்படும் ஆற்றுப்படுத்தப்படுவோனை விளித்தல், அவனது வறுமை நிலையை விவரித்தல், ஆற்றுப்படுப்போன் தனது பழைய வறுமை நிலையையும் பெற்ற பரிசிலையும் கூறல் ஆகிய செய்திகள் திருமுருகாற்றுப்படையில் விளங்கக் கூறப் படவில்லையாயினும், ஆற்றுப்படையின் அமைப்பு ஓர் அழகுறு முறையில் திருமுருகாற்றுப்படையில் அமைதிருக்கக் காணலாம்.

317 ஆசிரியப்பா அடிகள் கொண்ட இப்பாட்டு, முருக னது அருள்பெற்ற ஒரு புலவன், முருகனது அருள்பெற

விறையும் மற்றொரு புலவனை ஆற்றுப்படுத்தும் முறையில் அமைந்துள்ளது. எனவே, இதனைப் 'புலவராற்றுப்படை' என்று வழங்குவாரும் உளர். முருகன் அருள்பெற நினைந்து புறப்பட்ட ஒருவனிடம் முருகன் எழுந்தருளியிருக்கும் இடங்களைக் குறிப்பிட்டு, அவனை இன்னவாறு பெயர் கூறித் துதித்து இன்னவாறு வழிபட்டால் பெறலரும் பரிசிலைப்பெறலாம் என்று கூறிவழிப்படுத்துவது திருமுருகாற்றுப்படையாகும். முருகப் பெருமானைப் பரவி மேற்கொள்ளும் பயணம் பின்வருமாறு சுட்டப்படுகின்றது :

**தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்**
**வான்தோய் நிவப்பின் தான்வந் தெய்தி**
**அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத் தன்**
**மணங்கமழ் தெய்வத் திளநலம் காட்டி**
**அஞ்சல் ஓம்புமதி அறிவனின் வரவென**
**அன்புடை நன்மொழி யளைஇ விளிவின்று**
**இருணிற முந்நீர் வளைஇய வுலகத்து**
**ஒருநீ யாகித் தோன்ற விழுமிய**
**பெறலரும் பரிசில் நல்குமதி**

—திருமுருகாற்றுப்படை : 287-295

இஃது ஆறு பகுதியாக அமைந்துள்ளது. முதற்பகுதி, திருப்பரங்குன்றமாகும். இப்பகுதியில் முருகப் பெருமானின் திருவுருவச் சிறப்பு, அவன் அணியும் கடம்ப மாலையின் சிறப்பு, சூரர மகளிர் செயல்கள், சூரனை வதைத்த முருகனின் வீரம், மதுரை வளநகரின் சிறப்புகள், பரங்குன்றின் இயற்கைவளம் முதலியன சுட்டப்படுகின்றன. இரண்டாம் பகுதி, திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூராகும். இப்பகுதியில் முருகன் தன் அடியார்களுக்கு அருள்புரிய எழுந்தருளும் யானையின் திறம், அவனுடைய ஆறு திருமுகங்கள் பன்னிரு கரங்களின் செயல்கள், திருச்சீரலைவாயில் அவன் எழுந்தருளும் எழில் முதலியன எடுத்து

மொழியப்படுகின்றன. மூன்றாம் பகுதி, திருவாவினன் குடிப்பகுதியாகும். இஃது இன்று பழனி எனப்படும். அன்று சித்தன்வாழ் மூதூர் என்றும் இப்பதி வழங்கப் பட்டது. முருகனை வழிபடும் முனிவர்களுடைய ஒழுக்கம், தேவர்கள் சூழ அவனைக் காணவரும் மகளிர் இயல்புகள், திருமால் முதலியவர்களைப் பற்றிய செய்திகள் இப்பகுதி யில் இடம்பெறுகின்றன. நான்காவது பகுதியாகிய திருவேரகப்பகுதியில் அந்தணர்தம் இயல்பும் முருகனை அவர்கள் வழிபாடாற்றும் திறமும் கூறப்படுகின்றன.

**இருமூன் றெய்திய வியல்பினின் வழாஅது**
**இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி**
**அறுநான் கிரட்டி இளமை நல்லியாண்டு**
**ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை**
**மூன்றுவகைக் குறித்த மூத்தீச் செல்வத்து**
**இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல**
**ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்**
**புலராக் காழகம் புலர வுடீஇ**
**உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து**
**ஆறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி**
**நாவியன் மருங்கின் நவிலப் பாடி**
**விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து**
**ஏரகத் துறைதலு முரிய னதாஅன்று**

—திருமுருகாற்றுப்படை : *177-189*

ஐந்தாம் பகுதி, குன்றுதோறாடல் என்பதாகும். இப்பகுதி யில் மலையில் வாழும் குறவர்கள் அயரும் குரவைக்கூத்தும், முருகனை வணங்கும் மகளிர் இயல்பும் பேசப்படுகின்றன. ஆறாவதான இறுதிப்பகுதி பழமுதிர் சோலைப்பகுதி யாகும். இப்பகுதியில் அவன் விரும்பி எழுந்தருளியிருக்கும் இடங்கள் குறிப்பிடப் படுகின்றன.

ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதும்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

—திருமுருகாற்றுப்படை : 220-228

குறமகள் பூசனை செய்யும் முறை, பின்னர்க் குறிப்பிடப்படுகின்றது. ஆறுமுகப்பெருமானின் அடியவர்கள் தம் பத்திமைப் பாங்கு பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :

மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேஎள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையி னேத்தி யானாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா வளவையின்

—திருமுருகாற்றுப்படை : 271-281

அவன் அவர்களை ஆட்கொள்ளும் கருணைத்திறம், முதலியன குறிப்பிடப்படுகின்றன.

நெடுபெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை

**மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே**
**வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ**
**இழையணி சிறப்பிற் பழையோள் குழவி**
**வானோர் வணங்குவில் தானைத் தலைவ**
**மாலை மார்ப நூலறி புலவ**
**செருவில் ஒருவ பொருவிறன் மள்ள**
**அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை**
**மங்கையர் கணவ மைந்தர் ஏறே**
**வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ**
**குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து**
**விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ**
**பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே**
**அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக**
**நசையுநர்க் கார்த்தும் இசைபே ராளா**
**அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்**

*—திருமுருகாற்றுப்படை : 253-271*

*பழமுதிர்சோலையில் பாயும் அருவியின் அழகு பின் வருமாறு விளங்கக் கூறப்படுகின்றது.*

**வேறுபஃ றுகிலின் நுடங்கி அகில்சுமந்து**
**ஆர முழுமுத லுருட்டி வேரல்**
**பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு**
**விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த**
**தண்கமழ் அலரிறால் சிதைய நன்பல**
**ஆசினி முதுசுளை கலாவ மீமிசை**
**நாக நறுமலர் உதிர யூகமொடு**
**மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்**
**இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று**
**முத்துடை வான்கொடு தழீஇத் தத்துற்று**
**நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா**
**வாழை முழுமுதல் துமியத் தாழை**
**இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்**
**கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற**

**மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்**
**கோழி வயப் பெடை இரியக் கேழலொடு**
**இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன**
**குருஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்**
**பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்டு**
**ஆமா நல்லேறு சிலைப்பச் சேண் நின்று**
**இழுமென இழிதரும் அருவிப்**
**பழமுதிர் சோலை மலைகிழ வோனே**

—திருமுருகாற்றுப்படை : **296-317**

திருமுருகாற்றுப்படையின் தொடக்கமே நெஞ்சை அள்ளுவதாக உளது. உலகம் மகிழுமாறு கதிரவன் கடலின்மேல் தோன்றுகிறான். செஞ்ஞாயிறு நீலக்கடலில் தோன்றுவதுபோலச் செவ்வொளி வீசித் திகழும் முருகன் நீலமயில்மீது கோலங்கொண்டு திகழ்வது போலுள்ளது. அடியவரைத் தாங்கும் அடிகள் அவனுடையவை; பகைவரை அழிக்கும் கைகள் அவனுடையவை. குற்றமற்ற கற்பினையுடைய தெய்வயானையின் கணவன் அவன். கார்காலத்தே மலரும் கடம்பமலர் மாலை புரளும் மார்பு அவனுடையதாகும்.

**உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு**
**ஓவற இமைக்குஞ் சேண்விளங்கு அவிரொளி**
**உறுநர்த் தாங்கிய மதனுடைய நோன்றாள்**
**செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை**
**மறுவில் கற்பின் வாணுதல் கணவன்**
**கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை**
**வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்**
**தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து**
**இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து**
**உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்.**

—திருமுருகாற்றுப்படை : **1-11**

இவ்வாறு திருமுருகாற்றுப்படை தொடங்கி இறுதியில் பழமுதிர் சோலையில் பாயும் அருவியின் அழகுக் காட்சி யோடு முடிகிறது

முருகனை அடையவேண்டும் என்ற தலைமையான உள்ளத்துடன் முருகனை நாடிச்சென்றால் முருகன், ''அஞ்சாதே! நின் வரவை யான் முன்னரேயே அறிவேன்'' என்று அன்புகனிந்த சொற்களைக் கூறி, ஒப்புயர்வற்ற வீடுபேற்றினை இம்மைப் பிறப்பிலேயே அடைந்து இன்புறத்தக்க அளவிற்குப் பெறற்கரும் பரிசில் நல்கி. அருள்பாலிப்பான் என்கிறது திருமுருகாற்றுப்படை.

**மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து**
**எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்**
**சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு**
**நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையுஞ்**
**செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்**
**நன்னர்நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப**
**இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.**

—திருமுருகாற்றுப்படை : 60-66

இத்திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் ஆவர். இவர் சங்க காலத்தே வாழ்ந்த பெரும்புலவாகளில் ஒருவர்; புலமைத் திறன் மிக்கவர். செவ்விய சொற்களைத் தம் பாடலில் வைத்து அழகிய சொல்லோவியம் தீட்டக்கூடியவர். பத்தியின் ஈடுபாட்டில் தம்மை மறந்து திளைப்பவர். முருகனை அழகு கொலுவீற்றிருக்கும் இடங்களிலும் பொதுவிடங்களிலும் கண்டு துதித்தவர். நாள்தோறும் நக்கீரர் உரைத்த திருமுருகாற்றுப்படையை ஓதினால் முருகன் முன்னேதோன்றி அவர்தம் மனக்கவலையை யெல்லாம் தீர்த்து, ஓதியவர் உளங்கொளவேண்டியன எல்லாவற்றையும் வழங்குவான் என்பது தொன்று தொட்டுத் தமிழ்நாட்டில் நிலவிவரும் நம்பிக்கையாகும்.

# 2. பொருநராற்றுப்படை

பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படையையடுத்து அமைந்திருப்பது பெருநராற்றுப்படையாகும். பரிசில் பெறக்கருதிய ஒரு பொருநனைப் பரிசில் பெற்றானொருவன் கரிகாற் பெருவளத்தானிடத்தே ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்திலங்குகின்றது.

வறுமையால் வாடிய பொருநன் ஒருவன் தன் மனைவியான பாடினியுடன் சுற்றம் சூழத் தன் பசிப்பிணி தீரும் வகையில் பரிசில் வழங்கும் வள்ளலை நாடிக் காட்டு வழியே வருகின்றான். வழிவந்த வருத்தந்தீரப் பாடினி, மரத்து நிழலில் தங்கிப் பாலையாழை வாசிக்கின்றாள் சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கண்டு பரிசில் பெற்ற ஒருவன், அவனைக் கண்டு அவன் இயல்புணர்ந்து, "நீ வேறொரு வழியிற் செல்லாது இவ்வழியில் வந்ததும் என்னை எதிர்ப்பட்டதும் உன் நல்வினைப் பயனேயாகும். உன் வறுமை உன்னைவிட்டு நீங்குதலை நீ விரும்புவையாயின் உடனே சுற்றத்துடன் புறப்படுவாயாக; கரிகால் வளவனைச் சேர்ந்து உம் வறுமை புலப்பட அவன் முன்னே நிற்பாயாக; நின்றால் கன்றை ஈன்ற தாய்ப் பசுப் போல் உம்மை நோக்குவான்; அழுக்குப் படிந்து கொட்டைப் பாசியின் வேர் போல் தையலோடு விளங்கும் நும் ஆடையை மாற்றித் தூய்மையானதும், கரையிலே குஞ்சங்களையுடையதும், பட்டினாலாயதுமான உடைகளைத் தருவான்; அம்மட்டோடன்றி, இனிய பூமணம்

வீசுவதும், போதுமென்று கையமைத்தற்குக் காரணமான கடிப்பினையுடையதுமாகிய மதுவைப் பொற்கலத்திலே ஊற்றி நாள்தோறும் நல்குவான்; நின் மனைவியாகிய பாடினி தன் கரிய குழலிலே சூடிக்கொள்ளப் பொற்றாமரைப் பூவை வழங்குவான். அவர்கள் தன் மார்பிலே அணிந்துகொள்ளப் பொன்னரி மாலையையும் வெண் முத்துமாலையையும் நல்குவான். நான்கு வெண்புரவிகள் பூட்டப்பட்ட பெரிய தேரிலே உங்களை ஏற்றுவித்து ஏழடி பின்னே வந்து அனுப்பிவைப்பான். இவ்வாறு பாணர்களுக்கு வழங்கும் முறையில் வழங்கிய பின்னர், நல்ல பல ஊர்களையும், யானைகளையும் நீங்கள் பிறருக்கும் வழங்கத்தக்க வகையில் அவன் கொடை வழங்குவான் எனத் தான் வழியிடையே கண்ட பொரு நனைப் பரிசுப் பெற்று மீண்டுவரும் பொருநன் ஆற்றுப் படுத்துகின்றான்.

**பழுமரம் உள்ளிய பறவையின் யானும்அவன்**
**இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்**
**நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்**
**இசையேன் புக்குஎன் இடும்பை தீர**
**எய்த்த மெய்யேன் எய்யே னாகிப்**
**பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்பக்**
**கைக்கசடு இருந்தஎன் கண்ணகன் தடாரி**
**இருசீர்ப் பாணிக்கு ஏற்ப விரிகதிர்**
**வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்**
**ஒன்றியான் பெட்டா அளவையின்**

—பொருநராற்றுப்படை : 64-73

பாட்டுடைத் தலைவனாகிய கரிகாற்பெருவளத் தானின் பெருமை இந்நூலுள் ஆங்காங்கே பரக்கப் பேசப் படுகின்றது. அவன் அறநெறி பற்றிச் செங்கோல் ஓச்சுபவன் என்றும் போர்க்களத்தில் பேராண்மை காட்டிப் போர் புரியும் ஆற்றல் சான்றவன் என்றும்

கூறப்படுகின்றான். இவன் ஒருபாற்கோடாது இளையனாயினும் முதியவர் உவப்பச் சிறுவயதில் நீதிவழங்கிய திறத்தினைப் பொருநாராற்றுப்படை குறிப்பிடுகின்றது.

ஒரு சமயம் நீதி வேண்டி இருமுதியவர்கள் இவனிடம் வந்தனர். தம் அரசன் இளையவனாக இருப்பதைக் கண்டவுடன் அவன் தங்கட்குப் பொருத்தமான நீதி வழங்கும் திறனுடையவனா என்று ஐயுற்று நின்றனர். அவர்கள் மனக் கருத்தை அவர்தம் முகக் குறிப்பால் அறிந்த கரிகாலன் அவர்களுடைய வழக்கை முதியவர் ஒருவரிடம் ஒப்படைப்பதாகக் கூறி அரண்மனையின் உட்சென்றான். பின்னர்த் தானே நரைமுடித்து முதியவன் வேடம் புனைந்துவந்து இருவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் நீதி வழங்கி இறுதியில் தான் இன்னான் என வழக்கிற்கு வந்திருந்த முதியவர்க்கு உணர்த்தினான்.

கரிகாலன் முருகப்பெருமானைப் போன்றே ஆற்றலும் அழகும் உடையவன் என்றும், தாய் வயிற்றிலிருந்த பொழுதே அரசுரிமை எய்தியவன் என்றும். வெண்ணிப் பறந்தலையில் பகைவரைப் புறமுதுகுகாட்டிஓடச்செய்து வெற்றிபெற்ற வேந்தன் என்றும் குறிப்பிடப்படுகின்றான்.

**உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்**
**முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்**
**தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி**

—பொருநராற்றுப்படை : *130-132*

**நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!**
**களியியல் யானைக் கரிகால் வளவ!**
**சென்றுஅமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற**
**வென்றோய்!**

—புறநானூறு

**கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வாள்வடக்கு இருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத் தவனொடு செலீஇயர்
பெரும்பிறிது ஆகியாங்கு**

—அகநானூறு

இப்பாட்டினைப் பாடியவர் முடத்தாமக் கண்ணியார் ஆவர். இப்பாட்டு 248 அடிகளையுடையது. வஞ்சியடிகள் இடையில்வந்த ஆசிரியப்பாவாலாகியது. போர்க்களம் பாடும் பொருநன் இப்பாட்டினில் குறிப்பிடப்படுகின்றான். பொருநர்கள் ஓர் ஊரில் விழாவிற் கூடித் தங்கள் இசைத் திறனைக் காட்டி அவ் விழா முடிந்த பின் வேற்றூரை நோக்கிச் செல்லுங்காட்சி இப் பாட்டின் தொடக்கத்தே இடம் பெற்றுள்ளது, பாலை யாழின் வருணனை மனங்கொளும் வண்ணம் வருணிக்கப் பட்டுள்ளது. பாலைப் பண்ணைக் கேட்ட ஆறலை கள்வர்கள் தங்கள் கொள்ளை, கொலையாகிய கொடிய தொழிலை மறந்து நிற்பர் என்று இசைத்திறனின் இனிய பெற்றி கிளத்தப்பட்டுள்ளது. விறலியின் கேசாதிபாத வருணனை, ஆசிரியரின் கூர்த்த நோக்கினையும் அரிய சொற்களை உரிய இடத்திற்பெய்து கவிதையைச் சிறக்கச் செய்யும் ஆற்றலையும் புலப்படுத்துகின்றது. கரிகாற் பெருவளத்தான் பொருநரை வரவேற்று விருந்துதந்து உபசரிக்கும் வள்ளன்மையும் வருணிக்கப்படுகின்றது. பல்வேறு உணவுவகைகள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. தம் கலைத்திறனைக் காட்டிய பொருநர்க்கு தேரும் யானையும் நல்கும் கரிகாலனின் கொடை மனம் குறிப்பிடப்படுகின்றது. பொன்னாலாகிய மாலையினைப் பரிசாகப் பெறும் விறலியரின் கலைத்திறம் சுட்டப்படுகின்றது. வெண்ணிப் பறந்தலையின் இளம் வயதிற்

கரிகாலன் மேற்கொண்ட போரும், அப் போரில் சேர பாண்டியர்கள் வெல்லப்பட்ட செய்தியும் விளக்கமாகக் கூறப்படுகின்றன. காவிரிப் பேரியாற்றின் பெருமையும் அது தண்ணீரால் மக்களைப் புரந்து நிற்கும் திறமும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

முடத்தாமக்கண்ணியார் அறிவு நலமும் புலமைச் செல்வமும் மிகுந்த புலவராகக் காணப்படுகின்றார். இவர் ஆண்பாற் புலவர் என்று சிலரும் பெண்பாற்புலவர் என்றும் சிலரும் கூறுவர். இவர் கையாளும் உவமைகள் நயம் மிக்கவை. அவற்றில் ஒன்றிரண்டு உவமைகளைக் காண்போம். யாழைத் தோல் இட்டுப் போர்த்தியுள்ளனர். அது விளக்கொளி போலும் சிவந்த நிறமுடையது. இரண்டு பக்கமும் கூட்டித் தைக்கப்பெற்றது. இத் தோற்றத்திற்கு நன்கு அறியப்படாத இளைய சூலினை யுடைய செந்நிறம் வாய்ந்த பெண்ணொருத்தியின் அழகிய வயிற்றிலே காணப்படும் மயிரொழுங்கு உவமை கூறப்பட்டுள்ளது. அடுத்துப் புன்செய் நிலத்தை உழுத கலப்பையின் கொழுவைப் போல, பொருநன் கரிகாலனின் விருந்தினனாக இருந்து இராப் பகலாக ஊன் தின்றமை காரணமாக அவன் பற்கள் மழுங்கலுற்றன என இவர் கூறும் உவமை, நயம் மிக்கதாகும்.

கரிகாலன் பெருமை, சோணாட்டின் சிறப்பு, இசையின் உயர்வு இவற்றை இனிதுற விளக்கிநிற்பதே பொருநராற்றுப்படை எனலாம்.

# 3. சிறுபாணாற்றுப்படை

சங்க இலக்கியம் பாட்டும் தொகையும் என வழங்கும். பாட்டு என்பது பத்துப்பாட்டைக் குறிக்கும். பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நான்கும் ஆற்றுப்படை நூற்களாகும். மலைபடுகடாம் கூத்தராற்றுப்படையென வழங்கும். இவ்வாறுகொண்டால் பத்துப்பாட்டில் செம்பாகம் - அதாவது சரிபாதி ஆற்றுப் படை நூற்களாகும். கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும் வறுமையுடன் வள்ளல் ஒருவனை நாடிச் செல் கையில் எதிரே ஏற்கெனவே வள்ளல் ஒருவனை நாடிச் சென்று பரிசில்பெற்ற கூத்தரோ, பாணரோ, பொருநரோ, விறலியோ வந்து இவர்கள் வறுமைதீர இந்த வள்ளலை நாடி இவ்வழியாகச் சென்றால் இன்னபொருள் கிடைக்கும் எனப் பயன்பெறுமாறு வழிகாட்டிச் செல்வது ஆற்றுப் படையின் பாற்படும்.

இவ் ஆற்றுப்படை ஓய்மாநாட்டு நல்லியக் கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியதாகும். 260 அடிகள் ஆசிரியப்பாவில் அமைந்த இந்நூலிற் சீறியாழை வைத்திருக்கும் சிறுபாணர்கள் குறிக்கப்படு வதாலும், பேரியாழை வைத்திருக்கும் பெரும்பாணரைக் குறிக்கும் பெரும்பாணாற்றுப்படையினை நோக்க இஃது அளவாற் சிறிதாக இருப்பதனாலும் இந்நூலிற்குச் 'சிறு பாணாற்றுப்படை'யெனப் பெயர் வந்தது.

இப்பாட்டு, ஓய்மாநாட்டு நல்லியக் கோடனிடம் சென்று பாடிப் பரிசில் பெற்று மீளும் சிறுபாணன் ஒருவன், வழியில் கண்ட வறுமையால் வாடும் பாணன் ஒருவனை அவ்வள்ளலிடம் ஆற்றுப்படுத்தும் முறையில் அமைந்துள்ளது. கதிரவனின் கொடிய வெப்பத்தால் ஆழமாகப் பாதித்திருக்கும் பாலை நிலத்தின் வழியே வறுமையால் வாடிமெலிந்த பாணன் ஒருவன், தன் வறுமையைப் போக்கவல்ல வள்ளல் ஒருவனை நாடிப் போய்க்கொண்டிருக்கிறான். அவனுடன் அவன் குடும்பமும் வறுமையால் மெலிந்து வாடிச் சென்றுகொண்டிருக்கிறது. நெடுவழி நடந்த வருத்தத்தால் விறலி களைத்துப் போயுள்ளாள். ஓடி இளைத்த நாயின் நாக்குப்போல, மான்போல் மருண்ட பார்வையுடைய அவளின் அடிகள் காணப்படுகின்றன. வழிநடை வருத்தம் தீர அவர்கள் ஒரு மரநிழலில் தங்கி இளைப்பாறுகின்றனர்.

**உயங்குநாய் நாவின் நல்லெழில் அசைஇ**
**வயங்கிழை உலறிய அடியின் அடிதொடர்ந்து**
**..............................**
**மடமான் நோக்கின் வாணுதல் விறலியர்,**
**நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி**

—சிறுபாணாற்றுப்படை : 17-32

அவ்வமயம் நல்லியக் கோடனிடம் சென்று பாடிப் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் திரும்பி அவ்வழியே வருகிறான். தன்னையொத்த கலைஞனின் வறுமை வளம்பெற்ற கலைஞனை வாட்டியெடுக்கிறது. அவன்மாட்டுக் கொண்ட அருள் காரணமாக அவனைப் பார்த்து, "பாணர் தலைவனே! நல்லியக் கோடனது ஓய்மாநாடு சேர நாட்டைக் காட்டினும் செல்வம் செழிப்பது; பாண்டிய நாட்டைக் காட்டிலும் பயன்மிக்கது; சோழ நாட்டைக் காட்டினும் செழுமை வாய்ந்தது. அவன் நாட்டில் அமைந்துள்ள ஊர்களும் வளம்மிக்கவை. அவன் குடைக்கீழ் வாழும் மக்கள் கொடை நெஞ்சு வாய்ந்

ப.—2

தவர்கள்; விருந்தோம்பற் பண்பில் தலைசிறந்தவர்கள். நல்லியக் கோடனோவெனில், கடையெழு வள்ளல்கள் மாய்ந்த பின்னர் அவர்தம் கொடைமனத்தைக் கொண்டிருப்பவன்.

**........................ என வாங்கு**
**எழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள்**
**எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்**
**விரிகடல் வேலி வியலகம் விளங்க**
**ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்**

—சிறுபாணாற்றுப் படை : **111-115**

அவனிடம் சென்று அவனைப் புகழ்ந்து பாடினால் உன் வறுமையின் வாட்டம் நீங்கப் பலவகைச் செல்வங்களை வாரி வழங்குவான்'' என்று தன் அனுபவத்தைக் கூறி, அவனுடைய தலைநகருக்குச் செல்லும் வழியினையும் விளக்கமாக எடுத்துரைத்தான்.

இப்பாட்டில் விறலியின் கேசாதி பாத வருணனை, சேர பாண்டிய சோழ நாடுகளின் முற்கால வளம், கடையெழு வள்ளல்களின் கொடைமடம், ஒய்மானாட்டின் வளம், நல்லியக்கோடனின் நயத்தகு பண்புகள், எயிற் பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை ஆகிய ஊர்களைப் பற்றிய குறிப்புகள், அவ்வவ் ஊர்களிற் கிடைக்கும் உணவு வகைகள், நல்லியக் கோடன் விருந் தோம்பும் திறம், பரிசில் நலகும் பாங்கு முதலியன யாவும் விளங்கக் கூறப்படுகின்றன. மாவிலங்கை ஒய்மாநாட்டின் தலைநகராகும். இக்காலத்துத் திண்டிவனத்தைச் சுற்றி யுள்ள பகுதிகள் அன்று ஒய்மாநாடு எனப்பட்டன. இப் பகுதியை ஆண்ட நல்லியக்கோடன் வீரமும் ஈரமும் சான்றாண்மையும் ஒருங்கே வாய்ந்தவன். அவனுடைய அரண்மனை வாயில் பொருநர்க்கும், புலவர்க்கும், அரு மறை அந்தணர்க்கும் எப்போதும் திறந்திருக்குமாம்.

இமயமலை கண்களைத் திறந்து பார்ப்பதைப் போல அவனுடைய மாளிகையின் வாயில் திறந்து கிடக்கும் என்று நல்லூர் நத்தத்தனார் கூறுகிறார்.

**பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்**
**அருமறை நாவின் அந்தணர்க் காயினும்**
**கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன**
**அடையா வாயில்**

—சிறுபாணாற்றுப்படை : 203-206

அவனைப் புகழ்ந்து பாடினால் வேலைப்பாடமைந்த தேர்களையும் யானை குதிரைகளையும் ஆடை அணிகலன்களையும் அளவின்றித் தருவான் என்கிறார் புலவர்.

நத்தத்தனார் பாடியுள்ள இச்சிறுபாணாற்றுப்படையில் வறுமையுற்ற ஒரு நாய்க் குடும்பம் அவலந்தோன்ற வருணிக்கப்பட்டுள்ளது. குட்டிகளை ஈன்ற நாயொன்று தனக்கு உணவு கிடைக்காமை காரணமாகப் பால் சுரக்காமல், அதனால் தான் ஈன்ற குட்டிகளுக்கும் பாலைக் கொடுக்க வழியில்லாமல் அந்நாய்க்குட்டிகள் பாலில்லாத வறுமுலையைப் பற்றியிழுக்க வருந்தி வீட்டின் அடுக்களையில் வாழ்கிறது

**திறவாக் கண்ண சாய்செவிக் குருளை**
**கறவாப் பால்முலை கவர்தல் நோனாது**
**புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்**

—சிறுபாணாற்றுப்படை : 130-132

என நாய்க்குடும்பத்தின் வறுமையைக் காட்டுவதன்மூலம் பாணர் குடும்பத்தின் வறுமை வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டிவிடக் காண்கிறோம்.

**காவெரி ஊட்டிய கவர்கணைத் தூணிப்**
**பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்**
**பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்**
**பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்**

**வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த**
**இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து**
**விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி**
**ஆனா விருப்பின் தானின் றூட்டி**

—*சிறுபாணற்றுப்படை : 238 - 245*

என வரும் இப்பகுதியில், காண்டவ வனத்தை எரித்த அருச்சுனனைக் குறிப்பிட்டு, அவன் அண்ணன் வீமன் இயற்றிய மடை நூலிற்சொல்லியபடி உணவு வகைகள் சமைக்கப்பெற்று, இரந்து சென்ற பாணர்களுக்கு நல்லியக் கோடனால் முன்னின்று ஊட்டப்படுகின்றன என்ற குறிப்பு பாரதக்கதை இந்நூலில் இடம்பெற்றுள்ள நிலையை உணர்த்தும்.

நல்லியக்கோடானின் அருங்குணங்களும் அவற்றை ஏத்துவோரும் பின்வருமாறு சிறப்பிக்கப்படுகின்றனர் :

**செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்**
**இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்,**
**செறிந்துவிளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த,**
**அஞ்சினர்க்கு அளித்தலும் வெஞ்சினம் இன்மையும்**
**ஆண் அணி புகுதலும் அழிபடை தாங்கலும்**
**வாண்மீக் கூற்றத்து வயவர் ஏத்தக்**
**கருதியது முடித்தலும் காமுறப் படுதலும்**
**ஒருவழிப் படாமையும் ஓடியது உணர்தலும்**
**அரியேர் உண்கண் அரிவையர் ஏத்த**
**அறிவுமடம் படுதலும் அறிவுநன் குடைமையும்**
**வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்**
**பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த**

—*சிறுபாணாற்றுப்படை : 207-215*

எனவரும் இப்பகுதியில் இயற்கை வருணனை, உடல் வருணனை, காட்சி வருணனை, சொல்லாட்சி, உவமைத் திறன் ஆகிய அனைத்திலும் நல்லூர் நத்தத்தனார் திறம் மிகுந்தவராகக் காணப்படுகிறார். எனவே, சிறுபாணாற்றுப்படை, 'சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படை' என்று பாராட்டப்படுகின்றது.

# 4. பெரும்பாணாற்றுப்படை

பத்துப்பாட்டில் நான்காவதாக இடம்பெறும் நூல் பெரும்பாணாற்றுப்படை ஆகும். ஆற்றுப்படையின் இலக்கணம் முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசில் பெறுவதற்குரிய பெரும்பாணன் ஒருவனைப் பரிசில் பெற்றவன் ஒருவன் காஞ்சி மாநகரத்தில் செங்கோல் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த தொண்டைமான் இளந்திரையனிடத்து ஆற்றுப்படுத்தியதாக இவ் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் எனும் சங்கப்புலவர் பாடியதாகும்.

பெரும்பாணாற்றுப்படை ஐநூறு அடிகளையுடைய ஆசிரியப்பாவால் அமைந்ததாகும். சிறுபாண், பெரும்பாண் எனும் இருவகையினருள் பெரும்பாணர் ஒருவரை ஆற்றுப்படுத்தியதனால் இப்பாட்டு, பெரும்பாணாற்றுப்படை எனும் பெயர் பெற்றது. மேலும், இப்பாட்டில்,

**இடனுடைப் பேரி யாழ் முறையுளிக் கழிப்பி**

என 462-ஆம் அடி அமைந்துள்ளதனால் இப்பாணர்க்குரியது பேரியாழ் என்று தெரிகிறது. இவ்வகைப் பாணர் பழந்தமிழ்நாட்டில் மதுரையிலும், காவிரிப் பூம்பட்டினத்திலும் இருந்தனர் என்பது.

**பெரும்பாண் காவல் பூண்டென**

—நற்றிணை : 40-3

என்ற பாடல் அடிகளால் தெரியவருகின்றது, மேலும் 63 நாயன்மார்களுள் ஒருவராகிய திருநீலகண்ட யாழ்ப்

பாணரும் பெரும்பாணர் என்ற குறிப்பு திருத்தொண்டர் திருவந்தாதியிலும், பெரியபுராணத்திலும் விளக்கம் பெறுகிறது.

மேலும், அடியார்க்கு நல்லார் "பெரும்பாணர் ஆவார் குழலர், பாணர் முதலிய பெரிய இசைகாரர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் ஈண்டுக் கருதத்தக்கது. 'பாணாறு' என்றும் இப்பெரும்பாணாற்றுப்படை வழங்கப்பெறும் என்று தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையர் அவர்கள் குறிப்பிட்டு, யாழின் வருணனை முதலியன இப்பாடலில் அறியப்படும் செய்திகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந் நூலின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் ஆவார். இவருடைய ஊராகிய கடியலூர் எங்கு இருக்கிறது என்று இதுகாறும் ஆராய்ச்சியால் புலனாகவில்லை. அவருடைய பெயர் உருத்திரங் கண்ணனாரா? அல்லது உருத்திரனாருடைய மகனார் கண்ணனாரா? என அறியப்படவில்லை என்பர் ஆராய்ச்சியாளர். இவர் அந்தணர் மரபினர் எனக் கருதப்படுகிறது. மேலும் இவர் பெரும்பாணாற்றுப்படையில், அந்தணர் வாழும் மனையையும் அந்தணர் மகளிரின் கற்பினையும், அவர்கள் விருந்து புறந்தரும் முறையினையும் விளங்கக் கூறியுள்ளார்.

**கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த**
**வேள்வித் தூணத்து அசைஇ**

—பெரும்பாணாற்றுப்படை : 315 - 316

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இவர் வைணவராய் இருந்திருத்தல் வேண்டும் என்பது,

**இருநிலம் கடந்த திருமறு மார்பின்**

—பெரும்பாணாற்றுப்படை : 29

எனத் திருமாலையும்,

**காந்தள்அம் சிலம்பில் களிறுபடிந் தாங்கு**
**பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்**

—பெரும்பாணாற்றுப்படை : 371 - 372

என்று திருவெஃகா எனும் திருத்தலத்தில் பாம்பணையில் பள்ளிகொண்டு அருளும் பெருமானையும்,

**நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ்**
**நான்முக ஒருவற் பயந்த பல்இதழ்த்**
**தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி**

—பெரும்பாணாற்றுப்படை : 402 - 404

என்று திருமாலின் திருவுந்திக் கமலத்தையும் கூறியிருத்தலால் தெரியவருகிறது. பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாகிய தொண்டைமான் இளந்திரையனும் பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவனாகிய சோழன் கரிகாற் பெருவளத்தானும் இவரை ஆதரித்தனர் என்பது நன்கு புலப்படுகிறது.

இவர் இந்நூலில் பல்வேறு சாதியினர்களுடைய ஒழுக்கங்கள், அவர்கள் குடியிருக்கும் குடியிருப்புப் பகுதிகள், உமணர், எயினர், எயிற்றியர், ஆயர், ஆய்ச்சியர், உழவர் வலைஞர், அந்தண மகளிர் முதலியவர்களுடைய வாழ்வு முறைகளை வகையுறப் புலப்படுத்தியுள்ளார்.

இவர் இயற்றியுள்ள பெரும்பாணாற்றுப்படையின் நயமிக்க சில பகுதிகளை இங்குக் காணலாம்.

கதிரவன் உதயத்தினை இவர்

**அகல்இரு விசும்பில் பாய்இருள் பருகி,**
**பகல்கான்று, எழுதரு பல்கதிர்ப் பகுதி**
**காய்சினம் திருகிய கடுந்திறல் வேனில்**

—பெரும்பாணாற்றுப்படை 1 - 3

என்று குறிப்பிட்டுள்ளார்.

பாணர் நிலையினைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ள பகுதி கொண்டு அவருடைய புலமை நயத்தினைத் தேர்ந்து தெளியலாம்.

**வெந்தெறற் கனலியொடு மதிவலம் திரிதரும்**

—பெரும்பாணற்றுப்படை : 17

**பழம்பசி கூர்ந்தஎம் இரும்பேர் ஒக்கலொடு**

—பெரும்பாணாற்றுப்படை : 25

பரிசு பெற்றவன நிலையை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

**வழங்கத் தவாஅப் பெருவளன் எய்தி,**
**வால்உளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்டு,**
**யாம் அவணின்றும் வருதும்.**

—பெரும்பாணாற்றுபபடை : 26 - 28

அடுத்து, பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையனைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**இருநிலம் கடத்த திருமறு மார்பின்**
**முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்**
**திரைதரு மரபின், உரவோன் உம்பல்,**
**மலர்தலை உலகத்து மன்உயிர் காக்கும்**
**முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்,**
**இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்**
**வலம்புரி அன்ன, வசைநீங்கு சிறப்பின்,**
**அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்,**
**பல்வேல் திரையற் படர்குவிர் ஆயின்—**
**கேள்அவன் நிலையே; கெடுகநின் அவலம்!**

—பெரும்பாணாற்றுப்படை : 29 - 38

தொண்டைமான் இளந்திரையனின் அரசாட்சிச் சிறப்பினைப் பின்வரும் பாடற்பகுதி கொண்டு புலவர் புலப்படுத்தியுள்ளமையைக் காணலாம்.

**அத்தம் செல்வோர் அலறத் தாக்கி**
**கைப்பொருள் வெளவும் களவுஏர் வாழ்க்கைக்**
**கொடியோர் இன்றுஅவன் கடியுடை வியன்புலம்;**
**உருமும் உரறாது; அரவும் தப்பா;**
**காட்டு மாவும் உறுகண் செய்யா**
**வேட்டு, ஆங்கு, அசைவுழி அசைஇ, நசைவுழித் தங்கி,**
**சென்மோ, இரவல! சிறக்கநின் உள்ளம்!**

—பெரும்பாணாற்றுப்படை : 39 - 45

இரவலன் பெறும் உணவு வருமாறு:

**நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்**
**பார்வை யாத்த பறைதாள் விளவின்**
**நீழல் முன்றில், நிலஉரல் பெய்து,**
**குறுங்காழ் உலக்கை ஓச்சி, நெடுங்கிணற்று**
**வல்ஊற்று உவரி தோண்டி, தொல்லை**
**முரவுவாய்க் குழிசி முரிஅடுப்பு ஏற்றி,**
**வாராது அட்ட, வாடுஊன், புழுக்கல்—**
**வாடாத் தும்பை வயவர் பெருமகன்,**
**ஓடாத் தானை, ஒண்தொழிற் கழற்கால்,**
**செவ்வரை நாடன், சென்னியம் எனினே—**
**தெய்வ மடையின் தேக்கிலைக் குவைஇ, நும்**
**பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவிர்!!**

—பெரும்பாணாற்றுப்படை 94 - 105

மறமிக்க எயினர் வாழ்க்கை பின்வரும் பகுதியால் விளக்கப்படுகின்றது.

**யானை தாக்கினும், அரவுமேல் செலினும்
நீல்நிற விசும்பின் வல்ஏறு சிலைப்பினும்,
சூல்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை**

—பெரும்பாணாற்றுப்படை : 134 -139

மறக்குடி பிறந்த மைந்தனின் மறச்செயல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**வலிக்கூட்டு உணவின் வாட்குடிப் பிறந்த,
புலிப்போத்து அன்ன, புல்அணற் காளை,
செல்நாய் அன்ன கருவில் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு,
நாள்ஆ தந்து நறவு நொடை தொலைச்சி,
இல்அடு கள்இன் தோப்பி பருகி,
மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி,
மடிவாய்த் தண்ணுமை நடுவண் சிலைப்பச்
சிலைநவில் எறுழ்த் தோள்ஓச்சி, வலன் வளையூஉ,
பகல்மகிழ் தூங்கும் தூங்கா இருக்கை
முரண்தலை கழிந்த பின்றை...**

—பெரும்பாணாற்றுபேடை : 137 - 147

துணங்கை கூத்து பின்வருமாறு இடம் பெற்றுள்ளது.

**புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்
அவல்எறி உலக்கைப் பாடுவிறந்து, அயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்,
நீங்கா யாணர், வாங்குகதிர்க் கழனி
கடுப்புடைப் பறவைச் சாதி அன்ன,
பைதுஅற விளைந்த பெருஞ் செந்நெல்லின்
நூம்புடைத் திரள்தாள் துமித்த வினைஞர்
பாம்புஉறை மருதின் ஓங்குசினை நீழல்,
பலிபெறு வியன்களம் மலிய ஏற்றி,**

**கணம்கொள் சுற்றமொடு கைபுணர்ந்து ஆடும்**
**துணங்கை அம்பூதம் துகில் உடுத்தவை போல்,**
**சிலம்பி வால்நூல் வலந்த மருங்கின்**
**குழுமுநிலைப் போரின் முழுமுதல் தொலைச்சி,**
**பகடுஊர்பு இழிந்த பின்றை, துகள் தப,**

—பெரும்பாணாற்றுப்படை **225 -238**

அந்தணர் அருங்கடன் இறுக்கும் செயல் பின்வருமாறு பேசப்படுவதைக் காணலாம்.

**வண்டல் ஆயமொடு உண்துறைத் தலைஇ**
**புனல்ஆடு மகளிர் இட்ட பொலங்குழை**
**இரைதேர் மணிச்சிரல் இரைசெத்து எறிந்தென**
**புள்ஆர் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது**
**கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த**
**வேள்வித் தூணத்து அசைஇ. யவனர்**
**ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட**
**வைகுறு மீனின், பைபயத் தோன்றும்.**

—பெரும்பாணாற்றுப்படை : **311-318**

தொண்டைமான் இளந்திரையனின் சிறப்பு :

**கச்சியோனே, கைவண் தோன்றல்,**
**நச்சிச் சென்றோர்க்கு ஏமம் ஆகிய—**
**அளியும் தெறலும் எளியஆகலின்.**
**மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட,**
**நயந்தோர் தேஎம் நன்பொன் பூப்ப,**
**நட்புக் கொளல் வேண்டி, நயந்திசினோரும்,**
**துப்புக் கொளல் வேண்டிய துணையிலோரும்,**
**கல்வீழ் அருவி கடற்படர்ந்தாங்கு,**
**பல்வேறு வகையின் பணிந்த மன்னர்—**
**இமையவர் உறையும் சிமையச் செவ்வரை,**
**வெண்திரை கிழித்த, விளங்குசுடர் நெடுங்கோட்டுப்**
**பொன்கொழித்து இழிதரும், போக்குஅருங் கங்கைப்**

பெருநீர் போகும் இரியல் மாக்கள்
ஒருமரப் பாணியில் தூங்கியாங்கு—
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇ
செவ்வி பார்க்கும் செழுநகர் முற்றத்து
பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்கும்
கருங்கைக் கொல்லன் இரும்புவிசைத்து எறிந்த
கூடத்திண் இசை வெரீஇ, மாடத்து
இறைஉறை புறவின் செங்காற் சேவல்,
இன்துயில் இரியும் பொன்துஞ்சு வியல்நகர்—
குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு,
முறைவேண்டுநர்க்கும், குறைவேண்டுநர்க்கும்,
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி,
இடைத்தெரிந்து உணரும் இருள்தீர் காட்சி,
கொடைக் கடன்இறுத்த கூம்பா உள்ளத்து,
உரும்புஇல் சுற்றமோடு—இருந்தோற் குறுகி,
'பொறிவரிப் புகர்முகம் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்கு'
புலவர் பூண்கடன் ஆற்றி, பகைவர்
கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றி அல்லது, வினைஉடம் படினும்,
ஒன்றல் செல்லா உரவுவாட் தடக்கை,
கொண்டி உண்டி, தொண்டையோர் மருக!
மள்ளர் மள்ள! மறவர் மறவ!
செல்வர் செல்வ! செருமேம் படுந!''

—பெரும்பாணாற்றுப்படை : 420 - 456

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பெரும்பாணாற்றுப்படையின் இலக்கிய நயமான பகுதிகள் விரிந்து பரந்து விளங்குகின்றன.

# 5. முல்லைப் பாட்டு

பத்துப்பாட்டு நூலுள் ஐந்தாவதாக அமைந்திருக்கும் பாட்டு முல்லைப்பாட்டாகும். பத்துப்பாட்டு நூலுள் அடியளவாற் குறைந்த பாட்டு இதுவாகும். 103 ஆசிரியப்பா அடிகளால் ஆன நூல் இது. பத்துப் பாட்டிற்கு உரைகண்ட நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர், ''இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை'' என்று முல்லையொழுக்கத்திற்குப் பொருள் காண்பார். முல்லை நில ஒழுக்கமாகிய இருத்தலும் இருத்தல் நிமித்தமும் இப்பாட்டுள் நன்கு சிறப்பிக்கப்படுவதால் இப்பாட்டு 'முல்லை பாட்டு' என்னும் பெயர் பெற்றது.

இப்பாட்டின் பொருளமைதி பின்வருமாறு : மாற்று நாட்டு மன்னன்மேற் படையெடுத்துச் சென்ற மன்னனொருவன் தன் துணைவியைவிட்டுப் பிரிந்து செல்லுங் காலையில் மாரிக்காலத்தே தான் வினைமுடித்து உறுதியாகத் திரும்பி வந்துவிடுவதாகக் கூறிச்செல்கிறான். கார் காலம் தொடங்கிவிட்டது. சொன்னவண்ணம் தலைவன் திரும்பிவரவில்லை. எனவே, தலைவி துயருறுகின்றாள். அவளுற்ற துயரைக் கண்ட முதுபெண்டிர் மரக்காலில் முல்லைப்பூவினையும் நெல்லையும் எடுத்துக்கொண்டு ஊரின் புறம்பே அமைந்திருக்கும் திருமால் கோயிலிற்குச் சென்று, நெல்லையும் மலரையும் தூவித் தலைவன் விரை

வில் திரும்பி வந்து தலைவியின் துயர் தீர்க்க வேண்டும் என்று தெய்வ அருள் வேண்டி நிற்கின்றனர். அதுபோது ஒரு நற்சொல் அவர்கள் செவியில் கேட்கின்றது. பாலுண்ணாமையும் தம் தாயாரைப்பிரிந்திருக்கும் துயரும் சேர்ந்து வருத்தம் மேலிடும் பசுங்கன்றுகளின் துன்பநிலையினைக் கண்ட ஆயர்குலப் பெண்ணொருத்தி அப்பசுங்கன்றினைப் பார்த்து ''உங்கள் தாய்ப்பசுக்கள் விரைவில் திரும்பி வந்துவிடுவர். நீங்கள் உங்கள் துயரத்தைக் களைவீர்களாக'' என்று ஆறுதல் சொல்லிக்கொண்டிருக்கும் நற்சொல்லினைக் கேட்டனர். அச் சொற்களைத் தெய்வச் சொற்களாக ஏற்ற முதுபெண்டிர் தலைவியிடம் வந்து இச் செய்தியினைக் கூறி 'விரைவில் தலைவன் வந்துவிடுவான்; எனவே, கலையொழிந்திருக்க' என்று தேற்றுகின்றார்.

**அருங்கடி மூதூர் மருங்கிற் போகி**
**யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு**
**நாழி கொண்ட நறுவீ முல்லை**
**அரும்பவிழ் அலரி தூஉய்க்கை தொழுது**
**பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்**
**சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்**
**உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்**
**நடுங்குசுவல் அசைத்த கையள், 'கைய**
**கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தர**
**இன்னே வருகுவர் தாயர்' என்போள்**
**நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்**
**நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்**
**முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து**
**வருதல் தலைவர் வாய்வது நீநின்**
**பருவரல் எவ்வம் களைமா யோய்.**

—முல்லைப் பாட்டு : 7 - 21

இத் தேறுதல் மொழியினைக் கேட்டும், பின் உளதாம் இல்வாழ்க்கைப் பயனை நினைந்தும் தலைவி ஆற்றியிருந்

தான். போர்மேற்சென்ற அரசன் பகைவருடைய நகரத்திற்குப் பாதுகாப்பாக இருந்த காடுகளை வெட்டி, வேட்டுவர் குடிசைகளை அழித்து, முட்களை மதிலாக வளைத்துக் கடல் போன்று அகன்ற பெரியதொரு பாடிவீட்டினை அமைத்தான். அந்தப் பாடி வீட்டில் கூடாரங்கள் பல அமைக்கப்பட்டன. அக் கூடாரங்களின் நடுவே அரசனுக்கென்று தனிக் கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அரசன் தன்னுடைய கூடாரத்தில் இடையில் அமைக்கப்பட்டிருந்த படுக்கையில் படுத்துக்கொண்டிருக்கிறான். பெண்கள் விளக்கில் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இடையில் ஒளிவீசும் வாளினைக் கட்டியிருக்கிறார்கள். மெய்க்காப்பாளர்கள் தலைப்பாகை முடித்து ஓங்கிய நடையுடன் உலா வருகிறார்கள். யவனர்கள் புலித்தொடரிட்ட சங்கிலி பிணைத்து அவர்கள் காவலாக நிற்கின்றனர். அவர்கள் குதிரைச் சவுக்கு வைத்திருக்கிறார்கள். ஊமையர்களான மிலேச்சர்கள் மன்னன் கூடாரத்தைக் காவல்காத்து நிற்கின்றனர். அரசனோ முதல் நாள் நடந்த போரினையும், அப்போரில் யானைகளின் துதிக்கைகள் பாம்புகள் வெட்டப்பட்டு வீழ்ந்து கிடப்பன போல் துமிந்து கிடக்கும் காட்சியினையும், வீரர்கள் புண்பட்டு நின்ற நிலையினையும் எண்ணித் தன் தலையைத் தன் கையொன்றில் ஊன்றி, மறுநாள் நடக்கவேண்டிய போரில் தான்மேற்கொள்ளவேண்டிய போர் முறைகளைப் பற்றிச் சிந்தித்துக் கிடக்கிறான்.

**மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது**
**எடுத்தெறி எஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து**
**பிடிக்கணம் மறந்தவேழம் வேழத்துப்**
**பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்**
**தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்**
**சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் தோல்துமிபு**
**வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து**
**உண்ணாது உயங்கும் மாசிந் தித்தும்**

**ஒருகை பள்ளி யொற்றி ஒருகை**
**முடியொடு கடகம் சேர்த்தி நெடிதுநினைந்து**
**பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்**
**நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி**
**அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை**
**இன் துயில் வதியுநற் காணாள் துயருழந்து**
**நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு**

—முல்லைப் பாட்டு : 67 - 81

தலைவியின் துன்ப நிலையோ சொல்லுந் தரத்ததன்று, தலைவன் பிரிவால் அவள் உடல் இளைத்துவிட்டது. கைகளில் அணிந்திருந்த வளையல்கள் கழன்றுவிட்டன. மழை சோவெனப் பெய்துகொண்டிருக்கிறது. அவள் பக்கத்தில் யவனர்கள் தந்த பாவை விளக்கு அமைதியாக எரிந்து கொண்டிருக்கிறது. தலைவன் வினைமுடித்து விரைவில் திரும்பி வந்துவிடுவான் என்ற நம்பிக்கையோடு இருக்கும் போது தலைவனின் தேரிற் பூட்டப்பட்ட குதிரைகளின் குளம்படி ஓசை தலைவியின் செவிகளில் விழுகின்றன. இந்த அளவில் முல்லைப்பாட்டு முடிகின்றது.

முல்லைப்பாட்டின் ஆசிரியர் மதுரைப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆவார். பாட்டின் தொடக்கத்திலேயே கடலிலிருந்து புறப்பட்டு நீரை முகந்து சென்று மலையிலே தங்கி வானத்தில் தோன்றி மழைபெய்யும் மேகத்தைத் திருமாலின் நிறத்திற்கு ஒப்பிடுகின்றார். மாபலிச்சக்ரவர்த்தி வாமனனாக வந்த திருமாலின் கையில் அர்க்கிய நீரை வார்த்த அளவில் உயர்ந்து வளர்ந்த திருமாலைப் போன்ற மேகம் என்று மேலும் ஒப்புமையை விரிக்கின்றார்.

**நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்**

பாடிமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை

*—முல்லைப் பாட்டு: 1-6*

மேலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ் மன்னர்களின் வாயிற் காப்பாளராய் யவனரும் மிலேச்சரும் விளங்கிய செய்தி பேசப்படுகின்றது. அந்தப்புரத்தில் அரசர்கள் அந்நிய நாட்டு ஊமையர்களை ஊழியர்களாக நியமித்த செய்தி கூறப்படுகிறது. இதனால் அரசன் உறக்கமும் கெடாது; அந்தப்புர இரகசியங்களும் வெளியே போகா. இவை பழந்தமிழ் நாட்டின் சிறப்பினை நுவலும். முல்லைப்பாட்டில் முல்லைத் திணைக்குப் புறனான வஞ்சி வெறுக்கமும் மிகச் சிறப்பாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது

# 6. மதுரைக் காஞ்சி

பத்துப் பாட்டில் ஆறாவதாக அமைந்திருக்கும் இப் பாட்டு தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு பெறும் நிமித்தம் பல்வகை நிலையாமையை அறிவுறுத்துதற்கு மாங்குடி மருதனார் எனும் சங்கச் சான்றோர் பாடியதாகும். இப் பாட்டு 782 அடிகளை உடையது. பெரும்பாலும் ஆசிரியப்பாவிலும், முதலிலும் இடையே சிலசிலவிடத்தும் வஞ்சிப்பா அடிகளும் வந்த சிறப்பை உடையது. 'மதுரைக் காஞ்சி' என்ற தொடருக்கு மதுரை மாநகரிடத்து அரசுக்குரிய காஞ்சி எனப் பொருள் விரிப்பர். 'காஞ்சி' என்ற சொல்லுக்கு நிலையாமை என்று பொருள். எனவே, காஞ்சித் திணை என்பது வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையினைச் சான்றோர் கூறும் சிறப்பினதாகும்.

இப் பாட்டின்கண்

**கொன்ஒன்று கிளக்குவல், அடுபோர் அண்ணல்!**
**கேட்டிசின் வாழி! கெடுக நின் அவலம்!''**

—மதுரைக் காஞ்சி : 207-208

எனும் தொடரில் வீடுபேறாகிய நிமித்தம் குறிப்பிடப் பட்டுள்ளது என்றும்,

திரை இடு மணலினும் பலரே, உரை செல
மலர்தலை உலகம் ஆண்டு, கழிந்தோரே!

—மதுரைக் காஞ்சி : 236-237

எனும் தொடர்களால் பல்வேறு நிலையாமைப் பண்பினையும் ஆசிரியர் மாங்குடி மருதனார் அறிவுறுத்தியுள்ளதாகக் குறிப்பிடுவர். இவரை மாங்குடி கிழார் என்றும் சொல்லுவதும் உண்டு. இந் நூல் 'பெருகுவள மதுரைக் காஞ்சி' என்று வழங்கப்படுவது கொண்டு இந் நூலின் பெருமையினை உணரலாம். இந்நூல் பெரும்பான்மையும் வஞ்சி அடிகளால் அமைந்துள்ளதால், இப் பாட்டினை வஞ்சிப்பாவின் கலை அறுதற்கு எல்லையாக நச்சினார்க்கினியர் காட்டியுள்ளார். கிழார் எனும் மரபுப் பெயரால் இவர் வேளாண்குடியில் பிறந்தவர் என்பது விளங்கும். இவர், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுசெழியனது அவைக்களத்துத் தலைமைப் புலவராக வீற்றிருந்தார் என்பதும், பாண்டியன் நெடுஞ்செழியன் இவர் மாட்டு மதிப்பு வைத்திருந்தார் என்பதும்,

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்,
புலவர் பாடாது வரைகவென் னிலவரை''

—புறநானூறு : 72

என்ற புறப்பாடற் பகுதியால் விளங்கும். இப் புலவர் பாடிய மதுரைக்காஞ்சியின் பெருஞ்சிறப்பை அறிந்த புலவர் பலரும் ''காஞ்சிப்புலவன், மதுரைக்காஞ்சிப் புலவன்'' எனும் பெயர்களால் வழங்கிவந்தனர் எனத் தெரிகிறது என்பர் டாக்டர் உ. வே. சாமிநாதையர்,

இப்புலவர் சிவபெருமான்பால் சிறத்த அன்புடையவர் என்பது,

**மழுவாள் நெடியோன் தலைவன் ஆக,**
**மாசுஅற விளங்கிய யாக்கையர், சூழ்சுடர்**
**வாடாப் பூவின், இமையா நாட்டத்து**
**நாற்ற உணவின், உருகெழு பெரியோர்க்கு''**

—*மதுரைக் காஞ்சி : 455-458*

என்று குறிப்பிடுவதால் அறியலாம்.

மேலும் இவர்,

**தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்**
**தொல்முது கடவுட் பின்னர் மேய**

—*மதுரைக் காஞ்சி : 40-41*

என இவர் இயற்றியுள்ள அடிக்கு நாச்சினார்க்கினியர் உரை எழுதும்பொழுது, 'கூற்றுவனை யுதைத்த கடவுளென்று இறைவனாக்கி' என்று குறிப்பிட்டிருப்பதனால் இக்கருத்து மேலும் விளக்கமுறுகின்றது. மாங்குடி மருதனார் பாடியனவாக மதுரைக்காஞ்சி ஒன்றும் நற்றிணையில் இரண்டு பாடல்களும் குறுந்தொகையில் மூன்று பாடல்களும் அகநானூற்றில் ஒரு பாடலும் புறநானூற்றில் ஆறு பாடல்களும் திருவள்ளுவமாலையில் ஒரு பாடலும் காணப்படுகின்றன. இனி இவர் பாடியுள்ள மதுரைக் காஞ்சியின் மாண்பினைப் படிப்படியே காண்போம்.

இந்நூலின் முதலில் நெடுஞ்செழியன் மரபுச் சிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அடுத்து அவன்தன் முன்னோரின் சிறப்பு முப்பது அடிகளால் முறையே நுவலப்பட்டிருக்கின்றது. இதனையும் அடுத்து, மன்னனின் போர்த் திறம் புலப்படுத்தப்பட்டுள்ளது.

**இன்இசைய முரசம் முழங்க,**
**பொன்மலிந்த விழுப்பண்டம்**
**நாடுஆர நன்கு இழிதரும்,**
**ஆடுஇயற் பெரு நாவாய்,**

மழைமுற்றிய மலை புரையத்
துறைமுற்றிய துளங்கு இருக்கை,
தென்கடல் குண்டு அகழி,
சீர்சான்ற உயர் நெல்லின்
ஊர்கொண்ட உயர் கொற்றவ!
நீர்த்தெவ்வும் நிரைத் தொழுவர்
பாடுசிலம்பும் இசை, ஏற்றத்
தோடுவழங்கும் அகல் ஆம்பியின்,
கயன் அகைய வயல்நிறைக்கும்
மென்தொடை வன்கிழாஅர்,
அதரி கொள்பவர் பகடுபூண் தெள் மணி,
இரும்புள் ஓப்பும் இசையே — என்றும்,
மணிப்பூ முண்டகத்து மணல்மலி கானல்
பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப,
ஒருசார், விழவுநின்ற வியல் ஆங்கண்—
முழவுத் தோள் முரண்பொருநர்க்கு,
உருகெழு பெருஞ்சிறப்பின்
இருபெயர்ப் பேர்ஆயமொடு
இலங்கு மருப்பின் களிறு கொடுத்தும்,
பொலந் தாமரைப் பூச்சூட்டியும்,
நலம்சான்ற கலம்சிதறும்
பல்குட்டுவர் வெல்கோவே!

—மதுரைக் காஞ்சி : 80-105

தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாஎல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்து ஒழுகிய
கொற்றவர்தம் கோன் ஆகுவை!

—மதுரைக் காஞ்சி : 70 - 74

எனும் அடிகளால் பாண்டிய மன்னனின் வெற்றிச் சிறப்பு விளங்க உரைக்கப்படுகின்றது.

''தென் பரதவர் போர் ஏறே!''

என்ற அடி நினைத்தற்குரியது. செழியனுடைய கருணையுள்ளம் முப்பது அடிகளில் 126 - 151 உணர்த்தப்பட்டுள்ளது. மேலும் அவனுடைய வெற்றிச் சிறப்பால் பகைவர் நாடுகள் பாழ்பட்ட நிலையினைப் பாடல் அடிகள் 152 முதல் 181 வரை விளக்கமாக விளம்பியுள்ளார். மருதவளக் காட்சிகள் மாண்புற விளக்கப்பட்டுள்ளன. நிலையாமைக் கருத்து,

''பணிந்தோர் தேஎம் தம்வழி நடப்ப,
பணியார் தேஎம் பணித்துத் திறை கொண்மார்
பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறைப்
படுகண் முரசம் காலை இயம்ப
வெடிபடக் கடந்து, வேண்டு புலத்து இறுத்த
பணைகெழு பெருந் திறல், பல்வேல் மன்னர்
கரைபொருது இரங்கும், கனை இரு முந்நீர்த்
திரைஇடு மணலினும் பலரே, உரை செல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே!''

—மதுரைக் காஞ்சி : 229 - 237

என்ற அடிகளில் இடம்பெற்றுள்ளது. மருத வளத்தோடு முல்லை வளமும் குறிஞ்சி வளமும் பாலை நிலையும், நெய்தல் வளமும் சிறப்பாக இந் நூலில் புலப்படுத்தப்பட்டுள்ளன. அடுத்து, மதுரை மாநகர அமைப்பு, அந்நகரில் ஏற்றப்பட்டு உள்ள பல்வகைக் கொடிகள், நால்வகைப் படைகள், நாளங்காடி, விழாக் காட்சிகள், செல்வர் செயல்கள், முன்னிரவு நிகழ்ச்சிகள், இரண்டாம், மூன்றாம் சாம நிகழ்ச்சிகள், விடியல் நிகழ்ச்சிகள் முதலியன மிகச் சிறப்பாக இந்நூலுள் வருணிக்கப்பட்டுள்ளன.

''யாறு கிடந்தன்ன அகன் நெடுந் தெருவில்''

—மதுரைக் காஞ்சி : 359

என மதுரை மாநகர வீதியின் அழகு விளம்பப்பட்டுள்ளது.

மேலும்,

அந்தி விழவில் தூரியம் கறங்க
திண்கதிர் மதாணி, ஒண்குறு மாக்களை,
ஓம்பினர்த் தழீஇ, தாம்புணர்ந்து முயங்கி,
தாதுஅணி தாமரைப் போது பிடித்தாங்கு,
தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்
காமர் கவினிய பேர்இளம் பெண்டிர்
பூவினர், புகையினர், தொழுவனர், பழிச்சிச்
சிறந்துபுறங் காக்கும் கடவுட் பள்ளியும்—
சிறந்த வேதம் விளங்கப் பாடி,
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து,
நிலம்அமர் வையத்து ஒருதாம் ஆகி,
உயர்நிலை உலகம் இவண்நின்று எய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்
பெரியோர் மேஎய், இனிதின் உறையும்
குன்றுகுயின் றன்ன அந்தணர் பள்ளியும்—''

—மதுரைக் காஞ்சி : 460 - 474

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாட்டின் இனிய இறுதிப் பகுதி நெடுஞ்செழியனைப் பின்வருமாறு வாழ்த்தி முடிகின்றது :

வரையா வாயில் செறாஅது இருந்து,
பாணர் வருக! பாட்டியர் வருக!
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக! என—
இருங்கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம்
கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி—
களம்தோறும் கள் அரிப்ப
மரம்தோறும் மைவீழ்ப்ப
நிணஊன் சுட்டு உருக்கு அமைய
நெய்கனிந்து வறைஆர்ப்ப
குரூஉக் குய்ப்புகை மழைமங்குலின்
பரந்து தோன்றா, வியல்நகரால்,

**பல்சாலை முதுகுடுமியின்**
**நல்வேள்வித் துறைபோகிய**
**தொல்ஆணை நல்ஆசிரியர்**
**புணர்கூட்டு உண்ட புகழ்சால் சிறப்பின்**
**நிலம்தரு திருவின் நெடியோன் போல,**
**வியப்பும், சால்பும், செம்மை சான்றோர்**
**பலர்வாய்ப் புகர்அறு சிறப்பின் தோன்றி,**
**அரியதந்து குடிஅகற்றி,**
**பெரியகற்று இசைவிளக்கி,**
**முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்,**
**பல்மீன் நடுவண் திங்கள் போலவும்,**
**பூத்த சுற்றமொடு பொலிந்து இனிதுவிளங்கி,**
**பொய்யா நல்இசை நிறுத்த புனைதார்ப்**
**பெரும்பெயர் மாறன் தலைவ னாக,**
**கடந்துஅடு வாய்வாள் இளம்பல் கோசர்**
**இயல்நெறி மரபின் நின்வாய் மொழி கேட்ப,**
**பொலம்பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த**
**மறம்மிகு சிறப்பின் குறுநில மன்னர்**
**அவரும் பிறரும் துவன்றி**
**பொற்புவிளங்கு புகழ்அவை நிற்புகழ்ந்து ஏத்த**
**இலங்கிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்**
**மகிழ்ந்துஇனிது உறைமதி! பெரும**
**வரைந்துநீ பெற்ற நல்லூழியையே!**

—மதுரைக் காஞ்சி : 748 - 782

*இவ்வாறு, மதுரைக் காஞ்சி மதுரை மாநகரின் மாண்பினையும், நிலையாமையின் வகையினையும் வகையுறப் புலப்படுத்தி நிற்கின்றது எனலாம்.*

# 7. நெடுநல்வாடை

188 அடிகளால் நக்கீரர் பாடிய பாட்டு இது. இப்பாட்டு அமைப்பில் முல்லைப்பாட்டுப் போல அமைதிருக்கிறது எனலாம். போர்மேற்கொண்ட தலைவனைப்பிரிந்து துயருறும் தலைவியின் நிலை, போர்மேற்கொண்டு தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவன் பாசறையின்கண் வருந்தும் காட்சி - ஆகிய இருவேறு காட்சிகளை இணைத்து நிற்பதாக இலங்குவது நெடுநல்வாடையாகும். போர் முடிந்து தலைவன் விரைவில் திரும்பவேண்டும் என்று வெற்றிக் கடவுளாம் கொற்றவையைப் பரவும் நிகழ்ச்சி மேற்காணும் இரண்டு நிலைகளையும் ஒன்றாக இணைக்கின்றது. இப்பாட்டு, புலவர் ஒருவரின் கூற்றாக அமையாமல் பெண்ணொருத்தியின் கூற்றாக அமைந்திருக்கக் காணலாம்.

வாடைக்காற்று கொண்டுவரும் பெருமழையுடன் நெடுநல்வாடை தொடங்குகின்றது. சீறிச் சீறி அடிக்கும் வாடைக்காற்று எவ்வாறு நாடு நகரங்களையும் அங்கு வாழும் மக்களையும் வாட்டிவருத்துக்கின்றது என்று விரிவாகக் காட்டி நிற்கிறது. உயிரினங்களை நலிந்து மெலியச் செய்யும் வாடைக்காற்று, ஏற்கெனவே தலைவன் பிரிவால் மெலிவுற்றிருக்கும் தலைவியை மேலும் மெலியச் செய்கிறது. அவள் கண்களில் நீர் துளிக்கின்றது. தலைவன் வருமளவும் அவன் சொல்லைத் தேறி ஆற்றியிருத்தல் தன் கடமையெனக் கருதி அவள் தன் விரல் நுனியால் தன் கண்

ணில் துளிர்த்த கண்ணீரைத் தெறிக்கின்றாள். இது தலைவனைப் பிரிந்து அரண்மனையில் வாடிமெலிந்து வாழும் தலைவியின் நிலையாகும்.

பாடி வீடு அமைத்து போர்மேற் கொண்டிருக்கின்ற தலைவனையும் வாடைக்காற்று விட்டபாடில்லை. ஆயினும் கடமையுணர்வு உந்தித்தள்ள நள்ளிரவிலும் உறக்கங்கொள்ளாமல், போரிற் புண்பட்ட தன் வீரர்களைக் காண விழைகிறான். தன்னுடன் வீரர்கள் தீப்பந்தங்களைக் கொளுத்திக் கையிலேந்தி வழிகாட்டிக்கொண்டு வரப் புண்பட்ட யானைகளையும் குதிரைகளையும் வீரர்களையும் கண்டு, அவர்களை அன்போடு தட்டிக்கொடுத்துத் தேற்றுவிக்கின்றான். இந்நிலையில் மேற்கொண்ட வினைமுடித்துத் தலைவன் திருப்பி வரவேண்டும் என்று தலைவியின் சார்பில் பெண்ணொருத்தி கொற்றவையைப் பரவுகின்றாள். நெடுநல்வாடை என்னும் பாட்டின் அமைப்பையும் நோக்குநிலையையும் ஆராயும்பொழுது இப்பாட்டு முழுவதும் ஒரு வழிபாடாகவே அமைந்திருக்கக் காணலாம்.

பாட்டின் தொடக்கத்தில் வாகைத்திணை; முடிவில் வஞ்சித்திணை; முத்தாய்ப்பாகக் கொற்றவை நிலை என்ற போக்கில் இப்பாட்டு அமைந்திருப்பதாக உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கருதுகின்றார். அகப்பொருள் பாலைத்திணை யென்றும், கூதிர்ப்பாசறை என்றும் குறிப்புத் தருகின்றார். இப் பாட்டு முழுவதும் அகப்பொருள் தழுவியதாகவே அமைந்திருக்க, 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்' என்று பாண்டியனின் அடையாளப் பூமாலையாகிய வேப்பமாலை இந் நூலாசிரியர் நக்கீரராற் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவர் இப்பாட்டினைப் புறத்திணையில் அடக்குவர். ஏனெனில் 'சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாதது அகத்திணையன்றோ! ஆயினும் அறிஞர் பலர் இன்று நெடுநல்வாடையினை அகப்பாட்டாகவே கருதுகின்றனர்.

நெடுநல்வாடையிற் குறிக்கப் பெறும் பாட்டுடைத் தலைவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பர்.

நக்கீரரின் வருணனைத் திறம் இப்பாட்டு முழுவதும் புலப்படுகின்றது. பாட்டின் தொடக்கமே ஒரு சொல்லோவியமாக அமைந்திருக்கக் காணலாம். பாட்டின் தொடக்கமே நெஞ்சைப் பிணிக்கும் வகையிலே அமைந்துள்ளது. சிறிய கொடியினையுடைய முசுண்டைக் கொடியின் வெண்மையான பூக்கள், பொன்னிறத்ததான பீர்க்கம் பூக்களுடன் ஒவ்வொரு புதரிலும் விரிந்து மலர்ந்திருக்கின்றன. பசியகால்களையும் மெல்லிய சிறகுகளையும் உடைய கொக்குக் கூட்டமும் நாரைகளும் மழை சிறிது விட்ட அளவிலே வெளிப்பட்டுக் கயல்மீன்களைப் பிடித்துத் தின்கின்றன. தெருக்களிலே மனித நடமாட்டமே இல்லை. முறுக்கேறிய உடல் வலிமைபெற்ற சிலர்மட்டும் கள் அருந்திவிட்டு, வீசும் தூற்றலையும் பொருட்படுத்தாமல் இங்கும் அங்குமாகத் திரிந்துகொண் டிருக்கிறார்கள். வண்டுகள் மொய்த்துக் கிடக்கும் கள்ளைக் குடித்துவிட்டுக் களிகொண்டிருக்கிறார்கள் அவர்கள். குளிரினால் உடலை மூடிக்கொள்ள வேண்டியிருக்க, தங்கள் உடல்மேற் சூழ்ந்துள்ள ஆடைகளை முன்னும் பின்னுமாகத் தொங்கவிட்டிருக்கிறார்கள். பகலா இரவா என்று அறியமுடியாத அம்மழைக்காலத்தில் பிச்சி அரும்புகள் மலர்ந்து மணம் பரப்புதலால் அஃது அந்திக்காலம்தான் எனத் தெளிந்து, மகளிர் தங்கள் வீடுகளில் விளக்கேற்றி வைத்து, நெல்லையும் மலரையும் தூவி, இல்லுறை தெய்வத்தை வணங்குகிறார்கள். அவ்வீடுகளிலே உள்ள புறாக்கள், வெளியே பறந்துசென்று உணவைத் தேட முடியாமல் ஒரே இடத்தில் இருந்துகொண்டு காலை மாற்றி மாற்றி வைத்துப் பொழுதைப் போக்குகின்றன. எடுப்பாரின்றிக்கிடக்கும் சந்தனக்கல்லும் சிலந்திவலைப் பின்னிக் கிடக்கும் விசிறியும், குடிப்பாரின்மையால் பயனற்றுக்கிடக்கும் குவிந்த வாயையுடைய மட்

குடங்களும் எதிர்காலத்தின் கொடுமையை விளக்கி நிற்கின்றன.

இனி அந்தப்புரத்துக் காட்சியைக் காணலாம். அரண்மனையின் அந்தப்புரக்கட்டடங்கள் மலைகள்போல் உயர்ந்து தோன்றுகின்றன. அந்தப்புரத்தின் மேல் பல வண்ணக்கொடிகள் பறக்கின்றன. யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட கால்களையுடைய கட்டிலின்மேல் தலைவனின் பிரிவுத் துன்பத்தால் வாடி மெலிந்த தலைவி, ஒளியிழந்த முகத்துடன் காணப்படுகின்றாள். மார்பிலே மங்கலநாண் ஒன்று மட்டுமே காணப்படுகின்றது. அழகிய முன்நெற்றியில் சில தலைமயிர்க்கற்றைகள் ஒழுங்கு செய்யப்படாமல் உலறிக்கிடக்கின்றன. மகரக் குழைகள் காதுகளிலிருந்து கழற்றிவைக்கப்பட்டிருப்பதால் காதுகள் சிறிதே தாழ்ந்துள்ளன. பொன்வளைகள் ஒலித்த முன்கைகளில் இப்போது சங்கு வளையல்கள் காணப்படுகின்றன. ஒரே ஒரு விரலில் மட்டும் மோதிரம் ஒன்று காணப்படுகின்றது. உயர்ந்த பூந்துகிலை இயல்பாக உடுத்தியிருந்த தலைவியின் உடலில் இப்போது நூற்புடவையே காணப்படுகின்றது. இத் தோற்றத்தில் அவள் வண்ணங்களைக் கொண்டெழுதாத 'புனையா ஓவிய'மாகக் காட்சி தருகிறாள்.

பாசறையில் அரசன் கடமையே கண்ணாக இருக்கிறான். தீப்பந்த வெளிச்சத்தில் சென்று புண்பட்ட வீரர்களுக்கு ஆறுதல் சொல்கிறான். அப்போது மழைபெய்ய, மழைத்துளிகள் மன்னனின்மேல் தெறிக்கின்றன. அரசன் தோளிலே அணிசெய்யும் அழகிய துகில் வாடைக்காற்றால் நழுவுகின்றது. அதனை இடப்பக்கத்தில் அணைத்துப் பிடித்துக்கொள்கிறான். நள்ளிரவிலும் உறக்கங் கொள்ளாமல் அரசன் பாடிவீட்டில் பவனி வருகிறான்.

**வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு**
**முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்.**

**மணிபுறத்து இட்ட மாத்தாள் பிடியொடு
பருமம் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
புடைவீழ் அம்துகில் இடவயின் தழீஇ
வாள்தோள் கோத்த வன்கண் காளை
சுவல்மிசை அமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென்று அசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடும் திரிதரும் வேந்தன்.**

—நெடுநல்வாடை : *176 - 187*

தலைவியோடு வதியும் பணிப்பெண் ஒருத்தி கொற்றவையைப் பரவி, அரசன் விரைவில் வினைமுடித்து வெற்றி பெற்று திரும்பிவரவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறாள். இதுவே நெடுநல்வாடை,

தலைவனைப் பிரிந்த தலைவிக்கு நெடுவாடையாகவும் அப் பாசறையிற் கண்ணாக இருக்கும் தலைவனுக்கு நல்வாடையாகவும் அமைகிறது. எனவே, பாட்டின் பெயரும் பொருத்தமுற 'நெடுநல்வாடை' ஆயிற்று.

# 8. குறிஞ்சிப் பாட்டு

261 அடிகளை உடைய ஆசிரியப் பாவால் அமைந்துள்ள குறிஞ்சிப்பாட்டு பத்துப்பாட்டுள் எட்டாவது பாட்டாக அமைந்துள்ளது. 'காப்புக் கைம்மிக்குக் காமம் பெருகித் தலைவன் வரும் வழியிலுள்ள ஊறஞ்சும் காலத்துத் தலைவி பாங்கிக்கு அறத்தொடு நின்றாளாக, பாங்கி எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத்தல், ஏதீடு, தலைப்பாடு, உண்மை செப்பும் கிளவியென்னும் ஆறும் கூறிச் செவிலிக்கு அறத்தொடு நின்றவழிக் கூறும் கூற்றாக ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தற்பொருட்டுக் கபிலர் பாடியது' என்று குறிஞ்சிப்பாட்டின் உள்ளீட்டினை நாம் அறிகின்றோம்.

இப்பாட்டு, 'பெருங்குறிஞ்சி' என்றும் வழங்கப்படும். இக் குறிஞ்சிப்பாட்டில் பிறதிணைகளுக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் மயங்கிவந்தன என்றாலும், இந்நூல் நுவலும் உரிப்பொருட் சிறப்புப் பற்றி இப்பாட்டு குறிஞ்சிப் பாட்டு எனப் பெயர் பெற்றது.

இதனுள் தலைவி பாங்கொடு நிற்றற்குக் காரணமாகிய சிறை காவல், ''காவல் கடுகினும்'' (240) முதலிய அடிகளாலும், தலைவனுக்கு வரும் ஊறஞ்சுதல், ''அளைச் செறி யுழுவையும்'' (252) முதலிய அடிகளாலும் விளங்கும் என்று தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தம்முடைய பத்துப்பாட்டு மூன்றாம் பதிப்பின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டிற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று' என்று குறிஞ்சிப்பாட்டின் அடியில் காணப்படும் குறிப்பினைக் கொண்டு அந்நூலின் தனிச் சிறப்பினை அறியலாம். ஈண்டு தமிழறிவித்தற்கு என்பது தமிழ்ப் பண்பாட்டின் தலையூற்றாகத் திகழும் களவு ஒழுக்கத் நிலையைப் புலப்படுத்தி நிற்கும் பாட்டு என விளக்கமுறுகின்றது. களவுக் காலத்து நிகழ்வனவாக அமையும் பெரும்பான்மையான செய்திகள் இக் குறிஞ்சிப்பாட்டில் முறையே கூறப்பட்டுள்ளன. மேலும், குறிஞ்சிப்பாட்டின் அடியில் தனிப்பாடலாக இரண்டு வெண்பாக்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

**நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடையள்**
**என்குற்றம் யானும் உணர்கலேன் — பொன்குற்று**
**அருவி கொழிக்கு மணிமலை நாடன்**
**தெரியுங்கால் தீய திலன்.**

**ஆற்றல்சால் கேள்வி அறம்பொரு ளின்பத்தைப்**
**போற்றிப் புனைந்த பொருளிற்றே — தேற்ற**
**மறையோர் மணமெட்டி னைந்தா மணத்திற்**
**குறையாக் குறிஞ்சிக் குணம்.**

மேற்காணும் செய்யுட்கள்கொண்டு பழந்தமிழர்களது களவொழுக்கம் குறிஞ்சிப்பாட்டில் குறையறக் குறிக்கப் பட்டுள்ளது என்பதனை அறியலாம்.

குறிஞ்சிப்பாட்டில் தோழி அறத்தொடு நின்ற நிலையும், தலைவி, தலைவன் மாட்டுக் கொண்ட அன்பின் மிகுதியும், களவுமணம் நிகழ்ந்தமையைத் தோழி அறிவித்தலும், தலைவியும் தோழியும் தினைப்புனம் காத்த வகையும், தினைப்புனக் காவலினிடையே ஆய வெள்ளம் சுனையில் நீராடிய சிறப்பும், 99 பூக்களைப் பறித்துப் பாறையில் குவித்த பாங்கும், தழை உடுத்து, மாலை சூடி

அசோகமர நிழலில் இருந்த நிலையும், தலைவனது வருகையும், தலைவனுடன் வந்த நாய்க்குத் தோழி முதலியோர் அஞ்சி வேறிடம் செல்லுதலும், தலைவன் ஆங்கிருந்த மகளிரிடம் கெடுதி வினாவுதலும், தலைவன் தலைவியின் சொல்லை எதிர்பார்த்து நிற்றலும், அது போது யானை அடங்காச் சினத்துடன் தினைப்புனத்திற்கு வர அதுகண்டு மகளிர் நடுங்கிய செயலும், யானையினைத் தலைவன் அம்பு எய்து துரத்தியதும், தலைவியை நீரி லிருந்து காப்பாற்றித் தலைவன் அருளுடையோனான நிலையும், தலைவி தலைவனுடன் கூடி இன்புற்ற நிலையும், இருவரும் பகற்பொழுதைப் போக்கிய வகையும், மாலைக் காலத்தின் வருகையும், அதுகண்டு தலைவன் திரும்பிச் சென்ற நிலையும், தலைவன் வரும் வழியின் அருமை நினைந்து, தலைவி கலங்கியதும், இரவில் தலைலன் வரும் வழியின் அருமையினை நினைத்தலுமாகிய பல்வேறு களவுக் காலத்துச் செயல்கள் குறிஞ்சிப்பாட்டில் நயம்பட எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுதல்**
**ஒலிமென் கூந்தலென் றோழி மேனி**
**விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோய்**
**அகலு ளாங்கண் அறியுநர் வினாயும்**
**பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்**
**வேறுபல் லுருவிற் கடவுட் பேணி**
**நறையும் விரையு மோச்சியும் அலவுற்று**
**எய்யா மையலை நீயும் வருந்துதி**
**நற்கவின் தொலையவும் நறுந்தோள் நெகிழவும்**
**புட்பிறர் அறியவும் புலம்புவந்து அலைப்பவும்**
**உட்கரந் துறையும் உய்யா வரும்படர்**
**செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்**

—குறிஞ்சிப் பாட்டு: *1-12*

என்று அறத்தொடு நிற்றல், சொற்சிக்கனத்தோடு, பொருள் நயத்தோடு குறிஞ்சிப்பாட்டு தொடங்குகின்றது. தலைவியின் அன்பு மிகுதி,

முத்தினு மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பும் இயல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கு மந்நிலை
எளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப
நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி
இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாமறி வுறாலின் பழியும் உண்டோ
ஆற்றின் வாரார் ஆயினும் ஆற்ற
ஏனையுல கத்தும் இயைவதால் நமக்கென
மானமர் நோக்கம் கலங்கிக் கையற்று
ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்

—குறிஞ்சிப் பாட்டு: 17-26

அவை அழகுறப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

குறிஞ்சிப்பாட்டின் தனிப்பெரும் சிறப்பாகப் புலப்படுத்தப்படுவது, 99 வகைப் பூக்கள் அதிலே குறிப்பிடப்பட்டிருப்பதாகும். இவ் இனிய பகுதி வருமாறு:

.................................... வள் இதழ்
ஒண்செங் காந்தள் ஆம்பல் அனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
உரிதுநாறு அவிழ்தொத்து உந்தூழ் கூவிளம்
எரிபுரை எறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடசம்
எருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்

பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமலர் ஆவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கம் திலகம் தேங்கழ் பாதிரி
செருந்தி அதிரல் பெருந்தண் சண்பகம்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்தல்
தாழை தளவம் முட்டாள் தாமரை
ஞாழல் மௌவல் நறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கள்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூந் தணக்கம்
ஈங்கை இலவம் தூங்கிணர்க் கொன்றை
அடும்பமர் ஆத்தி நெடுங்கொடி அவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகம் சிந்து வாரம்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவம் நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
ஆரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்தம் நாகம் நள்ளிருள் நாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவும்
அரக்கு விரித்தன்ன பரேரம் புழகுடன்
மால் அங்குடைய மலிவனம் மறுகி
வான்கண் கழீஇய அகலறைக் குவைஇ.

—குறிஞ்சிப் பாட்டு; 66-98

இந்த 99 வகைப் பூக்களில் இன்று ஏறத்தாழ 35 வகைப் பூக்களுக்குமேல் நாம் காணக்கூடவில்லை. தமிழர்

பண்பாடு, மலைப் பண்பாடு என்பது இந்தக் குறிஞ்சிப் பாட்டு மூலம் மெய்ப்பிக்கப்படுகின்றது. தலைவனது அழகினைப் புலப்படுத்தும் பகுதி ஒரு நடைச் சித்திரம் போல நம் கண்முன் நிற்கின்றது:

எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரம் கமழ மண்ணி
ஈரம் புலர விரலுளர்ப்பு அவிழாக்
காழகில் அம்புகை கொளீஇ யாழிசை
அணிமிகு வரிமிஞிறு ஆர்ப்பத் தேங்கலந்து
மணிநிறம் கொண்ட மாயிரும் குஞ்சியின்
மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராய்ப்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பித்திகத்து ஆயிதழ் அலரி
அந்தொடை ஒருகாழ் வளைஇச் செந்தீ
ஒண்பூம் பிண்டி ஒருகாது செரீஇ
அந்தளிர்க் குவவுமொய்ம்பு அலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந்து அகலத்துத்
தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் ஏந்தி அம்புதெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்குஅறக் கட்டி
இயலணிப் பொலிந்த ஈகை வான்கழல்
துயல்வருந் தோறும் திருந்தடிக் கலாவ

—குறிஞ்சிப் பாட்டு; 107-127

தலைவன் தன் கையில் பிடித்துவரும் வேட்டை நாயின் வருணனை, சங்கச் சான்றோரின் வளப்பமுறு வருணனைத் திறத்தினைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. இது,

முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பின்
பகைபுறங் கண்ட பல்வேல் இளைஞரின்
உரவுச்சினம் செருக்கித் துன்னுதொறும் வெகுளும்

முளைவாள் எயிற்ற வள்ளுகிர் ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு தெரிதர
நடுங்குவனம் எழுந்து நல்லடி தளர்ந்தியாம்
இடும்பைகூர் மனத்தேம் மருண்டுபுலம் படர

—குறிஞ்சிப்பாட்டு: *128-134*

எனும் பாடற்பகுதியால் விளக்கமுறும். தலைவன் மகளிரிடம் விளைந்த தீங்கு பற்றி (கெடுதி) வினவும் பாங்கு மனங்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது:

......................ஒண்தொடி,
அசைமென் சாயல் அவ்வாங்கு உந்தி
மடமதர் மழைக்கண் இளையீர் இறந்த
கெடுதியும் உடையேன் என்றனன்......

—குறிஞ்சிப் பாட்டு: *139-142*

இதற்கு மறுமொழியாக மகளிர் ஏதும் சொல்லாது இருந்த நிலையினையும், அவர்கள் மறுமொழியினை எதிர்பார்த்து நின்ற தலைவனின் நிலையினையும் நம் மனக்கண்முன் நிழற்படம் ஓடுவதுபோலப் பின்வரும் சொற்களால் காட்சித் திரையில் கவினுறக் காட்டும் கபிலரின் செய்யுள் திறம் நினைந்து நினைந்து வியந்து வியந்து போற்றற் குரியதாகும்.

..................அதனெதிர்
சொல்லேம் ஆதலின் அல்லாந்து கலங்கிக்
கெடுதியும் விடஇர் ஆயின் எம்மொடு
சொல்லலும் பழியோ மெல்லிய லீர்என
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பின் இம்மென இமிரும்
மாதர் வண்டொடு சுரும்புநயந்து இறுத்த
தாதவிழ் அலரித் தாசினை பிளந்து

தாறடு களிற்றின் வீறுபெற ஓச்சிக்
கல்லென் சுற்றக் கடுங்குரல் அவித்துஎம்
சொல்லற் பாணி நின்றனன் ஆக

—குறிஞ்சிப் பாட்டு; 143-152

கடுஞ்சினத்துடன் வந்த யானையை அம்பு எய்து துரத்தி, தலைவிபாட்டு அவன் அருள் செலுத்திய பாங்கினை,

அம்சில் ஓதி அசையல் யாவதும்
அஞ்சல் ஓம்பு நின் அணிநலம் நுகர்குஎன
மாசறு சுடர்நுதல் நீவி நீடு நினைந்து
என்முகம் நோக்கி நக்கனன்...

—குறிஞ்சிப் பாட்டு : 180 - 183

என்றவாறு எடுத்தியம்பியுள்ளார். தலைவி, தலைவனுடன் கூடிய நிலை,

... ... .. அங்நிலை
நாணும் உட்கும் நண்ணுவழி அடைதர
ஒய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
ஆகம் அடைய முயங்கலின் ...

—குறிஞ்சிப் பாட்டு : 183 - 186

என்றுரைக்கப்பட்டுள்ளது. இருவரும் பகற்பொழுதினைப் போக்கிய பாங்கு தமிழ்ப் பண்பாட்டின் விருந்தோம்பற் சிறப்பினை விளங்க எடுத்துரைக்கின்றது.

சாறு அயர்ந்தன்ன, மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலர்உணப்
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசை இல் வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை

நின்னோடு உண்டலும் புரைவது என்றாங்கு
அறம்புணை ஆகத் தேற்றி, பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்தி, கைதொழுது
ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி
அம்தீம் தெள்நீர் குடித்தலின் நெஞ்சு அமர்ந்து,
அருவிடர் அமைந்த களிறுதரு புணர்ச்சி
வான்உரி உறையுள் வயங்கியோர் அவாவும்
பூமலி சோலை அப்பகல் கழிப்பி

—குறிஞ்சிப் பாட்டு : 201 - 214

கபிலர் பெருமான் மாலைக் காலத்தின் வருகையை மனங் கொளத்தக்கவகையில் வருணித்திருக்கும் பாங்கு பின்வரும் அடிகளால் இனிதே புலப்படுத்தப்பெறும்:

எல்லை செல்ல ஏழ்ஊர்பு இறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய
மான் கணம் மரமுதற் தெவிட்ட ஆன் கணம்
கன்றுபயிர் குரல மன்று நிறை புகுதர
ஏங்குவயிர் இசைய கொடுவாய் அன்றில்
ஓங்கிரும் பெண்ணை அகமடல் அகவப்
பாம்பு மணி உமிழப் பல்வயின் கோவலர்
ஆம்பல்அம் தீம்குழல் தெள்விளி பயிற்ற
ஆம்பல் ஆயிதழ் கூம்பு விட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயர, கானவர்
விண்தோய் பணவைமிசை ஞெகிழி பொத்த
வானம் மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானம்
கல்லென்று இரட்டப் புள்ளினம் ஒலிப்ப,
சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் காணூஉ

—குறிஞ்சிப் பாட்டு : 216 - 230

தலைவன் தலைவியின் முன்கையைப் பற்றி, ''நாம் மேற் கொண்ட களவுமணம் இவ்வாறு கழிய, விரைவில் நாட்டு

மக்கள் அனைவரும் அறியும் கற்புமணத்தை மேற்கொள்வோம்; அதுவரை கலங்காது இரு'' என்று ஓம்படை கூறிப் பிரிந்த திறத்தினை,

நேர் இறை முன்கை பற்றி நுமர்தர
நாடு அறி நல்மணம் அயர்கஞ் சில்நாள்
கலங்கல் ஓம்புமின் இலங்குஇழை யீர்என,
ஈர நல்மொழி தீரக் கூறித்
துணைபுணர் ஏற்றின் எம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயில்
உண்துறை நிறுத்துப் பெயர்ந்தனன் ...

—குறிஞ்சிப் பாட்டு : 231 - 237

எழும் அழகுகளில் சிறப்புற விளக்கியுள்ளார். தலைவன் வரும் வழியின் அருமை நினைந்து தலைவி மேற்கொள்கின்ற வருத்தம் 'புனையா ஓவியம்' போல் கபிலரால் புனைந்து காட்டப்பட்டிருக்கின்றது.

... ... ...அதற்கொண்டு
அன்றை அன்ன விருப்போடு என்றும்,
இரவரல் மாலையனே வருதோறும்
காவலர் கடுகினும் கதநாய் குரைப்பினும்
நீதுயில் எழினும் நிலவு வெளிப் படினும்
வேய்புரை மென்தோள், இன்துயில் என்றும்
பெறாஅன் பெயரினும் முனியல் உறாஅன்
இளமையின் இகந்தன்றும் இலனே வளமையின்
தன்னிலை தீர்ந்தன்றும் இலனே கொன்ஊர்
மாய வரவின் இயல்பு நினைஇத் தேற்றி
நீர்எறி மலரின் சாஅய்இதழ் சோரா
ஈரிய கலுழும்இவள் பெருமதர் மழைக்கண்
ஆகத்து அரிப்பனி உறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையின் நலம்செலச் சாஅய்
நினைத்தொறும் கலுழுமால் இவளே .

—குறிஞ்சிப் பாட்டு : 237 - 251

தலைவன் வரும் வழியின் அருமை குறிஞ்சிப்பாட்டின் இறுதிப் பத்து அடிகளில் பாங்குறப் புலப்படுத்தப்பட்டுள்ள நிலையினைக் காணலாம்.

**....................கங்குல்**
**அளைச்செறி உழுவையும் ஆளியும் உளியமும்**
**புழற்கோட்டு ஆமான் புகல்வியும் களிறும்**
**வலியின் தப்பும் வன்கண் வெஞ்சினத்து**
**உருமும் சூரும் இரைதேர் அரவமும்**
**ஒடுங்குஇருங் குட்டத்து அருஞ்சுழி வழங்கும்**
**கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்**
**நூழிலும் இழுக்கும் ஊழ்அடி முட்டமும்**
**பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்**
**வழுவின் வழாஅ விழுமம்அவர்**
**குழுமலை விடரகம் உடையவால் எனவே**

—குறிஞ்சிப் பாட்டு : 251 - 261

இப் பாட்டு குறிஞ்சிப்பாட்டு ஆதலின் குறிஞ்சிக்குரிய கடவுளாகிய முருகப் பெருமானைப் பற்றிய செய்திகள்,

**சுடர்ப்பூட் சேஎய்**
**ஒன்னார்க் கேந்திய விலங்கிலை எஃகின் மின்**

என்றும்,

**நெடுவே ளணங்குறு மகளிர்**

என்றும்,

**பிறங்குமலை மீமிசைக் கடவுள் வாழ்த்தி**

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் கபிலர் ஆவர். இவர் பிறந்த ஊர் பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூர் என்பர். இவர் அந்தணர் என்பதனை,

**யானே, பரிசிலன் மன்னு மந்தணன்**

—புறம் : 200

**யானே, தந்தை தோழன் இவரென் மகளிர்**
**அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே**

—புறம் : 201

**புலனழுக் கற்ற வந்த ணாளன்**

—புறம் : 126

எனும் புறப்பாடற் பகுதியால் அறியலாம். இவர் பாரிவள்ளலின் நெருங்கிய நண்பர் என்பதனைப் புற நானூற்றுப் பாடல்கள் பலவற்றால் மிகச் சிறப்பாக அறியலாம். இவரை,

**உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை**
**வாய்மொழிக் கபிலன்..**

—அகம் : 78

என்று நக்கீரரும்,

**உவலைக்கூராக் கவலையி னெஞ்சின்**
**நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்**

என்று பெருங்குன்றூர்கிழாரும்,

**செறுத்த செய்யுட் செய்செந் நாவின்**
**வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்**

—புறம் : 53

என்று பொருந்திலிளங்கீரனாரும், "புலனழுக்கற்ற அந்தணாளன்" என்றும், "பொய்யா நாவிற் கபிலன்" என்றும், பாடியுள்ள திறம் கண்டு கபிலரின் பெருமை கவினுற விளங்குகின்றது. 'குறிஞ்சி பாடக் கபிலன்' எனும் தொடர்கொண்டு குறிஞ்சித் திணையைப் பாடுவதில்

இவருக்கு நிகர் இவரே என்பதனையும் அறியலாம். இச் சிறப்புமொழிக்குச் சான்றாகத் திகழ்வதுதான் இத் தொடராகும்.

சுருங்கச் சொன்னால், சங்கப் பாடல்களில் தலைமைப் பாடல்களாகக் கருதத்தக்க கருத்துச் செறிவும் இலக்கிய நயமும் மிகுந்து காணப்படுவன கபிலரின் பாடல்களே என்று உறுதியாகக் கூறலாம். மேலும், தமிழ்ப் பண் பாட்டை அறிய ஆரிய அரசனுக்கு அறிவுறுத்த, கபிலர் பாடிய பாட்டு என்ற தனிப்பெருமையினைத் தாங்கி நிற்பது 'குறிஞ்சிப் பாட்டு' என்பது வெள்ளிடை மலை.

# 9. பட்டினப்பாலை

**எத்தனை கோடி இன்பம் வைத்தாய்**
**எங்கள் இறைவா! இறைவா!**

என்று மகாகவி பாரதியார் பாடினார். இயற்கை அழகெல்லாம் கொள்ளை இன்பம் குவிப்பனவாகும். இறைவனால் படைக்கப்பட்ட இயற்கைக் காட்சிகள் மட்டுமல்லாமல், மனிதனால் உருவாக்கப்படும் சில காட்சிகளும் மாட்சி பெற அமைந்து விடுகின்றன. கற்பனைக்கியைந்த காட்சிகளை மாட்சிபெற விளக்கி நிற்கும் பாட்டுகளில் தலையானது பட்டினப்பாலையாகும். கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் சங்ககாலப் புலவரின் காட்சியோவியங்கள் மாட்சியுடன் தீட்டப் பெற்றிருக்கும் பாங்கினைப் பட்டினப்பாலை பறைசாற்றி நிற்கிறது.

பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகாலன் ஆவான், இவனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவர். இப்பாட்டு அகப்பொருள் அமைதி கொண்டு, 301 அடிகளால் ஆகியது, பட்டினம் என்ற சொல் எல்லாக் கடற்கரை நகரங்களுக்கும் பொதுப்பட வழங்கினாலும், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அச்சொல் காவிரிப்பூம்பட்டினத்தையே குறித்தது. பாலை என்பது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் கொண்ட அகப்பொருள் திணையாகும். பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறும் பாலைத்திணைப்பாட்டு, 'பட்டினப்பாலை' ஆயிற்று. மதுரைக்காஞ்சி மதுரையின் மாட்சியினைப் புலப்படுத்தி நிற்பது போன்று, பாட்டினப்பாலை காவிரிப்பூம் பட்டினத்தின் பெருமையைப் பரக்கப் பேசுகின்றது.

மதுரைக்காஞ்சியில் நிலையாமை உணர்த்தப்பட்டது; பட்டினப்பாலையில் பிரிதல் ஒழுக்கம் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இல்லறத்தில் தலைப்படத் துணியும் தலைவன் அவ் இல்லறம் முட்டுப் பாடின்றி நடைபெறப் பொருளின் தேவை இன்றியமையாமை என்று உணர்கின்றான். பொருள் தேடிவரும் பொருட்டுத் தன் தலைவியையும் பிரிய முற்படுகிறான். தலைவனின் எண்ணத்தைத் தலைவி அறிகிறாள். அவன் பிரிவினை எண்ணிக் கலங்கிக் கையறு கின்றாள். அவள் கலக்கத்தைப் போக்க நினைக்கும் தலைவன் தன் நெஞ்சை நோக்கிப் பின்வருமாறு கூறிக் கொள்கிறான் : ''நெஞ்சே! முட்டுப்பாடில்லாத செல்வங் களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இக் காவிரிப் பூம்பட்டினத்தையே பெறுவதாக இருப்பினும், நான் நீண்ட கருங்கூந்தலையுடைய என் தலைவியைப் பிரித்து செல்லவேண்டிய வழியோ கரிகால்வளவன் தன் பகைவரை வெல்வதற்கு ஓச்சிய வேலைக் காட்டினும் வெம்மையானது; ஆனால் தலைவியினுடைய தோள்களோவெனின் அவ னுடைய செங்கோலைவிடக் குளிர்ச்சியானது. எனவே தலைவியை விட்டுப் பிரிந்து வரமாட்டேன்.''

**முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்**
**வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய**
**வாரேன் வாழிய நெஞ்சே.**

—பட்டினப்பாலை : *218 - 220*

**திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய**
**வேலினும் வெய்ய கானம் அவன்**
**கோலினும் தண்ணிய தடமென் தோளே**

—பட்டினப்பாலை : *299 - 301*

இவ்வாறு தலைவன் கூறுவதாகப் பட்டினப்பாலை அமைந்துள்ளது.

முல்லைப்பாட்டு நெடுநல்வாடை ஆகிய பாட்டுகள் அகப்பொருள பாடுவதையே பெரும் நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால் பட்டினப்பாலை புறப் பொருளுக்கு முதன்மை தந்துள்ளது. ஆயினும் பாட்டின் முத்தாய்ப்பு அகப்பொருளுக்கு அணி சேர்க்கின்றது. காவிரிப்பூம்பட்டினத்தின் பல்வேறு சிறப்புக்களையும் விரிவாகக் கூறிக்கொண்டுவந்த புலவர் இறுதியில் அக் காவிரிப்பூம்பட்டினத்திலும் தலைவி மேலானவள் என்று தலைவன் கருதுவதாக அகப்பொருளுக்கு உயர்வு தருகின்றார். எனவே, அகப்பொருளும் பட்டினப்பாலை யில் பின்னிப் பிணைந்துள்ளன எனக் கூறலாம்.

காவிரிப் பேரியாற்றின் சிறப்பு, சோழ நாட்டு மருத நில வளம், பாக்கத்து அமைப்பு, படப்பைச் சோலை, அட்டிற்சாலைகள், பௌத்தப் பள்ளிகள், பல்வேறு கோட்டங்கள், பரதவர் குடியிருப்புகள், புறஞ்சேரி, காவிரி நீர்த்துறை, வைகறையாம நிகழ்ச்சிகள், உல்கு வசூலிக்கும் திறம், பண்டசாலை முற்றம், அங்காடித் தெருக்கள், கடைகளின் மேற்பறக்கும் பல்வேறு கொடிகள், தெருக்கள், வேளாண்குடி மக்களின் விருந்தோம்பலில் சிறந்த பெருவாழ்வு முதலிய இன்னோரன்ன செய்திகள் விளக்கமாக இப்பட்டில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

குடகுமலையிற் பிறந்து தமிழ்நாட்டிற் பாய்ந்து கீழ்க் கடலிற் கலக்கும் காவிரி, சோழநாட்டின் கரைகளிலே பொன்னை ஒதுக்குவதாகக் குறிப்பிடுகின்றார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். 'வான் பொய்ப்பினுந்தான் பொய்யாக் காவிரி' என்று காவிரியாறு எக்காலத்திலும் பொய்ப்பதில்லை என்ற உண்மையை ஓதுகின்றார்.

**வசையில் புகழ் வயங்குவெண்மீன்**
**திசைதிரிந்து தெற்கேகினும்**
**தற்பாடிய தளியுணவிற்**
**புள்தேம்பப் புயல்மாறி**

**வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனி**

—பட்டினப்பாலை : 1 - 8

சோழநாட்டு வயல்களில் கரும்புகள் நெடிதோங்கி வளர்ந்துள்ளன. அவ்வயலோரங்களில் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சும் கொட்டில்கள் பல இருக்கின்றன. அங்கிருந்து எழும் புகை, பக்கத்து வயல்களில் மலர்ந்துள்ள நெய்தற் பூக்களை வாடச் செய்கின்றன. மருத வயல்களில் வளர்ந்துள்ள நெற்கதிர்களையுண்ட எருமைக் கன்றுகள் நெற்கூடுகளின் நிழலிலே உறங்கிக் கொண்டிருக்கின்றன. நெருங்கிய குலைகளையுடைய தென்னை, வாழை, பனை முதலிய மரங்களும், மஞ்சள், சேம்பு, இஞ்சி முதலிய செடிகளும் அடர்ந்து செழித்து வளர்ந்திருக்கின்றன. பாக்கங்களில் செல்வர்கள் வாழுகின்றனர். அவர்கள் வீதிகள் அகன்றவை.

**விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழ்ஆலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவின் நீள்நெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கண்
காய்ச்செந்நெற் கதிர்அருந்தும்
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழல் துயில்வதியும்
கோள்தெங்கின் குலைவாழைக்
காய்க்கமுகின் கமழ்மஞ்சள்
இனமாவின் இணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளைஇஞ்சி
அகனகர் வியன்முற்றத்து**

—பட்டினப்பாலை : 8 - 20

அத்தகைய வீடுகளின் முற்றங்களில் நெல்லைக் காய வைத்து இளம்பெண்கள் காவல் புரிகின்றனர். காய்கின்ற நெல்லைக் கொத்தவரும் கோழிகளை அவர்கள் தங்கள் காதுகளில் அணிந்திருக்கும் பொற்குழைகளைக் கழற்றி வீசி விரட்டுகின்றனர்.

அழகிய நெற்றியும் மடநோக்கும் கொண்ட இளைய மகளிரால் அவ்வாறு எறியப்பட்ட பொற்குழைகள் முற்றத்திலே சிதறிக் கிடக்கின்றன. அவை சிறுவர் உருட்டிச் செல்லும் மூன்று உருளைகளையுடைய சிறுதேரைத் தடுக்கின்றன.

**அகல்நகர் வியன்முற்றத்துச்**
**சுடர்நுதல் மடநோக்கின்**
**நேரிழை மகளிர் உணங்குஉணாக் கவரும்**
**கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை**
**பொன்கால் புதல்வர் புரவியின்று உருட்டும்**
**முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும்**
**விலங்குபகை அல்லது கலங்குபகை அறியாக்**
**கொழும்பலகுடிச் செழும்பாக்கத்து**

—பட்டினப்பாலை : 20 - 27

காவிரிப்பூம்பட்டினத்தில் அழகிய தோட்டங்கள் பல அமைந்துள்ளன. அத்தோட்டங்களைச் சூழ்ந்து உப்பங் கழிகள் பல உள்ளன. இவ்வுப்பங் கழிகளில் படகுகள் பல வரிசையாகக் கட்டப்பட்டுள்ளன. சோழ நாட்டில் உப்பை விற்று அதற்குப் பதிலாக நெல்லை ஏற்றிவந்த படகுகளே அவை. புதுவருவாய் தரும் தோப்புகளும், அவற்றின் அணித்தேயுள்ள பூஞ்சோலை களும், ஆழமான பொய்கைகளும், இம்மையிலும், மறுமை யிலும் காம இன்பத்தை நல்கும் ஏரிகளும் காவிரிப்பூம் பட்டினமெங்கும் நிறைந்து காணப்புடுவதாகக் கடிலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

விருந்து போற்றும் திறம் காவிரிப்பூம்பட்டினத்தில் மிகுந்துள்ளது. சோற்றை வடித்த கஞ்சி ஆற்று வெள்ளம் போலத் தெருக்களில் பெருக்கெடுத்தோடுகின்றது.

**சோறு ஆக்கிய கொழுங் கஞ்சி**
**யாறு போலப் பரந்து ஒழுகி**

—பட்டினப்பாலை : 44 - 45

என்பது அவர் தம் வாக்கு.

இச்செல்வ வளத்திற்கெல்லாம் காரணமாய் அமைவது காவிரிப்பூம்பட்டினத்தின் வணிக வளமேயகும். அங்கு ஏற்றுமதி இறக்குமதி வாணிகம் ஆகிய இரண்டுமே சிறந்திருந்தன. ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுக் கன்றி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கும் சுங்க வரி விதிக்கப்பட்டது. பிற நாடுகளிலிருந்து கடல் வழியாக வந்த பண்டங்களோடு, பிற நாடுகளுக்கு அனுப்புவதற்கு வந்திருக்கும் பண்டங்களும் சேர்ந்து மலையெனக் குவிந்து கிடக்கின்றன. கட்டுக்காவல் மிகுந்த சுங்கச் சாவடியில் அப்பண்டங்களின் மீது புலி இலச்சினை இடுகின்றனர். அவ்வாறு இடப்பட்ட மூட்டைகள் குவியலாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

**வான்முகந்தநீர் மலைப்பொழியவும்**
**மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்**
**மாரிபெய்யும் பருவம்போல**
**நீரினின்று நிலத்தேற்றவும்**
**நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்**
**அளந்தறியாப் பலபண்டம்**
**வரம்பறியாமை வந்தீண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடை வல்அணங்கினோன்**
**புலிபொறித்துப் புறம்போக்கி**
**மதிநிறைந்த மலிபண்டம்**

பொதிமூடைப் போர்ஏறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூர்உகிர் ஞமலிக் கொடுந்தாள் ஏற்றை
ஏழகத் தகரோடு உகளும் முன்றில்

—பட்டினப்பாலை : *126 - 141*

பிற நாடுகளிலிருந்து கடல்வழியாய் வந்த குதிரைகளும், நிலத்தின் வழியே வண்டிகளில் ஏற்றிக் கொண்டுவரப்பட்ட மிளகு மூட்டைகளும், இமயமலையிலிருந்து கொண்டுவரப்பட்ட மாணிக்கக் கற்களும், குடகு மலையிலிருந்து கொண்டுவரப்பட்ட சந்தனமும் அகிற் கட்டைகளும், தென்கடலில் பிறந்த முத்துக்களும், கீழ்த்திசைக் கடலிற் பிறந்த பல வளங்களும், கங்கையாறு பாயும் பகுதிகளில் விளைந்த பொருள்களும், ஈழத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களும் அத்தெருக்களில் குவிந்துள்ளன,

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு

—பட்டினப்பாலை : *185 - 197*

இவையல்லாமல் பிற இடங்களில் கிடைக்காத பொருள்களும் நிலமங்கையின் முதுகுநெளியும் வண்ணம் அங்கே வந்து குவிந்து கிடக்கின்றன. இவ்வருமையான பொருள்களை விற்கும் வணிகர்கள் தங்கள் நேர்மையி

பா.—5

லிருந்து சிறிதும் வழுவதில்லை. அவர்கள் நடுவுநிலைமை போற்றிப் பழிக்கு அஞ்சி, எப்போதும் உண்மையே பேசும் இயல்புடையவர்களாக இருக்கிறார்கள். தங் களுடைய பொருள்களையும் பிறருடையபொருள்களையும் ஒரு தன்மையாகவே நினைக்கின்றார்கள். பிறரிடமிருந்து பொருள்களை விலைக்கு வாங்கும்போது மிகுதியாகக் கொள்ளாமலும், பிறருக்கு விற்கும் போது குறைவாகக் கொடுக்காமலும் நேர்மையைக் கடைப்பிடிக்கிறார்கள். தாங்கள் விற்கும் ஒவ்வொரு பொருளின் நியாமான விலையினைக் கூறியே அவர்கள் வாணிகம் செய்கிறார்கள்.

**நெடுநுகத்துப் பகல்போல**
**நடுவுநின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய்மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்ப நாடிக்**
**கொள்வதூஉ மிகை கொளாது**
**கொடுப்பதூஉங் குறைகொடாது**
**பல்பண்டம் பகர்ந்துவீசும்**
**தொல்கொண்டித் துவன்றிருக்கை**

—பட்டினப்பாலை : 206 - 212

காவிரிப் பூம்பட்டினத்தின் கடற்கரைப் பகுதியிலே வாழும் பரதவர்கள் ஓய்வு நாட்களில் எப்படித் தம் பொழுதைப் போக்கி மகிழ்கின்றார்கள் என்னும் காட்சி யினை மாட்சிபடக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கவினுறக் கட்டுரைத்துள்ளார்.

நிறைநிலா - பௌர்ணமி நாளிலே அலைகளின் ஆர்ப் பரிப்பு மிகுதியாக இருக்கும். எனவே பரதவர் அன்று மீன் பிடிக்கப் போக மாட்டார்கள். சினை கொண்ட சுறாமீன் கொம்பை நட்டு, அதிலே ஆடல் தெய்வம் வாழ்வதாகக் கருதுவார்கள். அதற்குத் தாழை மலரைச்சூட்டி மகிழ்வர். பனங்கள்ளைக் குடித்துக் களிகொள்ளும் தமது பெண்டி ருடன் விரும்பிய பலவற்றை உண்டு மகிழ்வர்.

**சினைச் சுறவின் கோடுநட்டு**
**மனைச் சேர்த்திய வல்லணங்கினான்**
**மடல்தாழை மலர்மலைந்தும்**
**பிணர்ப் பெண்ணைப் பிழிமாந்தியும்**
**புள்தலை இரும்பரதவர்**
**பைந்தழை மாமகளிரொடு**
**பாயிரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது**
**உவவு மடிந்து உண்டாடியும்**

—பட்டினப்பாலை : 86 - 93

இனி, காவிரிப்பூம்பட்டினத்தில் வாழும் வேளாளர்கள் பற்றிக் காண்போம். அவர்கள் கொலை செய்வதை வெறுத்தவர்கள்; களவு செய்தலைக் கனவிலும் கருதாதவர்கள். தேவர்களை வணங்கி அவர்களுக்கு வேள்வியின் மூலம் பலி கொடுப்பார்கள். நல்ல பசுக்களையும் எருதுகளையும் காத்தோம்புவர். வேள்வித்தகர்களைப் போற்றுவார்கள். வந்த விருந்தினருக்கு வயிறார உணவு வழங்குவார்கள் நல்லொழுக்கத்திலிருந்து நழுவ மாட்டார்கள். மேழிச் செல்வமே சிறந்தது எனப் போற்றுவார்கள்.

**கொலை கடிந்தும் களவு நீக்கியும்**
**அமர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்**
**நல்ஆனொடு பகடு ஓம்பியும்**
**நான்மறையோர் புகழ் பரப்பியும்**
**பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்**
**புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை**
**கொடுமேழி நசை உழவர்**

—பட்டினப்பாலை : 199 -205

பட்டினப் பாலையின் இறுதிப் பகுதியில் சோழன் கரிகாலன் காடுவெட்டி நாடாக்கின செயலும் உறந்தையைப் புதுப்பித்த செய்தியும் உரைக்கப்படுகின்றன.

**காடுகொன்று நாடாக்கி**
**குளந்தொட்டு வளம்பெருக்கிப்**
**பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்**
**கோயிலொடு குடிநிறீஇ**
**வாயிலொடு புழையமைத்து**
**ஞாயில்தொறும் புதைநிறீஇ**
**பொருவேம்எனப் பெயர்கொடுத்து**
**ஒருவேம்எனப் புறக்கொடாது**
**திருநிலைஇய பெருமன் எயில்**

—பட்டினபபாலை : 283 - 291

இவ்வாறு கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப் பாலையில் காவிரிப்பூம் பட்டினத்தின் பலபடியான செல்வச் செழிப்பு நிலைகளைப் படிப்போர் உளங்கொளு மாறு வருணித்துள்ளார்.

# 10. மலைபடுகடாம்

மலைபடுகாடம் பத்துப்பாட்டில் இறுதிப்பாட்டாகும். இஃது ஆற்றுப்படை அமைதி அமைந்த ஒரு நூலாகும். எனவே, இது 'கூத்தராற்றுப்படை' எனவும் வழங்கும். இந்நூலின் ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் ஆவர். இரணியமுட்டம் என்பது பாண்டிய நாட்டில் உள்ள ஒரு சிறிய நிலப்பகுதியாகும்; மதுரையையடுத்த ஆனைமலைப்பகுதி அழகர்மலைப்பகுதி இவ்விரண்டையும் சூழவுள்ள பகுதியாகும். பெருங்கௌசிகனார் என இவர் வழங்கப்படுவதிலிருந்தே இவர்தம் தனிச்சிறப்பினை அறியலாம்.

583 அடிகள் கொண்ட ஆசிரியப் பாவால் ஆன நூல் இஃதாகும். பரிசில் பெறவரும் கூத்தனொருவனைப் பரிசில் பெற்றானொருவன் செங்கண்மாத்து வேள் நன்னன்சேய் நன்னனிடத்தே ஆற்றுப்படுத்தியதாகப் புலவர் பாடியுள்ள பாட்டு இது. மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்ததனால் இப்பாட்டு மலைபடுகடாம், எனப்பெயர் பெற்றது. கடாமென்பது ஆகுபெயராய் அதனாற் பிறந்த ஓசையை உணர்த்திற்று.

இன்றைய வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சவ்வாது மலைத்தொடரும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியும் நன்னனது நாடாகும். மலையடிவாரத்

திலிருந்து மலையேறிச் சென்று மலையில் பாய்ந்தோடும் சேயாற்றைக் கடந்து அதன் கரை வழியே நடந்து தரையில் அமைந்திருந்த செங்கண்மா என்னும் நன்னனது நகரத்தை அடையும் வரையில் மலையடிவார ஊர்கள், மலைமேலிருந்த ஊர்கள், காடுகள், ஊர் மக்கள் இயல்புகள், அவர்கள் விருந்தினரை உபசரிக்கும் முறை, ஆங்காங்குக் கிடைக்கும் உணவு வகை, மலைமீது கோயில் கொண்டிருக்கும் காரியுண்டிக் கடவுள் பற்றிய விவரம், நன்னனது கொடைப் பண்பு முதலிய பல செய்திகள் மலைபடுகடாத்தில் கூறப்பட்டுள்ளன.

**உயர்நிலை மாக்கல் புகர்முகம் புதைய**
**மாரியின் இகுதரு வில்லுமிழ் கடுங்கணைத்**
**தாரொடு பொலிந்த வினைநவில் யானைச்**
**சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ இலஞ்சி**
**ஓரியாற்று இயவின் மூத்த புரிசைப்**
**பராவரு மரபிற் கடவுள்!**

—மலைபடுகடாம் : 225-230

எனக் காரியுண்டிக் கடவுள் நிலையைச் சுட்டுகிறார்.

வரகின் கவைக்கதிருக்கு வாதியின் கையை உவமை காட்டியிருத்தலும், குறப்பெண்டிர் தம் கணவர் புண்ணாற் படும் வருத்தத்தைப் பாட்டுப்பாடித் தணித்தலும், யானையைக் கந்திற் பினிக்கும் பாகர் யானை பயிற்றும் சில வடமொழிகளைப் பயன்படுத்தும் வழக்கமும், வழிக்கு அடையாளமாகக் கவர்த்த வழிகளின் தொடக்கத்தில் புல்லை முடிந்து வைத்தலும், கற்புக்குக் கொடியுண்மையும், பாணருக்குப் பொற்றாமரைப் பூவையும் விறலியர்க்கு இழைகளையும் வள்ளற்றன்மை வாய்ந்தோர் வாரி வழங்கலும் ஆகிய இன்னபிற செய்திகள் இந் நூலால் விளக்கம் பெறுகின்றன.

இன்ன இன்ன செய்திகளைக் கூறுவேன் நீகேள் என்று கூறிச் செய்திகளைத் தொகுத்துச் சுட்டிப் பின்பு விரிக்கும் முறை இவ்வாற்றுப் படையில் மட்டும் காணப்படுகிறது.

**தொலையா நல்லிசை உலகமொடு நிற்பப்**
**பலர்புறங் கண்டவர் அருங்கலந் தரீஇப்**
**புலவோர்க்குச் சுரக்கும்அவன் ஈகைமாரியும்**
**இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும் புகழுநர்க்கு**
**அரசுமுழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு**
**தூத்துளி பொழிந்த பொய்யா வானின்**
**வீயாது சுரக்கும்அவன் நாண்மகிழ் இருக்கையும்**
**நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து**
**வல்லா ராயினும் புறமறைத் துச் சென்றோரைச்**
**சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி**
**நல்லிதின் இயக்கும்அவன் சுற்றத்து ஒழுக்கமும்**

—*மலைபடுகடாம் : 70 - 80*

என வருதல் காண்க.

இப்புலவர் கூத்தனை ஆற்றுப்படுத்துகையில் இன்ன இன்ன செயல்களைச் செய்க எனக் குறிப்பிடுகையில் அவ்வத்திணைக்கேற்ற பண்களைப் பாடுமாறு சொல்லியுள்ளமை அறிந்து இன்புறத்தக்கது. குறிஞ்சி மருதப் பண்களை யாழில் இசைக்கும் திறனைக் குறிப்பிட்டிருக்கும் பெருங்கௌசிகனார் இசை நுட்பம் அறிந்த புலவர் என்பது பெறப்படும்.

# எட்டுத் தொகை

# 1. நற்றிணை

எட்டுத்தொகை நூல்களில் முதலாவதாக இடம் பெற்றிருக்கிற தொகை நூல் நற்றிணையாகும். எட்டுத் தொகை நூல்களாவன இவை எனத் தெரிவிக்கும் பழைய பாடல் ஒன்று உள்ளது. அது வருமாறு :

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று**
**இத்திறத்த எட்டுத்தொகை.**

நல்+திணை=நற்றிணை ஆகும். திணை என்பது ஒழுக்கம். நல்ல ஒழுக்கத்தினை நாடி உரைக்கும் நல்ல நற்றிணையாகிறது. எட்டுத்தொகை நூல்களுள் திணை என்ற பெயரால் வழங்கும் நூல் இது ஒன்றேயாகும். இஃது ஒன்பதடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டிப் பேரெல்லையும் கொண்ட நானூறு அகவற்பாக்களால் ஆன நூலாகும். இந்நூல் 'நற்றிணை நானூறு' என்றும் வழங்கும். இரு நூற்றெழுபத்தைந்து புலவர் பெருமக்கள் நற்றிணைப் பாடல்களை இயற்றியுள்ளனர். இந்நூற்குப் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்களின் உரையொன்றுள்ளது.

இந்நூற்கு அமைந்துள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுள் திருமாலைப் பற்றியதாகும். பாடியவர் பாரதம் பாடிய

பெருந்தேவனார் ஆவர். திருமாலின் பரத்துவ நிலையை விளக்கும் அச்சிறந்த பாடல் வருமாறு :

**மாநிலம் சேவடி யாகத் தூநீர்**
**வளைநரல் பௌவம் உடுக்கை யாக**
**விசும்பு மெய்யாகத் திசைகை யாகப்**
**பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக**
**இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய**
**வேத முதல்வன் என்ப**
**தீதற விளங்கிய திகிரி யோனே!**

நற்றிணையின் முதற்பாடல் கபிலருடையது. குறிஞ்சிப்பாடக் கபிலன் என்னும் பெயர் பெற்ற கபிலர் குறிஞ்சித்திணைப் பாடலைப் பாடுகிறார்.

தோழி என் காதலர் நிலையில் திரியாத வாய்மையுடையவர்; நெடிதாகத்தோன்றுகின்ற இனிமையுடையவர்; எப்பொழுதும் என் தோழியினைப் பிரியும் தன்மை உடையவரல்லர். அத்தகு சிறப்பு வாய்ந்த தலைவனுடைய நட்பு, தாமரையின் குளிர்ந்த தாதினையும், மேலோங்கி வளர்ந்திருக்கின்ற சந்தனத்தின் தாதினையும் ஊதி, அந்தச் சந்தன மரத்தில் கட்டியுள்ள இனிய தேன் போல உறுதியாக ஒத்த தன்மையுடையவன். ஆதலின் அத்தலைவன் நீரையின்றி அமையாத உலகம் போலத் தம்மையின்றி அமையாத நம்மாட்டு முன்பு விருப்பம் மிக்கு அருளிய பின்பு பிரிதலால் நம் நறுமணம் மிக்க நெற்றி பசலையூர்வதற்கு அஞ்சிச் செய்வதறியாதவராய்த் தடுமாற்றம் அடைவாரோ? அவ்வாறு செய்யமாட்டார்.

**நின்ற சொல்லர் நீடுதோன்றினியர்**
**என்றும் என்தோள் பிரிபறி யலரே**
**தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**

**நீரின்று அமையா உலகம் போலத்**
**தம்மின் றமையா நந் நயந் தருளி**
**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உறுபவோ செய்பறி யலரோ**

—நற்றிணை : 1

பெயர் தெரியாத புலவர் மூவர் பாடலில் தலைமகளின் தலையாய பண்பும், அரசர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பும் ஒருங்கு காணப்படுகின்றன.

''மலர்கள் நிறைந்த பொழில் சூழ்ந்த ஊரையுடையோனே! இனிய முற்றிய கரும்புடைய கள்ளுறைவினையும் இழையசைந்த நெடிய தேர்களையும் உடைய வலிமை மிக்க சோழமன்னர், கொங்கரை அடக்கும் பொருட்டு, வெண்மை நிறம் வாய்ந்த கொம்பினையுடைய மோகூர் என்னும் ஊரின் தலைவனாகிய பழையன் என்னும் சேனைத் தலைவனிடத்துத் தப்பாத வேற்படையைப் பெற்று வைத்திருந்தாற் போன்ற தந்து பிழைபடாத நல்ல மொழியைக் கேட்டு உண்மையெனத் தெளிவுபெற்ற இவளுக்கு, அண்ணாந்து எழுந்த உயர்ந்த அழகிய கொங்கைகள் தளர்ந்தாலும், பொன் போன்ற மேனியிலே கருமணி போலத் தாழ்ந்த நல்ல நீண்ட கூந்தல் நரையுடனே முடிக்கப் பெற்றாலும், அக்காலத்து இவள் நம் அழைப்புக்குப் பயன்படாது முதிர்ந்துளாள் என்று கருதிக் கைவிடாமல் கொண்டு பாதுகாப்பாயாக'' என்று உடன் போக்கு நேர்ந்த தலைவனிடம் தலைவியைக் கையடை தந்து தோழி குறிப்பிட்டாள்.

**அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்**
**பொன்னேர் மேனி மணியில் தாழ்ந்த**
**நந்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்**
**நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர!**
**இன்கடுங் கள்ளின் இழையணி நெடுந்தேர்க்**

**கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்**
**வெண்கோட் டியானைப் போஒர்கிழவோன்**
**பழையன் வேல்வாய்த் தன்னநின்**
**பிழையா நன்மொழி தேறிய இவட்கே**

—நற்றிணை : 10

நெய்தல் திணையினை நேர்த்தியுறப் பாடுதலில் வல்லவர்கள் அம்மூவரும். உலோச்சனாரும் ஆவர். உலோச்சனார் நெய்தல் திணை அமையப் பாடிய பாட்டொன்று நற்றிணையில் இடம் பெற்றுள்ளது.

''தோழி! வாழ்வாயாக! நம்மூர்த் தெருவிலுள்ள மாதர்களும் ஒரோ ஓரிடத்தில் சிற்சிலரும், ஒரோ ஓரிடத்தில் பற்பலரும் பலபடியாக ஆங்காங்கே தெருக்களில் கூடி நின்று, தம் கடைக்கண்ணாலே சுட்டி நோக்கி, வியப்பின் விளிம்பை எட்டியவர்கள் போலத் தத்தம் மூக்கின் நுனியிலே சுட்டு விரலை வைத்துப் பழிச் சொற்களைக் கூறித் தூற்றுகின்றனர்; அப்பழிச் சொற்களை எம் தாய் கேட்டறிந்து அவை மெய்மொழிகளே எனக் கொண்டு கையில் சிறிய கோலொன்றினை ஏந்தி, அது சுழலும்படி வீசி அடிப்பவும் நான் துன்பமீதூரப் பெற்றவளாயினேன்; ஆதலால் இந்தத் துன்பமெல்லாம் தீரும்படி உப்பங்கழியருகின்கண் இருக்கும் சோலையிலுள்ள புதிய மலர் தீண்டிய பூமணம் வீசுகின்ற நல்ல நிறம் வாய்ந்த பிடரி மயிரினையுடைய விரைந்து செல்லும் குதிரை பூட்டிய நெடிய தேரைச் செலுத்தி, இரவு நடுயாமத்து நள்ளிருளில் வருகின்ற இயன்ற தேரையுடைய தனலவனோடு நீ செல்லுமாறு யான் உடன்பட்டு நின்றேன்; நீ எழுவாயாக! அங்ஙனம் அத்தலைவனோடு உடன்போக்கு மேற்கொண்டால் பேரொலியையுடைய இவ்வூர் யாது செய்ய இயலும்? வேண்டுமானால் அலர் தூற்றிக் கொண்டேயிருக்கலாம்'' என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

**சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி**
**மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி**
**மறுகின் பெண்டிர் அம்பல் தூற்றச்**
**சிறுகோல் வலந்தனள் அன்னை: அலைப்ப,**
**அலந்தனென் வாழி தோழி கானல்**
**புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவல்**
**கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ**
**நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு**
**செல்வயர்ந் திசினால் யானே**
**அலர்சுமந்து ஒழிகஇவ் வழுங்கல் ஊரே**

—நற்றிணை : 149

இப்பாடலில் பெண்களின் ஒழுகலாறுகள் உள்ளபடியே சித்திரிக்கப்பட்டுள்ளதனைக் காணலாம்.

பிறிதெகரு நற்றினைப் பாடலில் நடத்தியதற்கு விளக்கம் நங்கையொருத்தியின் வாழ்வுவழிப் புலப்படுத்தப்பட்டிருக்கக் காணலாம்.

''புதல்வனைப் பெற்ற நீலமலர் போலும் கண்களை யுடைய நங்கையொருத்தி தன் கொங்கையைக் கையாலே பிடித்துத் தன் புதல்வன் வாயில் வைப்ப, அக்குழவி அதன் கண்ணுள்ள பாலைக் குடிப்பது போலக் காந்தள் மலரின் பூங்கொத்தோடு பொருந்திய கொழுவிய மடலையுடைய வாழைப்பூவின் அந்தஅருவிப்போலப் பெருகிவரும் இனிய நீரை, சிவந்த முகத்தையுடைய பெண்குரங்கு பற்றிப் பருகும் மலைநாடனே! நட்பின் கண்ணோட்டமுடையார்க்கு எதிரே சென்றிருந்து, ''இதனை நீவிர் உண்பீராக என்று நஞ்சைக் கலந்து கொடுத்தாலும் நட்புடையாளரான அக்கண்ணோட்ட மிக்கார் அது நஞ்செனமுற்ற உணர்ந்த நிலையிலும், மறுக்கமாட்டாராய், அதனை உண்டு பின்னும் அவரோடு நட்பாடுவர்; நீ அத்தகைய நட்புடையவனாயிருந்தும், அழகிய சிலவாகிய கூந்தலையுடைய என் தோழியின் தோளிலே துயிலுவதை நீ உன் உள்ளத்தில் இன்பமாகக் கொள்ளவில்லை; அவ்வாறு இன்

பமாகக் கொள்ளாவிட்டாலுங்கூட, என்மாட்டுள்ள கண்ணோட்டதிற்காகவாவது இவளுடைய தோளிலே துயிலுவதனை இன்பமாகக் கொண்டு தலையளி செய்வாயாக; இவள்தான் என்பால் அடைக்கலமாக உடையளாயிருப்பாள் அல்லது வேறொரு துன்பமும் இல்லாதவளாவாள். இதனை நீ உணர்வாயாக'' என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

**புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை**
**முலைவாய் உறுக்கும் கைபோல் காந்தள்**
**குலைவாய் தோயும் கொழுமடல் வாழை**
**அம்மடற் பட்ட அருவித் தீநீர்**
**செம்முக மந்தி ஆரும் நாட!**
**முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்**
**அஞ்சில் ஓதிஎன் தோழி தோள் துயில்**
**நெஞ்சின் இன்புறாய் ஆயினும் அதுநீ**
**என்கண் ஓடி அளிமதி**
**நின்கண் அல்லது பிறிதியாதும் இலளே**

— நற்றிணை : 355

தேய்புரிப் பழங்கயிற்றினார் என்று பாவடித் தொடராற் பெயர்பெற்ற புலவரொருவரின் பாடலில் இருதலைக் கொள்ளியாக இருக்கும் மனத்தின் போராட்ட நிலை நன்கு புலப்படுத்தப்பட்டிருக்கக் காணலாம். பொருள் வயிற் சென்ற தலைவன் தலைவியை நினைந்து ஆற்றானாகி, 'என் நெஞ்சமானது தலைவியின்பாற் செல்லுகிறது; அறிவானது பொருளை முடித்துப்போவாம்; அதற்குள் விரையாதே என்கின்றது. இவ்வாறு உள்ளத்திற்கும் அறிவிற்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தினால் என் உடம்பு, எதிர் எதிர் நின்ற யானைகள் இரண்டும் ஒன்றிற்கொன்று மாறுபாடாகக் கைப்பற்றி ஈர்த்த தேய்ந்த புரியையுடைய கயிறு அறுந்து ஒழிவது போல அழிய

வேண்டுவதுதானோ, இஃதொரு கொடுமை நிகழ்கிறதே'' என்று பெருங்கவலையுற்ற நிலையினை எடுத்துரைக்கக் காணலாம்.

**புறந்தாழ்பு இருண்ட கூந்தல் போதின்**
**நிறம்பெறும் ஈரிதழ்ப் பொலிந்த உண்கண்**
**உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்**
**செல்லல் தீர்கஞ் செல்வாம் என்னும்**
**செய்வினை முடியாது எவ்வம் செய்தல்**
**எய்யா மையொடு இளிவுதலைத் தருமென**
**உறுதி தூக்காத் தூங்கி அறிவே**
**சிறுதுநனி விரையல் என்னும் ஆயிடை**
**ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய**
**தேய்புரிப் பழங்கயிறு போல**
**வீவது கொல்என் வருந்திய உடம்பே!**

*—நற்றிணை : 284*

*தலைவியின் காதற்சிறப்பினைப் பின்வரும் நற்றிணைப் பாடல் விளக்கி நிற்கிறது.*

**தோளும் அழியும் நாளும் சென்றென**
**நீளிடை அத்தம் நோக்கி வாளற்றுக்**
**கண்ணும் காட்சி தௌவின என்நீத்து**
**அறிவு மயங்கிப் பிறிதா கின்றே**
**நோயும் பெருகும் மாலையும் வந்தன்று**
**யாங்கா குவென்கொல் யானே யீங்கோ**
**சாதல் அஞ்சேன்; அஞ்சுவல் சாவின்**
**பிறப்புப்பிறி தாகுவது ஆயின்**
**மறக்குவென் கொல்லென் காதல னெனவே**

*—நற்றிணை : 397*

நெய்தல் திணையினைப் பாடவல்ல அம்மூவனார் இப் பாலைத்திணைப் பாடலைப் பாடியுள்ளார். ''தலைவன் வருவதாகக் கூறிய பருவம் வந்து போனதால் என்தோளும்

வாட்டமுறும்; நீண்டநெறியையுடைய சுரத்தினை நோக்கி நோக்கி என் கண்களும் ஒளியிழந்து பொலிவற்றுப் போயின, எனது அறிவும் என்னைக் கையிகந்து மயக்க முற்று வேறாக நிற்கிறது. நோயை வைத்து உயிர் நீங்காதா யிற்று; உயிரைச் போக்குதற்குரிய மாலைபொழுதும் வந்து இறுத்துவிட்டது; இனி யான் என்ன ஆவேனோ? இறந்தி லேன். இவ்வுலகத்தில் பிறந்தோர் எவரும் ஒருநாள் இறப்பர் என்பது உண்மையாயினும், அந்த இறப்பிற்காக நான் அஞ்சவில்லை. அவ்வாறு இறக்க நேரிட்டால், எனது இனிவரும் பிறப்பு வேறொரு பிறப்பாகி மாறிடின் என் காதலனை மறப்பேனோ என்று அவ்வொன்றனுக்கே நான் அஞ்சுகிறேன்.''

இவ்வாறு குறிப்பிடும் தலைவியின் உயர்ந்த காதற் பெற்றியினை மேற்காணும் நற்றிணைப் பாடலில் காணலாம்.

இனி, இதே பெற்றி வாய்ந்த பெண்ணொருத்தியின் இல்லறப் பண்பினைக் காண்போம் :

பிறந்த வீட்டுச் செல்வச் செழிப்பைப் பாராட்டாமல், புகுந்த வீட்டின் பொலிவற்ற வாழ்வையே பெரிதாகப் போற்றும் உளங்கொண்ட நங்கையின் வாழ்வினை நற் றிணைப் பாடலென்று நயமுற எடுத்துரைக்கின்றது.

''தேன்கலந்த இனிய பாலைப் பொற்கலத்தில் ஒரு கையில் ஏந்திச் சிறுகோல் எடுத்து 'உண்' என்று ஓங்கி நிற்க, என் மகள் காற்சிலம்பு ஒலிக்கத் தத்தி ஓடுவாள். முதிய செவிலித்தாயர் பின்தொடர்ந்து பிடிக்க முடியாமல் மெலிந்து நிற்க, அவள் பூப்பந்தல் வரையில் ஓடி உண்ண மாட்டேன் என்று மறுப்பாள். இவ்வாறு சிறு வயதில் சிறுவிளையாட்டு உடையவள் இப்பொழுது இல்லற வாழ்க்கைக்குரிய அறிவையும் ஒழுக்கத்தையும் எவ்வாறு உணர்ந்தாளோ? தான் திருமணத்திற் கொண்ட கணவ னுடைய குடும்பம் வறிமையுற்றதாக, பெற்ற தந்தை

கொடுத்தனுப்பிய வளமான உணவைப் பற்றி நினைக்காமல், ஓடும் நீரில் நுணுகிக் கிடக்கும் சிறு கருமணல் போல் விட்டுவிட்டு ஒவ்வொரு பொழுது உண்ணும் சிறு வன்மை உடையவளாகி விட்டாள்'' என்று தாய் ஒருத்தி குறிப்பிடுகிறாள்.

**பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொன்கலத்து ஒருகை ஏந்திப்**
**புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்**
**உண்ணென்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்**
**முத்தரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று**
**அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்**
**பரிமெலிந்து ஒழியப் பந்தர் ஓடி**
**ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுஉணர்ந் தனள்கொல்**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**
**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்**
**ஒழுகுநீர் நுணங்கறல் போலப்**
**பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது கையளே.**

*—நற்றிணை: 110*

போதனார் பாடிய மேற்கணும் பாடலில் இல்லற வாழ்வு சிறக்க மங்கையர் மேற்கொள்ள வேண்டிய இனிய வாழ்க்கைத்தத்துவம் இனிதுறப் புலப்படுத்தப் பட்டிருக்கக் காணலாம்.

இவ்வாறு நற்றிணையில் மிகப்பல பாடல்கள் நயம் மிக்கனவாய் அமைந்திருப்பதைக் காணலாம்.

# 2. குறுந்தொகை

எட்டுத் தொகை நூல்களுள் இரண்டாவதாக இடம் பெறுவது குறுந்தொகையாகும். இது நல்ல குறுந்தொகை என்று பாராட்டப் பெறுவதாகும். இது நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாவான நானூறு பாடல்களைக் கொண்டதாகும். தொகை நூல்களில் முதலாவதாகத் தொகுக்கப் பெற்ற நூல் குறுந்தொகையே என்பதற்குத் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் பின்வருமாறு காரணங்களைப் புலப்படுத்தியுள்ளாா.

குறுந்தெகையிலுள்ள சொற்றொடர் காரணமாகப் பெயர் பெற்ற புலவர்கள் அப்பெயராலேயே பிற நூல்களில் வழங்கப்பெறுவது போல அந்நூல்களிலுள்ள செய்யுட்பகுதி காாணமாகப் பெயர் பெற்றாரது பெயர் ஒன்றேனும் குறுந்தொகையில் வரவில்லை. இதனாலும் முதலிற் குறுந்தொகை தொகுக்கப்பட்டதென்பது தெளிவாகும்,' (குறுந்தொகை முகவுரை) மேலும் தொல்காப்பிய உரையாசிரியர்களாலும், சிலப்பதிகார உரையாசிரியர்களாலும் எட்டுத்தொகை நூல்களிலிருந்து மேற்கோள் காட்டப்படும் செய்யுட்கள் மிகுதியாகக் குறுந்தொகையிலிருந்துதான் என்பது தெரிய வருகிறது. ஏறத்தாழ 235 செய்யுட்கள் உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பெற்றிருக்கின்றன. பேராசிரியர் என்னும் தொல்பெரும் உரையாசிரியர் 380 செய்யுட்கு உரை எழுதினார்

என்றும், எஞ்சிய இருபது செய்யுட்களுக்கு உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் உரையெழுதினார் என்றும் ஒரு பழைய செய்தி நிலவுகிறது. தமிழர் தவக் குறைவால் அவ்விரு உரைகளும் இன்று கிடைக்கவில்லை.

யாப்பருங்கலக்காரிகை குறுந்தொகையில் முருகன் பற்றிய பாசுரம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப்பாடலினை எல்லாக் குற்றமுந் தீர்ந்த செய்யுள் எனப் பாராட்டுகின்றது. அச் செய்யுள் வருமாறு :

**தாமரை புரையும் காமர் சேவடி**
**பவழத் தன்ன மேனித் திகழொளிக்**
**குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்**
**நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்**
**சேவலங் கொடியோன் காப்ப**
**ஏம வைகல் எய்தின்றால் உலகே.**

இக்கடவுள் வாழ்த்துச் செய்யுளில் 'தாமரை' என்பதனால் மருத நிலமும், 'பவழம்' என்பதனால் நெய்தல் நிலமும், 'குன்றி' என்பதனால் முல்லை நிலமும், 'குன்று' என்பதனால் குறிஞ்சி நிலமும் என நானிலமும் சுட்டப் பெற்று ஊடலும் ஊடல் நிமித்தமுமான மருத நிலம் முதற் கண்ணும், கூடலும் கூடல் நிமித்தமுமான குறிஞ்சி நிலம் பாட்டின் இறுதிக் கண்ணும் கூறப்பெற்றிருப்பதால்

**ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்**

—திருக்குறள் : 1330

என்ற திருக்குறளின் கருத்திற்கேற்ப ஊடலில் தொடங்கிக் கூடலில் முடிகிறதெனலாம். காதலின் பெற்றியும் இஃதே யன்றோ!

குறுந்தொகையின் தனிச்சிறப்பு உவமை நயமாகும்.

தலைவியின் உயிர் மிகவும் சிறியது; அவளுடைய காமம் மிகவும் பெரியது என்று புலப்படுத்த வருகின்ற தோழி, பலாமரத்தில் சிறிய கொம்பில் பெரிய பழம் தொங்கியது போல என்னும் உவமையைக் காட்டுகிறாள்.

''பாதுகாப்பு இலதாகித் தன்னை தாங்குதற்குரிய கொம்யும் சிறியதாகித் தானும் பெரியதாகி இருக்கும் பழம் கனிந்து கொம்பினின்றும் உகும். அன்றிப் பிறராற் கொள்ளவும் படும்; அதுபோலத் தன்னை வேற்று வரை வினின்றும் பாதுகாப்பார் இலனாகி உயிரும் சிறயவாகிய இவளிடத்துக் காமம் பின்னும் கனியின் இவர் உயிர் விடுதலும் நேரும்; அன்றிப் பிறர் வரைந்து கொள்ளவும் முயல்வாரென்று உவமையை விரித்துக் கொள்க. பழம் மிகக் கனிந்து வருவதன்பின் உரிய காலத்தே உரியார் கொள்வதைப்போல இவள் உயிர் இறப்பதற்கு உரிய பருவத்தே இவளுக்குரிமையாகிய நீ வரைந்து கொள் வாயாக என்பது குறிப்பு.''

மேற்கண்டபடிக் கீழ்க்காணும் கபிலரின் குறுந் தொகைப்பாடல் ஒன்றிற்கு டாக்டர் உ. வே. சாமி தாதையர் குறிப்புரை வரைந்துள்ளார். அவ்வரிய உயரிய பாடல் வருமாறு :

**வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**
**சாரல் நாட செவ்வியை ஆகுமதி**
**யாரஃது அறிந்திசி னோரே சாரல்**
**சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்**
**உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.**

—குறுந்தொகை : 18

சங்க இலக்கியத்தில் நிறையவும் நிறைவாகவும் பாடல் ளைப் பாடிய பெருமைக்குரியவர் கபிலர் ஆதல் போல வரலாற்றுக் குறிப்புகளைத் தம் பாடல்களில் அமைத்துப் பாடியவர் பரணர் ஆவர். அவர் பாடியுள்ள குறுந்

தொகைப் பாடலொன்றில் நன்னனைப் பற்றிய குறிப் பொன்று காணக்கிடக்கின்றது.

''நீராடும் பொருட்டுச் சென்ற ஒள்ளிய நெற்றியை யுடைய பெண்ணொருத்தி அந்நீர் கொணர்ந்த பசுங் காயைத் தின்றதாகிய குற்றத்திற்காக, எண்பத்தொரு ஆண் யானைகளோடு அவளது எடைக்கு எடை பொன் னாற் செய்த பாவையைக் கொடுப்பவும் கொள்ளானாகி அப்பெண்ணைக் கொலை செய்த நன்னனைப் போலத் தாய், ஒரு நாளில் நகுதலையுடைய முகத்தைக் கொண்ட விருந்தினனாகித் தலைவன் வந்தானாக, பகைவர் மாறிட்டுபபோரிடும் போர்க்களத்தின் அருகில் இருக்கும் ஊரினரைப் போல துயில் கொள்ளாதவளாயினாள் தலைவி. நீக்குதல் இல்லாத நரகத்தின்கண் பெண் கொலை புரிந்த நன்னன் சென்று சேர்ந்தது போல, இத்தாயும் சென்று துன்பத்தை அனுபவிப்பாளாக.'' இவ்வாறு கூறினாள் தோழி.

**மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை**
**புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்**
**கொன்பதிற் றொன்பது களிற்றொடு அவணிறை**
**பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்**
**பெண்கொலை புரிந்த நன்னன் போல**
**வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை**
**ஒருநாள், நகைமுக விருந்தினர் வந்தெனப்**
**பகைமுக ஊரில் துஞ்சலோ இலளே.**

—குறுந்தொகை : 292

தாம் பாடிய பாடலுள் அமைந்துள்ள சிறந்த தொடரால் பெயர் பெற்ற புலவர் பலரைக் குறுந்தொகை நூலிற் காணலாம்.

தெய்வத்தாலாகிய கூட்டத்தின் பின்பு தலைவி, தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்று விடுவான் என்று ஐயுற்றபொழுது, அதனைக் குறிப்பாலுணர்ந்த

தலைவன், ''என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் எத்தகைய ஒத்த உறவின் முறையினராவர்? என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையில் உறவினர்? இப்பொழுது கூடியிருக்கும் யானும் நீயும் ஒருவரையொருவர் முன்பு எவ்வாறு அறிந்திருந்தோம்? இம் மூன்றும் இல்லையாகவும். செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் அம் மண்ணோடு கலந்து, அம்மண்ணின் தன்மையை அடைதல் போல அன்புடைய நம் நெஞ்சம் தாமாகவே ஒன்று கலந்துவிட்டன.''

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங் கலந் தனவே.**

—குறுந்தொகை : 40

இந்தப் பாடலைப் பாடிய புலவரின் பெயர் யாதோ அறியோம். இப்பாடலைப் பாடிய பின் அவர் 'செம்புலப் பெயல் நீரார்' என்றே அழைக்கப்பெற்றார்.

தலைவன் தலைவி நடாத்தும் அன்பான இல்லற வாழ்க்கையினைக்கூடலூர்கிழார் என்னும் குறுந்தொகைப் புலவர் அழகுறப்பாடுகின்றார்.

தோழி முற்றிய தயிரைப்பிசைந்த காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரலினைத் துடைத்துக்கொண்ட ஆடையைத் துவைக்காமல் உலர்த்திக் கொண்டு குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை மறைப்ப, தானே துழாவிச் சமைத்த இனிய புளிக் குழம்பைக் கணவன் இனிது என உண்பதனால் மனைவியின் முகமானது நுண்ணிதாக மகிழ்ந்தது.

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகை கமழக்**

**தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.**

—குறுந்தொகை : 167

உள்ளுறை உவமம், இறைச்சி ஆகிய பொருள்கள் குறுந்தொகைப் பாடல்களில் நிரம்ப இடம்பெற்றுள்ளன.

வயலருகிலுள்ள மாமரத்தினது கனிந்து வீழ்கின்ற இனிய பழத்தைப் பொய்கையிலுள்ள வாளை மீன்கள் கவ்வி உண்ணுதற்கு இடமாகிய ஊரையுடைய தலைவன், எம்முடைய வீட்டில் பெருமொழிகளைக் கூறிச்சென்று, தம்முடைய வீட்டில் ஆடியின் முன்னின்றார், தம் கையையும் காலையும் தூக்கத்தூக்கும் அவ்வாறே பிரதிபலிக்கின்ற கண்ணாடியில் தோன்றுகின்ற பாவையைப் போலத் தன்னுடைய மனைவிக்கு அவள் விரும்பியவற்றைச் செய்கிறான் எனக் காதற்பரத்தை குறிப்பிட்டாள்.

**கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉம் ஊரன்**
**எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்**
**கையும் காலும் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல**
**மேவன செய்யும் தன்புதல்வன் தாய்க்கே.**

—குறுந்தொகை : 8

இப்பாடலில் கழனி தலைவி உறையும் ஊராகவும், மாமரம் தலைவியாகவும், மாம்பழம் தலைவனாகவும் பழனம் பரத்தையர் சேரியாகவும், வாளைமீன் பரத்தையாகவும் கொள்ள இப்பாடல் உள்ளுறை உவமத்தை உள்ளடக்கியதாயிற்று எனலாம்.

இறைச்சிப் பொருள் இடம்பெறும் ஒரு பாடல் வருமாறு:

**கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்**
**கைம்மை உய்யாக் காமர் மந்தி**

**கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி**
**ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்**
**சாரல் நாட நடுநாள்**
**வாரல் வாழியோ வருந்துதும் யாமே.**

*—குறுந்தொகை : 69*

''கரிய கண்களையும் தாவுதலையும் உடைய ஆண் குரங்கு இறந்ததாக, கைம்மைத் துன்பத்தைப் பொறுக்க மாட்டாத விருப்பத்தையுடைய பெண் குரங்கானது, மரமேறுதல் முதலிய தம் தொழிலைக் கல்லாத வலிய குட்டியைச்சுற்றத்தாரிடத்து அடைக்கலமாகஒப்படைத்து, ஓங்கிய மலைப்பக்கத்தில் தாவி உயிரை மாய்த்துக் கொள்ளும் சாரலையுடைய நாட்டுக்குத் தலைவனே! நள்ளிரவில் வாராதே! வருந்துவோம்; நீ தீங்கின்றி வாழ்வாயாக!''

இப்பாடலில் தலைவனுக்கு ஏதேனும் ஏதம் உண்டானால் தலைவி, பெண் குரங்கு உச்சி மலை ஏறிக் கீழே பாய்ந்து உயிர்விட்டது போல இவளும் உயிரை மாய்த்துக் கொள்வாள் என்ற குறிப்பில் இறைச்சிப் பொருள் அடங்கியிருத்தல் காண்க.

குறுந்தொகைப் பாடல்களைப் பாடிய புலவர்கள் இருநூற்றைவர்; தொகுத்தவர் பூரிக்கோ.

இவ்வாறு குறுந்தொகைப் பாடல்கள் எளிமை, உவமை, உள்ளுறை, இறைச்சி, காதல் நுட்பம், கருத்துச் செறிவு, உணர்வோவியம், நுட்பமான இயற்கை வருணனை, வரலாற்றுக்குறிப்புகள் முதலான இன்னோரன்ன பல சிறப்புகள் அடங்கியிருக்கக் காணலாம். எட்டுத்தொகை நூல்களில் காதற் சிறப்பை நுட்பமாகப் புலப்படுத்தும் பாடல்கள் பலவற்றைக் கொண்டுள்ளது குறுந்தொகையே எனலாம். நல்ல குறுந்தொகை என்ற பாராட்டு இந்நூலிற்குப் பல்லாற்றானும் பொருத்தமுடையதாகும்.

# 3. ஐங்குறுநூறு

பாட்டும் தொகையும் சங்க நூல்கள் என வழங்கப் படும். பாட்டு எனப்படுவது பத்துப்பாட்டு, தொகை எனப்படுவது எட்டுத்தொகை. எட்டுத்தொகை நூல்கள் இவை இவை என ஒரு பழம்பாடல் குறிப்பிடுகிறது. அப்பாடல் வருமாறு :

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியே அகம்புறமென்று**
**இத்திறத்த எட்டுத் தொகை.**

எட்டுத்தொகை நூல்களுள் மூன்றாவதாக இடம் பெறுவது ஐங்குறு நூறு என்று இப் பாடல் வழிப் புலப் படுகின்றது. ஐங்குறு நூறு தன்னுடைய பெயருக்கேற்ப ஐந்நூறு பாடல்களும் சிதையாமல், அழியாமல் நமக்குக் கிடைத்துள்ளது நாம் பெற்ற பேறு எனலாம். அகப் பொருள் தழுவிய நூல்களுள் குறைந்த அடிகளைக் கொண்ட பாக்களைப் பெற்று அமைந்துள்ள நூல் ஐங்குறு நூறு ஆகும்.

## நூல் அமைப்பு

இந் நூல் மூன்றடிச் சிற்றெல்லையையும் ஆறடிப் பேரெல்லையையும் கொண்ட பாக்களை உடையத ாக

திகழ்கின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைப் பாகுபாட்டுடன் இந்நூல் விளங்குகிறது.

ஐங்குறு நூற்றின் பாடல்கள் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற வரிசைப்படி அமைந்துள்ளன, ஒவ்வொரு நூற்றையும் பத்துப் பத்துப் பகுதிகளாகப் பகுத்து, ஒவ்வொரு பத்திற்கும் தனித்தனித் தலைப்புகள் அமைத்துஅளனர். பிற்காலத்தில் பத்துப் பாடல்களின் தொகுதியைப் பதிகம் என்றும், நூறு பாடல்களின் தொகுதியைச் சதகம் என்றும் வழங்கினார்கள். எட்டுத்தொகை நூல்களிலேயே பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்ட நூல் பதிற்றுப் பத்து எனும் பெயரிலே வழங்கப்படுகின்றது. அது புறப்பொருள் தழுவிய நூல். ஆனால், ஐங்குறு நூறு அகப்பொருள் தழுவி ஐந்நூறு பாடல்களைக் கொண்ட தொகை நூலாகத் திகழ்கின்றது. பத்துப் பத்துப் பாடல்களாக அமைந்துள்ள தலைப்பு, அவ்வப்பாடல்களில் காணப்படும் கருத்துச் செறிவைப் புலப்படுத்தி நிற்கும் அருந்தொடர்களைத் தாங்கி நிற்கின்றன.

## நூல் சிறப்பு

பொருள் காரணமாக, சொல் காரணமாக ஒன்றிற்கொன்று தொடர்பு உடையனவாகப் புனையப்படும் செய்யுள் தொடர்நிலைச் செய்யுள் என்று சொல்லப் பெறும். ஐங்குறு நூறும் கலித்தொகையும் தொடர் நிலைச் செய்யுள் வகையைச் சார்ந்த நூல்கள் என்று சான்றோர் குறிப்பிடுவர். ஐங்குறு நூற்றுச் செய்யுள் அனைத்தும் அம்மை, அழகு எனும் வனப்புகளைக் கொண்டு புனையப்பட்ட செய்யுள் என்பர். மூன்று முதல் ஆறு அடிகள் வரை அமைந்துள்ள பாக்களில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனும் மூன்றினையும் தன்னகத்தே கொண்ட இலக்கிய நயத்தினை நயம்படப் புலப்படுத்தியுள்ள செய்யுள்கள் ஐங்குறு நூற்றின் தனிச் சிறப்பாகும்.

## தொகுத்தோரும், தொகுப்பித்தோரும்

இவ் அழகு நூலைத் தொகுத்த ஆசிரியர் சங்கப் புலவ ராகிய புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்பர். தொகுப்பித்தோர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை எனும் சேர வேந்தன் என்று செப்புவர். கூட லூர் கிழார் சேரநாட்டைச் சேர்ந்த புலவர் என்பர் தமிழ்த்தாத்தா உ.வே சாமிநாதையர்.

## ஐங்குறு நூற்றுப்புலவர் பெருமக்கள்

பழம்பாடல் ஒன்று ஐங்குறு நூற்றைப் பாடிய புலவர் பெருமக்கள் பெயரினைப் புலப்படுத்துகிறது.

**மருதம் ஓரம்போகி; நெய்தல் அம்மூவன்;**
**கருதும் குறிஞ்சி கபிலன்; கருதிய**
**பாலை ஓதலாந்தை; பனி முல்லை பேயனே**
**நூலை ஓது ஐங்குறு நூறு.**

—பழம் பாடல்

எனவே, மருதத் திணையினை ஓரம்போகியாரும் நெய்தல் திணையினை அம்மூவனாரும், குறிஞ்சித் திணை யினைக் கபிலரும், பாலைத் திணையினை ஓதலாந்தை யாரும், முல்லைத் திணையினைப் பேயாரும் பாடியுள்ள னர் என்பது இப்பாடற் பகுதியில் இருந்து நமக்குப்புலனா கின்றது. இந் நூலினை ஐம்பெரும் பகுதிகளாகப் பிரித்துப் பகுதி ஒன்றிற்குப் பத்துப் பாடல் அடங்கிய பத்துப் பத்துப் பாடல்களை உட்பிரிவாகக் கொண்டு அமைத்து, ஒவ்வொரு தலைபிற்கும் முதல், கரு, உரிப்பொருள்களை இணைத்துப் பத்து என்று பெயரிட்டுத் தொகுத்திருக்கின்ற முறையை இந் நூலினைத் தொகுத்த கூடலூர் கிழார் ஒவ்வொரு திணையைப் பாடியபெருமக்களின் சிறந்த பாடல்களைத் தேர்ந்து தெளிந்து ஒரு சிறந்த நூலாக ஐங்குறு நூற்றினை உருவாக்கியுள்ளார் என்று

கருதலாம். ஐங்குறு நூற்றைப் பாடியுள்ள புலவர்கள் அனைவரும் சங்கச் சான்றோர்களாவார். அவர்கள் இலக்கிய நயம் தோய்ந்த இனிய பாடல்களை யாத்துள்ளனர் என்று ஐங்குறு நூற்றுப் பாடல்களை மேம்போக்காகப் படிப்பவர்களுக்கே விளங்கும். இந்நூற்பாடலிலுள்ள நயம் கெழுமிய செய்யுள்களும், செய்யுட்பகுதிகளும் வருமாறு :

## மருதம்

### வேட்கைப் பத்து

**நெல்பல பொலிக! பொன் பெரிது சிறக்க!**
**விளைக வயலே! வருக இரவலர்!**
**பால்பல ஊறுக! பகடுபல சிறக்க!**
**பகைவர் புல்ஆர்க! பார்ப்பார் ஓதுக!**
**பசிஇல் லாகுக! பிணிசேண் நீங்குக!**
**வேந்து பகை தணிக! யாண்டுபல நந்துக!**
**அறம்நனி சிறக்க! அல்லது கெடுக!**
**அரசுமுறை செய்க! களவு இல்லாகுக!**
**நன்றுபெரிது சிறக்க! தீது இல்லாகுக!**
**மாரி வாய்க்க! வளம்நனி சிறக்க!**

## நெய்தல்

### தாய்க்கு உரைத்த பத்து

**பூப் போல் உண்கண் மரீஇய**
**நோய்க்கு மருந்து ஆகிய கொண்கண் தேரே!**

**துன்புறு துயரம் நீங்க**
**இன்புற இசைக்கும் அவர்தேர் மணிக் குரலே!**

தண்ணம் துறைவன் வந்தென
பொன்னினும் சிவந்தன்று கண்டிசின் நுதலே

தண்கடற் படு திரை கேட்டொறும்
துஞ்சாள் ஆகுதல் நோகோ யானே,

எம்தோள் துறந்த காலை யெவன்கொல்
பல்நாள் வரும் அவன் அளித்த பொழுதே!

## தோழிக்கு உரைத்த பத்து

மாலை வந்தன்று, மன்ற
காலை அன்ன காலை முந்துறுத்தே!

## ஞாழற் பத்து

புள்இறை கூரும் துறைவனை
உள்ளேன் - தோழி! - படீஇயர் என் கண்ணே!

## வெள்ளாங் குருகுப் பத்து

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென
காணிய சென்ற மடநடை நாரை
கானற் சேர்க்கும் துறைவனோடு
யான் எவன் செய்கோ! பொய்க்கும் இவ் ஊரே!

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப, ததைந்த தெய்தல் கழிய
ஓதமொடு பெயரும் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென், யானே!

நின்ஒன்று இரக்குவென் அல்லேன்!
தந்தனை சென்மோ கொண்ட இவள் நலனே!

## குறிஞ்சி

### அன்னாய் வாழிப் பத்து

**அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம் படப்பைத்**
**தேன்மயங்கு பாலினும் இனிய - அவர் நாட்டு**
**உவலைக் கூவற்கீழ**
**மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே**

### அம்ம வாழிப் பத்து

**அம்ம வாழி, தோழி! நம் மலை**
**வரை ஆம் இழிய, கோடல் நீட**
**காதலர்ப் பிரிந்தோர் கையற நலியும்**
**தண்பனி வடந்தை அற்சிரம்**
**முந்து வந்தனர் - நம் காத லோரே**

### குரக்குப் பத்து

**சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்**
**குரங்கின் வன்பறழ் பாய்ந்தென, இலஞ்சி**
**மீன்எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்**
**ஊற்றோர் மறவா நோய்தந்து,**
**கண்டோர் தண்டா நலம்கொண் டனனே!**

## பாலை

### இளவேனிற் பத்து

**அவரோ வாரார்: தான் வந்தன்றே -**
**குயிற்பெடை இன்குரல் அகவ**
**அயிர்க்கேழ் நுண்அறல் நுடங்கும் பொழுதே**

இத்தனை அரிய நயங்களைக் கொண்ட பாடல்களாக ஐங்குறு நூற்றுப் பாடல்கள் அமைந்துள்ளன.

# 4. பதிற்றுப்பத்து

ஒவ்வொரு சேரவேந்தரைப் பற்றிப் பத்துப் பத்துப் பாட்டுகளாகச் சேரமன்னர் பதின்மரைப் பற்றிய நூறு பாட்டுகள் கொண்ட தொகுதியாதலின் இந்நூல் பதிற்றுப் பத்து எனப் பெயர் பெற்றது. பதிற்றுப்பத்து சங்க இலக்கியத்தைச் சேர்ந்த எட்டுத்தொகை நூற்களில் ஒன்று. முதற்பத்தும் இறுதிப்பத்தும் இன்று கிடைக்கவில்லை. எஞ்சிய எட்டுப்பத்துக்களே இன்று பதிற்றுப்பத்துத் தொகுதியில் காணப்படுகின்றன.

இரண்டாம் பத்தில் ஊதியஞ்சேரலின் மகனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணாரும், மூன்றாம் பத்தில் பல் யானைச் செல்கெழு குட்டுவனைப் பற்றிப் பாலைக் கௌதமனாரும், நான்காவது பத்தில் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைப்பற்றிக் காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாவது பத்தில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டு வனைப் பற்றிப் பரணரும், ஆறாம் பத்தில் ஆடு கோட் பாட்டுச் சேரலாதனைப் பற்றிக் காக்கை பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம் பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பற்றிக் கபிலரும், எட்டாவது பத்தில் பெருஞ்சேரலிரும்பொறையைப் பற்றி அரிசில் கிழாரும், ஒன்பதாவது பத்தில் குடக்கோ இளஞ்சேரலிரும் பொறையைப் பற்றிப் பெருங்குன்றூர்க்கிழாரும் பாடி யுள்ளனர். முதல்பத்து உதியன் சேரல் என்பானைப் பற்றி

இருத்தல் வேண்டும் எனவும், பத்தாவது பத்து யானைக் கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்பானைப் பற்றியதாக இருத்தல் வேண்டுமெனவும் அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

பதிற்றுப்பத்து காட்டும் செய்திகளைக் கொண்டு பழந்தமிழ் நாட்டின் வரலாற்றினை ஒருவாறு கணிக்கலாம். பொதுவாகச் சேரநாடு நிலவளமும் நீர்வளமும் பெற்ற நாடாக இருந்தது. அந்நாட்டில் நெய்தல், குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நான்கு நிலத்துப் பொருள்களும் ஒருங்கே விளைந்து மலிந்திருந்த செய்தி இரண்டாம் பத்தால் அறியப்படுகின்றது.

**கடலவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்**
**வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு**

—பதிற்றுப்பத்து 15: 16-17

அந்நாட்டு மக்கள் பிறர்க்குரிய பொருளை விழையாதவர்களாகவும், குற்றமில்லாத அறிவுடையவர்களாகவும், செந்நெறியினின்றும் பிறழாதவர்களாகவும், அன்பு நெறியைக் கடைப்பிடிப்பவர்களாகவும், தமக்குக் கிடைத்த பொருளைப் பலரொடும் பகுத்துண்ணும் பண்பாளராகவும் கூறப்படுகிறார்கள். பணியாற்றாமல் வீணே மூத்துப் போன யாக்கையினையும், நோயையும் இல்லாதவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர்.

**கடலுங் கானமும் பலபயம் உதவப்**
**பிறர்பிறர் நலியாது வேற்றுப்பொருள் வெஃகாது**
**மைஇல் அறிவினர் செவ்விதின் நடந்துதம்**
**அமர்துணைப் பிரியாது பாத்துண்டு மாக்கள்**
**மூத்த யாக்கை யொடு பிணியின்று கழிய**

—பதிற்றுப்பத்து 22: 6-10

மருதநிலத்தில் வாழும் மகளிர்தம் செல்வச் செழிப்பு, அவர்கள் இரவிலும் பகலிலும் தாங்கள் அணிந்திருக்கும் பசிய அணிகலன்களைக்கூடக் களையாமல் குரவைக் கூத்தினை விரும்பியயர்ந்தார்கள் என்ற செய்தியினை அரிசில்கிழார் குறிப்பிடுகின்றார்.

**மருதஞ் சான்ற மலர்தலை விளைவயல்**
**செய்யுள் நாரை ஒய்யும் மகளிர்**
**இரவும் பகலும் பாசிழை களையார்**
**குறும்பல் யாணர்க் குரவை அயரும்**

—பதிற்றுப்பத்து 73: 4-7

துணங்கைக் கூத்து ஆடுமிடங்களில் சுரை நிறைய நெய் சொரிந்து பெரிய திரியிடப்பட்டு நெடுவிளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் என்ற செய்தியும் தெரியவருகின்றது.

**சுடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து**
**முழாஇமிழ் துணங்கை**

—பதிற்றுப்பத்து 52: 13-14

சேர மன்னர்களும் சரி, சேர நாட்டு மறவர்களும் சரி அவர்கள் வீரத்திற்குப் பேர் போனவர்கள். சேரர்கள் கடற் போரில் வல்லவர்கள். செங்குட்டுவன் கடற்படை கொண்டு சென்று பகைவரைத் தாக்கி வெற்றி பெற்ற செய்தி பதிற்றுப்பத்துள் இடம் பெற்றுள்ளது.

**கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்**
**டுடை திரைப் பரப்பிற் படுகட லோட்டிய**
**வெல்புகழ்க் குட்டுவன்**

—பதிற்றுப்பத்து 46: 11-13

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆரியர் நெருங்கி வசிக்கும் பேரிசை இமயம் முதல் தென் திசைக்குமரி வரை பல போர்களை நிகழ்த்தி வென்று யானை மீதமர்ந்து

பலர் புகழப் பாடும் வீரச் செல்வத்தில் தலையாக நின்றார் என்பதனைக் குமட்டூர்க் கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

**வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்**
**பொலனணி எருத்தம் மேல்கொண்டு பொலிந்தநின்**
**பலர்புகழ் செல்வம் இனிதுகண் டிகுமே**
**கவிர்ததை சிலம்பில துஞ்சும் கவரி**
**பரந்திலங்கு அருவியொடு நரந்தம் கனவும்**
**ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்**
**தென்னங் குமரியொ டாயிடை**
**மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே**

—பதிற்றுப்பத்து 11: 18-25

செங்குட்டுவனின் படைவீரர்கள் அம்பு தம் மார்பில் பட்டாலும் தளராமற் சென்று போர் புரிவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

**பொலம்பூந் தும்பைப் பொறிகிளர் தூணிப்**
**புற்றடங்கு அரவின் ஒடுங்கிய அம்பின்**
**ஒசிவுடை வில்லின் ஒசியா நெஞ்சின்**

—பதிற்றுப்பத்து 45: 1-3

மேலும் சேர வீரர்கள் பகைவர்மதில் கடந்தல்லது உணவை உண்ணமாட்டோம் எனச் சூளுரை செய்து விட்டு, சமையல் செய்யுங் கலங்களை மதிலுக்குள் போட்டு விட்டு மதிலைவென்று உட்புகுந்த பிறகே அடுத்தவேளை உணவைச் சமைத்துண்பர் என்று கூறப்படுகின்றது.

**மண்புனை இஞ்சி மதின்கடந்து அல்லது**
**உண்குவம் அல்லேம் புகாவெனக் கூறி**

—பதிற்றுப்பத்து 58: 6-7

சேருடைய யானைப் படையும் ஆற்றல் வாய்ந்த தாயிருந்தது. மேக முழக்கங்கேட்டாலுங்கூடப் போர்

முரசு கேட்டது போலக் கருதிக் கட்டவிழ்த்துக் கொண்டு தலைநிமிர்ந்து நடைபோடுகின்ற யானைகளைப் புலவர் அழகுறச் சித்திரிக்கின்றார்.

**போர்ப்புறு முரசம் கண்ணதிர்ந் தாங்கு**
**கார்மழை முழக்கினும் வெளில்பிணி நீவி**
**நுதலணைந்து எழுதரும் தொழில் நவில் யானை**

—பதிற்றுப்பத்து 84: 2-4

சேரர் வீரத்தில் மேம்பட்டுச் சிறந்திருந்தமை போன்றே நெஞ்ச ஈரத்திலும் சிறந்து விளங்கினர். அவர்கள் கொடை மனம் மிகுந்தவர்கள். செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் மன்னன் பெரும் பொருள்களைப் பிறருக்குக் கொடையாகக் கொடுத்தற்கு ஒரு நாளும் வருந்தமாட்டான் எனவும், கொடை வழங்குந்தோறும் அதற்காக மகிழமாட்டான் என்றும், கொடுக்கும் போதெல்லாம் நிரம்பக் கொடுப்பான் என்றும் குறிப்பிடப் படுகின்றான்.

**ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான்**
**ஈத்தொறும் மாவள் ளியனென நுவலுநின்**
**நல்லிசை தரவந் திரினே.**

—பதிற்றுப்பத்து 61: 12-14

செங்குட்டுவன் தனக்கு என ஒருவகைச் சோற்றினையும் பிறர்க்கு என்று இன்னொரு வகைச் சோற்றினையும் சமைக்குமாறு உத்திரவிடும் வழக்கம் இல்லாதவனென்பதனைப் பரணர் அழகுறக் குறிப்பிட்டுள்ளார்.

**சோறு வேறு என்னா ஊன்துவை யடிசில்**

—பதிற்றுப்பத்து: 45-13

மேலும் போர்க்களத்தே பெற்ற அரிய பெரிய பொருளையும் தன்னைச் சுற்றியுள்ளவர்க்கு வாரி வழங்கி

விடுகின்ற வள்ளன்மை மிக்குடையன் செங்குட்டுவன் என்பதையும் பரணர் புலப்படுத்தியுள்ளார்.

**பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற**
**அரிய என்னாது ஓம்பாது வீசி**

—பதிற்றுப்பத்து 44: 3-4

பதிற்றுப்பத்துப் பாடல்கள் ஆழ்ந்த கவியின்பமும்' அரிய சொல்லாட்சியும், அழகிய உவமை நயமும் கொண்டு திகழும் ஒரு வரலற்றுப் பெட்டகமாகும். சங்ககாலத்தில கவிப்புலமை ஓச்சிய சிறந்த புலவர் பெருமக்களின் படைப்பாகப் பதிற்றுப்பத்துத் திகழ்கின்றது, சேரநாட்டு மன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரளாதனுடைய மனைவி சீற்றங்கொள்ளாது அமைந்த கற்பினையுடையவள் என்பதும், ஊடற் காலத்திலேயும் இனிய சொற்களையே கூறுபவள் என்பதும் கவிக் கூற்றாகும்.

**ஆறிய கற்பின் அடங்கிய சாயல்**
**ஊடினும் இனிய கூறும் இன்னகை**

—பதிற்றுப்பத்து 16: 10-11

இத்தகைய சொற்சித்திரம் கவிஞனின் கவினார் படைப்புத் திறனை விளக்கும். ''உன் மனைவியோடு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்வாயாக'' என்று பாலைக் கௌதமனார் சேர மன்னனை வாழ்த்துகிறார்.

**வேயுறழ் பணைத்தோள் இவளோடு**
**ஆயிர வெள்ளம் வாழிய பலவே**

—பதிற்றுப்பற்று 21: 37-38

அரசனை வாழ்த்தும் புலவர்கள் தக்க சமயத்தில் அறிவுரை கூறவும் தவறவில்லை. கோபம், காமம், அளவிறந்த கண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல், கழி

பேரன்பு, அழுக்கும் மனப்பான்மை, கொடுமை ஆகிய பண்புகள் மன்னர்கள் தவிர்க்கத்தக்கன என்று அறிவுரை கூறியுள்ளார்.

**சினனே காமம் கழிகண்ணோட்டம்**
**அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை**
**தெறல்கடு மையொடு பிறவுமிவ் வுலகத்**
**தறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்**
**தீதுசேண் இகந்து நன்றுமிகப் புரிந்து**

—பதிற்றுப்பத்து 22: 1-5

ஒவ்வொரு பத்தின் முடிவிலும் ஒரு பதிகம் காணப்படுகின்றது. சில பதிகங்களிற் காணப்படும் செய்திகள் நுலினுள்ளே அமைந்த பாடற் செய்திகளோடு பொருந்தி வரவில்லை. பதிற்றுப்பத்தின் சில தொடர்கள் அப்படியே சிலப்பதிகாரத்தில் பயின்று வந்திருக்கக் காணலாம். பதிற்றுப்பத்தின் காலம் இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனலாம். சங்ககாலச் சேரர் வரலாற்றை அறியப் பெரிதும் துணை செய்வது பதிற்றுப்பத்தேயாகும்.

# 5. பரிபாடல்

எட்டுத்தொகை நூல்களுள் பதிற்றுப்பத்தை அடுத்துப் 'பரிபாடல்' அமைகின்றது. இந்நூல் 'ஓங்கு பரிபாடல்' எனும் அடைமொழியால் குறிப்பிடப் படுகின்றது. பரிபாடல் எனும் பாவினத்தால் ஆகிய பாக்களின் தொகுதி ஆதலின் இந் நூலுக்குப் 'பரிபாடல்' என்று பெயராயிற்று. பரிபாடலில் அமைந்துள்ள பாக்கள் பண்ணமைதியோடு பொருந்தியவையாகும். பக்தியோடு மக்கள் மனமுருகிப் பாட உறுதுணையாக அமையும் வகையில் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

## பரிபாடலின் பழமை

தமிழ் முதற்காப்பியமாம் சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த தொல்லாசிரியராம் நல்லாசிரியர் அடியார்க்கு நல்லார், தம்முடைய சிலப்பதிகார உரைக்கண் முத்தமிழ்ச் சங்கம் முற்காலத்தில் முறையுற விளங்கிய வரலாற்றை விரித்துரைக்கும்பொழுது அவர்,

> **முதலூழி யிறுதிக்கண் தென் மதுரையகத்துத் தலைச் சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும், குமரவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என்றிவருள் ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்**

**தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும், களரியாவிரையும் உள்ளிட்டவற்றைப் புனைந்து.**

என்று குறிப்பிட்டுள்ளார். இதுபோன்றே, கடைச்சங்க காலத் தனிபெரும் புலவர் நக்கீரனார். தாம் வகுத்த இறையனார்களவியலுரையுள், முதற் சங்கப் புலவர்களுள் ஒருவராகக் 'கீரந்தையார்' என்பவரைக் குறிப்பிடுகின்றார். அக்கீரந்தையார் பாடியதாக ஒரு பாடல் பரிபாடலில் இடம்பெற்றுள்ளது. ஆனால், பரிபாடலை இதுகொண்டு முதற் சங்கத்தைச் சார்ந்த நூல் என்று நுவலமுடியாது. ஏனென்றால், மாமதுரையிலே திருப்பரங்குன்றமும், மாலிருங்குன்றமும், வையை ஆறும் பரிபாடலில் பல இடங்களில் பரக்கப்பேசப்படுகின்ற காரணத்தால், பரிபாடல் கடைச்சங்க நூல் என்றே முடிவுகட்டலாம். பரிபாடல் எனும் 'பா' அமைப்பு முதற் சங்க காலத்தையே சார்ந்து விளங்கிற்று எனக்கொண்டாலும், எண்ணற்ற பரிபாடற் செய்யுட்கள் அன்று இயற்றப்பட்டிருந்தாலும் இன்று அவை அனைத்தும் நமக்குக் கிடைக்காமை நம்முடைய நற்பேறின்மையேயாகும்.

## எழுபது பரிபாடல்

பரிபாடல்களில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை அந்நூல் தொகுக்கப்பெற்ற காலத்தில் எழுபதாக இருந்தது என்பதனைப் பின்வரும் பழம்பாடல் உணர்த்தும்.

**திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்**
**தொருபாட்டுக் காடுகிழாட் கொன்று—மருவினிய**
**வையையிரு பத்தாறு மாமதுரை நநன் கென்ப**
**செய்ய பரிபாடல் திறம்.**

ஆயினும் இந்நாளில் நமக்குக் கிடைத்துள்ள பரிபாடலின் எண்ணிக்கை இருபத்திரண்டு மட்டுமேயாகும் மேலும், இரண்டு பாடல்கள் தொல்காப்பிய உரையாசிரியர்களின் மேற்கோள் செய்யுட்களிலிருந்து கிடைத்தன. ஆக, இரு பத்துநான்கு பாடல்களை முழுவையாகக் காணுகின்றோம். மேலும் சில பாடற்பகுதிகளும் கிடைத்துள்ளன.

## அமைப்பு முறை

பரிபாடலில் நமக்கு இப்போது கிடைத்துள்ள இவ் இருபத்துநான்கு பாடல்களையும் காணும்பொழுது இந் நூலின் அமைப்புமுறை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. காலப்பழமை கருதியோ அல்லது ஆசிரியர்களை யொட்டியோ அல்லது பாடற்குரிய தெய்வங்களை யொட்டியோ இப் பரிபாடல் தொகுக்கப்பெற்றதாகக் கருத இயலாது. பரிபாடலில் அமைந்துள்ள பண்களின் அமைதி கருதியே பரிபாடலின் அமைப்புமுறை அமைந்துள்ளதனை நாம் உணரலாம். பரிபாடலின் முதல் பன்னிரண்டு பாடல்கள் 'பாலை யாழ்'ப் பண்ணில் அமைந்துள்ளன. அடுத்து வரும் ஐந்து பரிபாடல்கள் நோதிறப் பண்ணில் அமைந்துள்ளன. அடுத்து வரும் நான்கு பரிபாடல்கள் காந்தாரப் பண்ணில் அமைந்துள்ளன. இறுதிப் பாடலின் பண் இன்னதெனத் தெரியவில்லை. ஆனால் அந்த இறுதிப் பாடலின் பண் காந்தாரம் என்பதை நாம் ஊகிக்கலாம். இப் பண்களை அமைத்த இசை ஆசிரியர்களுள் பத்துப்பாடல்களுக்கு நல்லச்சுதனார் இசையமைத்துள்ளார் என்பதை அறிய வருகிறோம். இசை மரபினால் பரிபாடல் இசையைக் காத்துவந்தார்கள் என்பதும், அவர்கள் காத்த பரிபாடல்களே நமக்குக் கிடைத்துள்ளன என்பதும் விழாக்காலங்களில் வந்துகூடும் பெருமக்களை மகிழ்விக்க இசையுடன் பொருந்திய இனிய பரிபாடலை அவர்கள் பாடினார்கள் என்பதும் இங்கே விளங்கும்.

## மதுரை பற்றிய குறிப்பு

பரிபாடல் மதுரை மாநகரையும் மதுரை நகருக்கு வளமும், வனப்பும், காப்பும் தந்த வையை ஆற்றையும், மதுரையைச்சார்ந்த திருப்பரங்குன்றத்துச் செவ்வேளாகிய திருமுருகனையும், மதுரையை அடுத்துள்ள திருமாலிருங் குன்றத்து நெடுவேளாகிய மாயோனையும், கொற்றவை தெய்வத்தையும் பாடுவதாக அமைந்துள்ளன. பிற தொகை நூற்களைப் போலன்றிக் தமிழ்நாட்டின் பகுதி களையெல்லாம் கொண்டு எழுந்த செய்யுள்களாக அல்லா மல், மதுரை நகரரையும், மதுரையையொட்டி ஓடுகின்ற வையை ஆற்றையும், திருபரங்குன்றத்தையும், திருமாலிருங் குன்றத்தையும் பாடுபொருளாகக் கொண்டு பரிபாடல் எழுந்துள்ளது என்பதனால் இந்நூலினை மதுரையைப் பற்றி எழுந்த நூல் என இனங்கண்டு தெளியலாம்.

பரிபாடல் அகமும் புறமுமான இரு செய்திகளையும் கொண்டு அமைந்துள்ள நூலாகும். ஏனென்றால், இந்நூல் ஐந்திணைப் பொருட்களைக் கொண்டு அமையா மல் தெய்வவணக்கப் பாடல்களாகவே அமைந்துள்ளன என்றும் கூறுவர். அதற்குக் காரணம், குறிஞ்சிக்குரிய தெய்வம் முருகனும், முல்லைக்குரிய தெய்வம் திருமாலும், பாலைக்குரிய தெய்வம கொற்றவை எனும் காடுகிழாளும், மருதத்திற்குரிய தெய்வம் மதுரை மா தெய்வமும். நெய் தலுக்கு வையையாகிய நீர்த் தெய்வமும் எனக்கொண்டு இந்நூல் எழுந்துள்ளது என்பர். வையை பற்றி எழுந் துள்ளபாடல்கள் அதனை ஆறாகக்கொண்டு அதன் அழகை வியந்து போற்றாமல், பரவிப்போற்றுகின்ற வகையில் அமைந்துள்ளதைக் காணலாம்.

## பரிபாடல் இலக்கணம்

''இது தொகைநிலை வகையால் 'பா' என்று சொல்லப் படும் இலக்கணமின்றி, அனைத்துப் பாவிற்கும் பொது வாக நிலைக்கக் கூடியதாய், இன்பப்பொருளைப் பற்றிக்

கூறும் இருபத்தைந்து அடிச் சிற்றெல்லையும் நானூறு அடிப் பேரெல்லையும் கொண்டுவரும்'' என்று தொல்காப்பியம், பரிபாடலின் இலக்கணம் கூறும்.

**பரிபாடற்கண் மலையும் யாறும் ஊரும்**
**வருணிக்கப்படும்.**

என்பர் இளம்பூரணர்.

உரையாசிரியர், பேராசிரியர் ''அறம்பொருள் இன்பம் வீடு எனும் உறுதிப் பொருள் நான்கினுள் இன்பத்தைப் பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியனவற்றில் இப் பாடல் வரும்'' என்று குறிப்பர்.

உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், ''தெய்வ வாழ்த்து உட்படக் காமப்பொருள் குறித்து உலகியலே பற்றி வரும் என்று இதன் இலக்கணத்தைச் சுருக்கமாகச் சுட்டுவர்.

## பரிபடல்கள் இருபத்திரண்டு

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட் டாயிரு பாவினும்**
**உரிய தாகும் என்மனார் புலவர்** —அகம். : நூ. 51

என்கிற தொல்காப்பிய அகத்திணை நூற்பாலால் 'அகப் பொருள் செய்திகளை நாடக வழக்கினும், உலக வழக்கினும் பொருத்தி அழகுறப் பாடற்கு உரியன கலிப்பாவும் பரிபாடலுமே' எனும் உண்மையினை அறியலாம்.

இன்று கிடைக்கும் இருபத்திரண்டு பாடல்களுள் 1, 2, 3, 4, 13, 15-ஆம் எண்ணுள்ள பாடல்கள் ஆறும் திருமாலைப்பற்றியன வாகும். இவை அன்றிப் பரிப்பாடற் பகுதிகளில் உள்ள பாடல்களுள் ஒன்றும் திருமாலைப்பற்றியதாகும். இவ்வகையில் திருமாலைப் பற்றிய எட்டுப்

பாடல்களுள் ஏழு பாடல்கள் நமக்கு இன்று கிடைத்துள்ளன. இப்பாடல்களை இளம்பெருவழுதியார், கடுவன் இளவெயினனார், கீரந்தையார், நல்லெழுநியார் எனும் சங்கச் சான்றோர்கள் பாடியுள்ளனர். பரிபாடலின் முதல் நான்கு பாடல்கள் திருமாலைப் பற்றியனவாக அமைந்திருப்பது, திருமால் வணக்கப்பாடலின் பழமையினையும், சிறப்பினையும் ஒருங்கே புலப்படுத்தும்.

செவ்வேளைப் பற்றிக் கிடைத்துள்ள பாடல்களின் எண்ணிக்கை எட்டாகும். இவை 5, 8, 9, 14, 17, 18, 19 21-ஆம் பாடல்களாகும். இவற்றைப் பாடிய சான்றோர் கடுவன் இளவெயினனார், நல்லந்துவனார், குன்றம்பூதனார், கேசவனார், நப்பண்ணனார், நல்லழிசியார், நல்லச்சுதனார் என்போர் ஆவார். இவர்களுள் குன்றம்பூதனார் எனும சங்கப் புலவர் மட்டுமே இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். செவ்வேளுக்குரிய முப்பத்தொரு பாடல்களுள் இவ்வெட்டுப்பாடல்களே நமக்கு இன்று கிடைத்துள்ளன. மற்றைய பாடல்கள் மறைந்து போயின.

வையை பற்றிய இருபத்தாறு பாடல்களுள் ஒன்பது பாடல்களே இன்று நமக்குக் கிடைத்திருக்கிறன. இவற்றைப் பாடிய புலவர் பெருமக்கள் பெயர்கள் பின்வருமாறு: நல்லந்துவனார், மையோடக் கோவனார், கரும்பிள்ளைப் பூதனார், நல்வழுதியார், நல்லழிசியார் ஆகியோர் ஆவர். மதுரை பற்றிய பரிபாடல்கள் நான்கும் கொற்றவைக்குரிய பாடல் ஒன்றும் கிடைக்காமற் போயுள்ளன.

## பக்தி நூல்

பிற்காலத்தில் தேவார மூவராலும், மாணிக்கவாசகராலும் ஆழ்வார்கள் பன்னிருவராலும் பாடப்பெற்ற பக்தி இலக்கியங்களுக்கு முன்னோடியாக இப் பரிபாடல் பாக்கள் அமைந்தன எனலாம். பரிபாடல்கள், தெய்வத்தை முன்னிறுத்தி எழுந்த பாடல்களாகச் சுவை நலம் சிறந்திருக்கக் காணலாம்.

## பரிபாடலில் இனிய சில பகுதிகள் வருமாறு

திருப்பரங்குன்றத்தில் முருக அடியார்கள் முருகப் பெருமானிடம் வேண்டுவன பின்வருமாறு :

**.............................யாஅம் இரப்பவை**
**பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருளிணர்க் கடம்பின் ஒளிதாரோயே**

—பரிபாடல் 5: 78-81

திருமாலைப் பற்றிவரும் பாடல் ஒன்றில்,

**யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக!**

எனும் பகுதி ஆழ்ந்து நோக்கத் தக்கதாகும். அதேபோல,

**தமிழ் வையைத் தண்ணம் புனல்**

எனும் பகுதி வையை ஆற்றைத் தமிழோடு இணைத்துப் பேசுகிறது.

எங்குமாய் எல்லாமாய் நிறைந்துள்ள திருமாலைப் பின் வருமாறு பரிபாடல் ஆசிரியர் குறிப்பிடுன்கிறார்.

**சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு,**
**அவையும் நீயே, அடுபோர் அண்ணால்!**
**அவைஅவை கொள்ளும் கருவியும் நீயே;**
**முந்து யாம்கூறிய ஐந்தனுள்ளும்,**
**ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே;**
**இரண்டின் உணரும் வளியும் நீயே;**
**மூன்றின் உணரும் தீயும் நீயே;**
**நான்கின் உணரும் நீரும் நீயே;**
**ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே;**
**அதனால், நின்மருங்கின்று-மூ-ஏழ் உலகமும்,**

**மூலமும், அறனும், முதன்மையின் இகந்த**
**காலமும், விசும்பும், காற்றொடு கனலும்**
**தன்உரு உறழும் பாற்கடல் நாப்பண்,**
**மின்அவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த**
**கவைநா அருந்தலைக் காண்பின் சேக்கைத்**
**துளவம் சூடிய அறிதுயி லோனும்—**

—பரிபாடல் *13; 14-29*

*பிறிதோர் இடத்தில் திருமாலைப் பின்வருமாறு போற்றுகின்றார்:*

**மாஅயோயே! மாஅயோயே!**
**மறுபிறப்பு அறுக்கும் மாசுஇல் சேவடி**
**மணிதிகழ் உருபின் மாஅயோயே!**
**தீவளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்,**
**ஞாயிறும், திங்களும், அறனும், ஐவரும்,**
**திதியின் சிறாரும், விதியின் மக்களும்,**
**மாசுஇல் எண்மரும், பதினொரு கபிலரும்,**
**தாமா இருவரும், தருமனும், மடங்கலும்,**
**மூஏழ் உலகமும், உலகினுள் மன்பதும்,**
**மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம்—**
**மாயா வாய்மொழி உரைதர வலந்து;**
**'வாய்மொழி ஓடை மலர்ந்த**
**தாமரைப் பூவினுள் பிறந்தோனும், தாதையும்,**
**நீஎன மொழியுமால், அந்தணர் அருமறை.**

—பரிபாடல் *3; 1-14*

*மேலும், சாமவேதத்தின் தெளிந்த பொருளாகத் திருமால் விளங்குவதனை,*

**தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;**
**கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;**
**அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;**
**வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;**
**வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;**
**அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ; ஆதலின்**

உறையும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமார் அனையை;
முதல்முறை, இடைமுறை, கடைமுறை, தொழிலில்
பிறவாப் பிறப்பு இலை; பிறப்பித்தோர் இலையே

—பரிபாடல் 3: 63-72

என்றும் குறிப்பிட்டிருப்பதை அறியலாம்.

செவ்வேளைப் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது,

பாய்இரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு,
சேய்உயர் பிணிமுகம் ஊர்ந்து, அமர்உழக்கி,
தீஅழல துவைப்பத் திரிய விட்டெறிந்து
நோயுடை நுடங்கு சூர்மா முதல்தடிந்து,
வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய
கொன்றுஉணல் அஞ்சாக் கொடுவினைக் கொல்தகை
மாய அவுணர் மருங்குஅறத் தபுத்த வேல்,
நாவல்அம் தண்பொழில் வடமொழி ஆயிடை,
குருகொடு பெயர் பெற்ற மால்வரை உடைத்து,
மலைஆற்றுப் படுத்த மூ-இரு கயந்தலை!

—பரிபாடல் 5: 1-10

என முடிப்பதனைப் பார்க்கலாம்.

இராமாயண அகலிகை பற்றிய குறிப்பு வருமாறு:

,இந்திரன், பூசை; இவள் அகலிகை; இவன்
சென்ற கவுதமன்; சினன்உறக் கல்உரு
ஒன்றிய படிஇது' என்று உரைசெய்—வோரும்.

—பரிபாடல் 19: 50-52

இவ்வாறு காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி மாயோனையும் சேயோனையும் மனம் உருகிப் பாடியுள்ள பாடல்களாகப் பரிபாடல்கள் அமைந்துள்ளன என்பது நமக்குப் புலனாகிறது.

# 6. கலித்தொகை

பாட்டும் தொகையும் சங்க இலக்கியம் என வழங்கப் பெறும். பாட்டு எனப்படுவது பத்துப் பாட்டாகும்; தொகை எனப்படுவது எட்டுத்தொகை நூல்களைக் குறிக்கும். கலித்தொகை எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகும். எட்டுத்தொகை நூலகளுள் பாவின் பெயரைப் பெற்ற தொகை நூல்கள் பரிபாடலும் கலித்தொகையுமாகும். கலித்தொகை, 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்றும், 'கல்வி வலார் கண்ட கலி' என்றும் சிறப்பித்துக் கூறப்பெறும். அகன் ஐந்திணையாகிய அகப்பொருட் செய்திகளைப் பாடுதற்கு உரிய தகுதி வாய்ந்த பாவாகத் தொல்காப்பியனார் கலிப்பாவினையும் பரிபாட்டினையும் குறிக்கக் காணலாம்.

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்**
**உரிய தாகும் என்மனார் புலவர்**

— *அகத்திணையியல்* **: 53**

இந்நூற்பாகொண்டு தொன்னூ லாசிரியராம் தொல்காபபியனார் காலத்திற்கு முன்பேயே அகப்பொருள் இலக்கிய வழக்கில் கலிப்பாவும் பரிபாடலும் முதன்மை பெற்று விளங்கின என்பது தெரியவரும்.

கலிப்பா வெண்பா நடைத்து எனத் தொல்காப்பியனார் சுட்டுவர். கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து என்னும் உறுப்புகள் கலிப்பாவிற்கு உரியனவாகும். இஃது இசைப்பாட்டு வகையைச் சார்ந்தது எனலாம்.

சங்கத்துச் சான்றோர் தொகுத்த கலிப்பாட்டுகள் நூற்றைம்பது எனப் பேராசிரியர் செய்யுளியலின் 149, 153, 154, 155, 160 ஆவது நூற்பாவுரைகளிலும், இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் முதல் நூற்பாவின் உரையிலும், இந்நூலின் பாடல் எண்ணிக்கையினைப் புலப்படுததியுள்ளனர். சங்கத் தொகை நூல்களிற் சிதைவும் குறைவும் இன்றி, இன்று நூற்றைம்பது கலிப்பாடல்களும் கிடைப்பது தமிழ் மக்களின் தவப்பேறு எனலாம்.

சிவபெருமான் வாழ்த்தாக இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த்துடன், பாலைக்கலி முப்பத்தைந்து பாடல்களும், குறிஞ்சிக்கலி இருபத்தொன்பது பாடல்களும், மருதக்கலி முப்பத்தைந்து பாடல்களும், முல்லைக்கலி பதினேழு பாடல்களும், நெய்தற்கலி முப்பத்து மூன்று பாடல்களும் கொண்டு கலித்தொகை விளங்குகின்றது. இவ்வைந்து பகுதிகளும் தனித்தனியே மருதக்கலி, முல்லைக்கலி, குறிஞ்சிக்கலி என வழங்கியதோடு மருதப்பாட்டு, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு என்றும் வழங்கியதாகப் பேராசிரியர் தம் உரையில் குறித்துள்ளார்.

மேலும், ஐந்திணைப் பகுதிகளையும் பாடிய புலவர் இன்னின்னார் என்பதனை விளக்கக் கீழ்வரும் பாடலொன்று தமிழில் வழங்குகின்றது.

**பெருங்கடுங்கோன் பாலை; கபிலன் குறிஞ்சி**
**மருதன் இளநாகன் மருதம்; அருஞ்சோழன்**
**நல்லுருத்திரன் முல்லை; நல்லந்துவன் நெய்தல்**
**கல்விவலார் கண்ட கலி.**

இந்நூலினைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றிய குறிப்பு யாண்டும் காணப்படவில்லை. உச்சிமேற் புலவர்

கொள் நச்சினார்க்கினியர் உரைக் குறிப்பிலிருந்து நெய்தற்கலியைப் பாடிய நல்லந்துவனாரே கடவுள் வாழ்த்துப் பாடலையும் பாடி, இத்தொகை நூலைத் தொகுத்தார் என்று கொள்ள இடம் ஏற்படுகின்றது.

கலித்தொகையின் ஒவ்வொரு பாடலின் கீழும் அவ்வப் பாடலுக்குரிய கூற்றுவிளக்கம் பற்றிய பழங்குறிப்புளது. சில பாடல்களின் குறிப்புகள் தொல்காப்பிய மேற்கோள் களுடன் மிக நீண்டும் செல்கின்றன. வேறு சில பாடல் களில் முன் பாடலுக்குரிய கூற்றே மீண்டும் இடம் பெற்றால், 'இதுவும் அது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும் 'இன்னார் கூற்று' என்பது விளக்கமுறச் சுருங்கக் கூற்றுப் பற்றிய தலைப்பு இடம் பெற்றுள்ளது. தலைமகன், தலைமகள், தோழி முதலியோரது உரையாடல் அமைப்பில் வரும் பாடல்களில் மட்டும் உரையாடல் நிகழ்த்துவோரின் பெயர் விளங்கச் சிறு தலைப்புகள் அமைக்கப் பெற் றுள்ளன. கலித்தொகை முழுவதற்கும் நச்சினார்க்கினியரின் நல்லுரை உண்டு.

கலித்தொகையை முதன்முதலில் ஏட்டுச் சுவடிகளை ஆய்ந்து பதிப்பித்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களாவர். இப்பதிப்பு கி. பி. 1887 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இவர் இப் பதிப்பில் 'நல்லந்துவனார் கலித்தொகை' என்றே குறித்துள்ளமையினை நோக்கக் கலித்தொகை முழுமைக் கும் ஆசிரியராக இவர் நல்லந்துவனாரையே கொண்டார் என்று நினைக்க வேண்டியுளது. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களும் தாம் எழுதிய 'தமிழ் மொழி இலக்கிய வரலாறு' என்னும் ஆங்கில நூலில், கலித்தொகையினை "ஐவர் பாடியதாகக் கூறும் தனிப் பாடல் மிகப் பிற்பட்ட காலத்தது என்றும், நூலின் அமைப்பு, நடை, போக்கு முதலிய சில தனி இயல்புகளைக்

கவனித்தாலும் இஃது ஒரே ஆசிரியர் இயற்றியதாகும் என்றே கொள்ளத்தக்கதாயுள்ளது'' என்றும், ''நெய்தற் பகுதியின் ஆசிரியராகக் குறிக்கப் பெற்ற நல்லந்துவனாரே ஏனைய பகுதிகளுக்கும் ஆசிரியராக இருத்தல் கூடும்'' என்றும் குறிப்பிட்டுள்ளார் (பக்கங்கள் 26-27). ஆயினும் ஐந்து கலிகளின் ஆசிரியர் ஐவர் எனத் தனித்தனியே பெயர் சுட்டப் பெறும் பழம்பாடல் ஓர் உண்மையின் அடிப்படையில்தான் தொன்னெடுங்காலமாக நிலவி வந்திருக்க வேண்டும் என்று கொண்டு, வெவ்வேறு ஆசிரியர்களே ஒவ்வொரு கலியின் ஆசிரியர்களாக இருக்க வேண்டும் என்று கொள்வதே நேரிதாகப்படுகின்றது.

முதலாவது பாலைக்கலியின் ஆசிரியர் பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆவர். இவர் பாலை நிலத்தை வருணிப்பதில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்கிறார் (பாட்டு 9,12). உவமைகளைக் கையாள்வதிலும் இவருக்கு நிகர் இவராகவே விளங்குகின்றார். 'வறியவன் இளமை போல் வாடிய சினை' என்றும்' 'சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு நிழல் இன்றி' என்றும்,

**வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச்**
**சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி**

—*கலித்தொகை 10: 1-2*

'கூடிவாழ்ந்து குன்று பிரிந்து போனால் அது சூடி மகிழ்ந்து கீழே போட்ட பூவிற்குச் சமம்' என்றும் இவர் கூறும் உவமை நயங்களை ஓர்க. காட்டின் கவர்த்த வழிகளில் வழிச்செல்வோரிடம் எடுத்துக்கொள்ளத் தக்க பொருள் இல்லையென்றாலும் ஆறலை கள்வர்கள் மறைந்திருந்து வழிச்செல்வோர் மேல் நஞ்சு தோய்ந்த அம்பினைப் பாய்ச்சி, அவர்கள் துடிதுடித்து இறப்பதைப் பார்த்து மகிழ்கிறார்கள்.

**அற்றம் பார்த்தல்குங் கடுங்கண் மறவர்தாங்**
**கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்**
**துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்**
**புள்ளும் வழங்காப் புலம்புகொள் ளாரிடை**

—கலித்தொகை 4: 3-6

என்ற செய்தி பாலை நிலத்தின் பயணக் கொடுமையை மிகுவிப்பதாயுளது.

**துன்பம் துணையாக நாடின், அது வல்லது;**
**இன்பமும் உண்டோ எமக்கு**

என்றும் சில சந்தனக் கட்டை தம்மைத் தேய்த்துப் பூசிக் கொள்பவருக்கே மணம் ஊட்டுவது போல, ஒரு வீட்டிற் பிறந்த பெண், அப்பிறந்த வீட்டிலன்றிப் புகுந்த வீட்டிற் சென்று தான் மணம் பரப்ப வேண்டும்'' என்றும்,

**பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை**
**மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யும்**
**நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே**

—கலித்தொகை 9: 12-14

''ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆனாலும் மனத்தால் ஒன்றுபட்டவர் வாழ்க்கையே வாழ்க்கை'' என்றும், ''கழிந்து போன இளமையினை ஒருநாளும் ஒருவராலும் மீட்டுத் தர முடியாது'' என்றும்,

**இளமையுங் காமமும் ஓராங்குப் பெற்றார்**
**வறுமை விழைதக்க துண்டோ வுளநாள்**
**ஒரோஒகை தம்முட் டழீஇ யொரோ கை**
**ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ**
**சென்ற இளமை தரற்கு**

—கலித்தொகை 18: 7-12

அரிய கருத்துகள் பாலைக் கலியுள் உள.

வற்றிய பாலையிலும் வற்றாத அன்புக் காட்சிகளாகப் பெண் யானைக்கு நீருட்டி விட்டுப் பின்னர் மிகுந்ததைக் குடிக்கும் ஆண் யானையும், பெண் புறாவின் கோடை வெப்பம் வருத்தம்தீரத் தன் மென் சிறகால் வீசி வெப்பத்தைத் தணிவிக்கும் ஆண்புறாவும், தன் நிழலைத் தந்து தன் பெண் மானின் கதிர் வெம்மை போக்கும் ஆண்மானின் அன்பு உள்ளமும் காட்டப்படுகின்றன.

**அடிதாங்கு வளவின்றி யழலன்ன வெம்மையாற்**
**கடியவே கனங்குழாஅய் காடென்றா ரக்காட்டுட்**
**டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்**
**பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;**

**இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்**
**றுன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு**
**ளன்பு கொண் மடப்பெடை யசைஇ வருத்தத்தை**
**மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;**

**கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்**
**றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு**
**ளின்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்**
**தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு**
**முரைத்தனரே**

—கலித்தொகை *11: 6-17*

'குறிஞ்சி பாடக் கபிலன்' என்பர். குறிஞ்சிக் கலியைப் பாடியவர் கபிலர். குறிஞ்சிக்கலிப் பாடல்களில் பல நாடகப் போக்கில் அதமந்திருக்கக் காணலாம். 'கயமலர் உண்கணாய் காணாய் ஒருவன்' என்ற முதற் பாடலும், 'சுடர்த் தொடீஇ கேளாய்' என்ற பதினைந்தாவது பாடலும், 'முது பார்ப்பான் வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து' பற்றிப் பேசும் குறிஞ்சிக் கலியின் இறுதிப் பாடலும் (29) நாடகப் போக்கில் நன்கமைந்த பாடல்களாகும். இராவணனைப் பற்றிய குறிப்பு இரண்டாவது பாடலில்

இடம் பெற்றிருக்கக் காணலாம். தலைமகன் முன்னிரவில் தலைமகளைச் சந்திக்க வரும்பொழுது நீரற்ற புலமாகவும், பொருளில்லான் இளமையாகவும், அறஞ்சாரான் மூப்பாக வும் விளங்கியவள் அவன் தன் தண்ணளியால் வைகறையில் கார் பெற்ற புலமாகவும், அருள்வல்லான் ஆக்கமாகவும், திறஞ்சேர்ந்தான் செல்வமாகவும் திகழ்வதனைக் கபிலர் நன்கு காட்டுவர்.

**ஆரிடை யென்னாய்நீ அரவஞ்சாய் வந்தக்கால்**
**நீரற்ற புலமேபோற் புல்லென்றாள் வைகறை**
**கார்பெற்ற புலமேபோற் கவின்பெறும் அக்கவின்**
**தீராமற் காப்பதோர் திறனுண்டேல் உரைத்தைக்காண்**

**இருளிடை யென்னாய்நீ இரவஞ்சாய் வந்தக்கால்**
**பொருளில்லான் இளமைபோற் புல்லென்றாள் வைகறை**
**அருள்வல்லான் ஆக்கம்போல் அணிபெறும் அவ்வணி**
**தெருளாமல் காப்பதோர் திறனுண்டேல்உரைத்தைக்காண்**

—கலித்தொகை 38: 10-17

தன்னைக் காமர் கடும்புனலிலிருந்து காப்பாற்றிய காதலனையே கணவனாக மனத்தில் முடிவு செய்து கொண்ட அளவில் அப்பெண், 'அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையள்' ஆகி விட்டாள். தலைவன் தலைவியைப் பிரியமாட்டேன் எனச் சூளுரைத்துவிட்டு, அச்சூள் பொய்த்தால், அச்செயல் திங்களுள் தீத்தோன்றிய தாகவும், நிழற்கயத்து நீருள் குவளை வெந்ததாகவும், விசும்பில் சுடருள் இருள் தோன்றியதாகவும் கருதப்படும்.

**குன்றகல் நன்னாடன் வாய்மையிற் பொய்தோன்றின்**
**திங்களுள் தீத்தோன்றி யற்று.**
**ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழற்கயத்து**
**நீருட் குவளைவெந் தற்று.**
**தொடர்புள் இனையவை தோன்றின் விசும்பிற்**
**சுடருள் இருள்தோன்றி யற்று.**

—கலித்தொகை 41: 23-24: 30-31; 37-38

அவன் வரைந்து கொள்ளுங்கால் தலைவியின் மேனியில் தோன்றிய பசலை நோய் கதிரவன் முன் மாயும் இருளாகி விடும்.

**ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்ததென்**
**ஆயிழை மேனிப் பசப்பு**

—கலித்தொகை 42: 31-32

மருதக்கலி பாடியவர் புலவர் மருதன் இளநாகனார் ஆவர். மதுரையின் சிறப்பும் வையையாற்றின் வளமும் மருதக் கலியில் இடம் பெற்றுள்ளன. மதுரைக்கு வையை நீர்ப் பகையுண்டே யொழியப் போர்ப்பகை கிடையாது.

**........................................வையைதன்**
**நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்**
**போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்**

—கலித்தொகை 67: 23-25

மதுரையில் புலன்நா உழவர்கள் புதுமொழி கூட்டுண்ணுகிறார்கள்.

**முதுமொழி நீராப் புலனா வுழவர்**
**புதுமொழி கூட்டுண்ணும் புரிசை சூழ் புனலூர**

—கலித்தொகை 68: 4-5

"வாடிய பூவொடு வாரல் எம் மனை?" எனக் கூறும் மதுகையுடைய தலைவி, 'பரத்த' என்றும் தகாத வொழுக்கம் மேற்கொள்ளும் தலைவனைக் குறிப்பிடுகின்றாள்.

**வாடிய பூவொடு வாரலெம் மனை என**
**ஊடி யிருப்பே னாயின் நீடாது**
**...............................................**
**மாய மகிழ்நன் பரத்தைமை**

—கலித்தொகை 75 : 18-32

''முந்தையிருந்து மகன் செய்த நோய்த்தலை வெந்த புண்வேல் எறிந்தற்றால்'' என்ற உவமைஉன்னுந்தொறும் நயம் பயப்பதாகும்.

**முந்தை யிருந்து மகன் செய்த நோய்த்தலை**
**வெந்தபுண் வேலெறிந் தற்றால் வடுவொடு**
**தந்தையும் வந்து நிலை**

—கலித்தொகை 83: 29-31

''நீயும் தவறிலை; நின் கை இது தந்த எழில் உண்கண் அவளும் தவறிலள்...யானே தவறுடையேன்'' எனத் தன்னையே நொந்து கொள்ளும் தலைவியின் பொருமல் இரங்கத்தக்கது.

**நீயும் தவறிலை நின்கை இதுதந்த**
**பூவெழி லுண்கண் அவளுந் தவறிலள்**
**வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்**
**மேனின்றும் எள்ளி இதுஇவன் கைத்தந்தாள்**
**தான்யாரோ என்று வினவிய நோய்ப்பாலேன்**
**யானே தவறுடையேன்.**

—கலித்தொகை 84 : 36-41

சோழன் நல்லுருத்திரன் பாடியது முல்லைக்கலியாகும். துச்சாதனனைத் தொலைத்த வீமனின் வீரம் முல்லைக் கலியின் முதற்பாடலில் இடம் பெற்றுள்ளது.

**அஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியான்**
**நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண், தன்**
**வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்**

—கலித்தொகை 101: 18-20

ஏறு தழுவுதல் என்னும் முல்லை நில வழக்கம் பல பாடல்களில் கிளத்தப்பட்டுள்ளது. ஏறடக்கித் தான்

விரும்பிய பெண்ணின் தோளினைத் தழுவுதல் வேண்டும். ஏனெனில், கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையிலும் ஆயமகள் தவழு மாட்டாள்.

**கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்**
**புல்லாளே ஆயமகள்.** —*கலித்தொகை 103; 63-64*

ஏறு தழுவிய அடக்கிய நிலம், கௌரவர் நூற்றுவரைப் பாண்டவர் ஐவர் வென்று அடக்கிய போர்க்களம் போலிருந்தது என்கிறார் சோழன் நல்லுருத்திரன்.

**புரிபுமேற் சென்ற நூற்றுவர் மடங்க**
**வரிபுனை வல்வில் ஐவர் அட்ட**
**பொருகளம் போலும் தொழூஉ**

—*கலித்தொகை 104: 57-59*

ஆயரிடையில் காதல் மணம். கமழ்ந்தது என்பதனை,

**ஆயர் மகனாயின் ஆயமகள் நீயாயின்**
**நின் வெய்யனாயின் அவன் வெய்யை நீயாயின்**
**அன்னை நோதக்கதோ இல்லைமன்—நின்நெஞ்சம்**
**அன்னை நெஞ்சாகப் பெறின்**

—*கலித்தொகை 107: 20-23*

என்னும் அடிகள் கொண்டு அறியலாம்.

ஐந்தாவதாக அமைந்துள்ள நெய்தற்கலியினைப் பாடியவர் நல்லந்துவனார் ஆவர். மாலைக் காலம் தலைவிக்குத் துயர் செய்வது புனையப்பட்டுள்ளது. நெய்தற் கலிப் பாடல்கள் அவலச் சுவையை மிகுவிப்பனவாகும். தலைவிக்கு மாலைக்காலம் வந்ததும் பசலை நோயும் உடன் வந்து விடுகின்றது. காதலர் தலைவியை விட்டு நீங்கும் பொழுதெல்லாம் அப்பசலை நோய் தலைவியின் மேனியை வந்தடைந்து விடுகின்றது. அவர் அருகில் வந்து அவளைத் தொடும் பொழுதெல்லாம் அப்பசலை நோய் அவளைவிட்டு நீங்கி விடுகின்றது.

**படுசுடர் மாலையொடு பைதலேனா யுழப்பாளைக்**
**குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்தானை**
**விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்**
**தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே**

—*கலித்தொகை 130: 18-21*

*மாலைநேரத்தில் இடையர் புல்லாங்குழல் இசைக்கத் தலைவியின் காதல் நோய் கைம்மிகுகிறது.*

**..............................இம்மாலை**
**கோவலர் தீங்குழல் இனைய வரோஎன்**
**பூவெழி னுண்கண் புலம்புகொண் டினையும்**

—*கலித்தொகை 130: 14-16*

*நிரைவளை நெகிழ்ந்து கை முன் இறையினின்றும் கழன்று விழுகின்றது.*

**இறைவரை நில்லா வளையள் இவட்கினிப்**
**பிறையேர் சுடர்நுதற் பசலை**
**மறையச் செல்லுநீ மணந்தனை விடினே.**

—*கலித்தொகை 125: 22-25*

*நெய்தல் கலியின் பாடலொன்று (16) ஆற்றுதல், போற்றுதல், பண்பு முதலானவற்றிற்கு விளக்கம் தருகின்றது.*

**ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;**
**பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்;**
**அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை;**
**அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்;**

**செறிவெனப் படுவது கூறியது மறாஅமை;**
**நிறையெனப் படுவது மறை பிறர் அறியாமை;**
**முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வெளவல்;**
**பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்.**

—கலித்தொகை 133: 6-14

இவ்வாறாகக் கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகைப் பாடல்கள் அகப்பொருள் நுட்பம் வாய்ந்தனவாய், வாழ்வியல் உண்மைகளை வகைமை பெற எடுத்துரைப்பனவாய் அமைந்து, படிக்குந்தொறும் இன்பம் பயப்பனவாய் அமைந்துள்ளன.

# 7. அகநானூறு

பழந்தமிழ் இலக்கியங்களைச் சங்க இலக்கியம் என்ற பெயரால் முன்னோர் வழங்கினர். அச் சங்க இலக்கியம் மேற்கணக்கு என்றும். கீழ்க்கணக்கு என்றும் இரு பிரிவாகக் கொள்ளப்படும். பாட்டும் தொகையும் மேற் கணக்காகும். பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகை நூற்களையும் குறிக்கும்.

எட்டுத்தொகை நூற்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூற்களும் அகத்திணையைச் சார்ந்தவை; பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறத்திணையைச் சார்ந்தவை. பரிபாடல் அகம், புறம் ஆகிய இரு கூறுகளையும் உள்ளடக்கி நிற்கிறது.

அகத்தே நிகழும் இன்பம் 'அகப்பொருள்' எனப்படும். அகப்பொருள் நூற்கள் பல தமிழில் இருப்பவும் 'அகம்' என்றே பெயரமைந்த நூல் தமிழில் அகநானூறு ஒன்றே யாகும். எட்டுத்தொகை நூற்கள் இவை இவை எனக் குறிப்பிடும் செய்யுளில் 'கற்றறிந்தோ ரேத்தும் கலியோ டகம்' என்றும், 'கலியோடகம்' என்றும் ஒடுக்கொடுத்துக் கலியோடு அகத்திணையும் சேர்த்துக் கூறப்பட்டிருத்தலின் அகநானூறு கற்றறிந்தோர் ஏத்தும் சிறப்பிற்கு உரியது என்பது பெறப்படுகின்றது. மேலும் எட்டுத்தொகை நூற்களுள் அடிவரையறையால் நீண்டன பிறவும் உளவாகவும் அகநானூற்றிற்கே' நெடுந்தொகை' எனப்

பெயர் எய்தியுள்ளதை நோக்க, இது செய்யுளானன்றிப் பொருட் சிறப்பானும் நீண்டுளதெனும் முன்னோர்தம் குறிப்புப் புலனாகக் காணலாம். அது மட்டுமின்றிக் குறுந் தொகை என வழங்கப்படும் நூலின்கண் அமைந்துள்ள சில பாடல்களில் முதல் ,கருப்பொருள்கள் விளக்கமுறக் காணக் கூடியனவாய் இல்லை. ஐங்குறுநூற்றில் முதல் கருப்பொருள்கள் ஓரளவே இடம் பெற்றுள்ளன. ஆனால் அகநானூற்றில் முதல் கரு உரிப்பொருள்கள் ஆகிய மூன்றும் சிறக்க அமைந்திருப்பதனைக் கற்றோர் காண முடியும். மிகவும் விரிந்த நிலையில் முதற்பொருளும் கருப்பொருளும் அமைந்து, உரிப் பொருளாற் சிறப்புற்றுத் துலங்கும் பெற்றி வாய்ந்த பாடல்களை எடுத்துக்காட்ட வந்த தொல்காப்பிய உரை யாசிரியர்களாகிய இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து திணைகளுக்கும் அகநானூற்றிலிருந்தே பாடல்களை எடுத்துக்காட்டியுள்ளனர். தொல்காப்பியத்தின் பிறிதோர் உரையாசிரியராம் பேராசிரியரும் தம் உரைக்கண் பிற அகத்திணை கூறும் நூற்களினும் அகநானூற்றிற்குத் தலைமையிடம் தந்து குறிப்பிட்டுள்ளமையினையும், 'அகம் என்னும் பெயரானே அகநானூற்றினை வழங்கியுள்ளமை யையும் காணலாம.

எட்டுத்தொகை நூற்களில் அடியளவால் நீண்டுள்ள நூல் அகநானூறு ஆகும். ஒன்பதடிச் சிற்றெல்லையும் முப்பத்தோரடிப் பேரெல்லையும் கொண்ட இந்நூல் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதல் நூற்றி ருபது பாடல்களைக் கொண்ட தொகுதி 'களிற்றியானை நிரை' என்றும், அடுத்த நூற்றெண்பது பாடல்களைக் கொண்ட தொகுதி 'மணிமிடை பவளம்' என்றும், இறுதி நூறு பாடல்களைக் கொண்ட தொகுதி 'நித்திலக் கோவை' என்றும் வழங்கப் பெறுகின்றது. நூலின் இறுதியிற் காணப்பெறும் 'நின்ற நீதி' என்று தொடங்கும்

பாயிரச் செய்யுளை அடுத்துள்ள உரைநடைச் சொற்றொடர்களுள், இவ்வாறு அகநானூற்றின் பாடல்களை மூன்று பகுதிகளாக்கிப் பெயரிட்டு வழங்குதற்குக் காரணங்கள் கூறப் பெற்றிருப்பினும், அவை விளக்கமான காரணங்களாகப் புலப்படவில்லை. ஆயினும் ஒருவாறு இவ்வாறு பெயர் அமைந்ததற்குரிய காரணத்தினை அறிந்துகொள்ள முடிகின்றது. நெடியவாகி நிமிர்ந்தொழுகும் அடிகளைக் கொண்டு செருக்குற்றுச் செல்லும்—பாட்டின் நடையும் பொருட்சிறப்பும், நன்கு விளக்கமுறும் பகுதி 'களிற்று யானைநிரை' ஆகும். பாட்டும் பொருளும் தம்முள் செறிந்து விளங்காமல் மணியும் பவளமும் மிடைந்தாற்போல ஒவ்வாமை காட்டுவது 'மணிமிடை பவளம்' என்னும் பகுதியாகும்குளிர்ச்சியும் ஒளியும் உடைய நன்முத்தின் ஒளியெனத் திகழ்ந்து பாட்டும் பொருளும் தம்முள் பொருந்துதல் காட்டும் பகுதி 'நித்திலக் கோவை' ஆகும். அடுத்து. குறிஞ்சி முதலாக உள்ள ஐந்திணைகளிலும் எய்தும் பிரிவு நிலைகளும், அவற்றைக் கிளத்துமுகத்தான் வரும் அன்பு வெளிப்பாடும், வேறு எந்நூலுள்ளும் சிறக்கக் காண முடியாத அளவிற்கு அகநானூற்றில் அமைந்திருத்தல் இந்நூலின் தனிச் சிறப்பாகும். அகப்பொருள் கூறும் நூற்களுள் இதுவே காலத்தானும், முற்பட்டு ஒளிர வேண்டும் என்பர்.

இந்நூலைப் பாடிய புலவர் பெருமக்களின் தொகை நூற்று நாற்பத்தைந்தாகும். மதுரை உப்பூரி குடி கிழார் மகனார் உருத்திர சன்மனார் பல்வேறு புலவர்கள் பல்வேறு சமயங்களிற் பாடிய பாடல்களைத் தொகுத்தார். இத்தொகுப்பு முயற்சிக்கு ஆதரவு தந்த மன்னன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியாவன். முதலாவது அமையும் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவர். இவர் பிற்காலத்தவர் என்பர்.

அகநானூற்றுப் பாடல்கள் ஓர் ஒழுங்குமுறையினை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. 1, 3,

5, 7, 9 முதலான ஒன்றில் தொடங்கி அடுத்தடுத்த ஒற்றைப்படை எண் பெற்ற பாடல்கள் பாலைத் திணையாகவும், 2, 8, 12, 18 முதலான — இரண்டும் எட்டுமான எண் பெற்றவை குறிஞ்சித் திணையாகவும், 4, 14 என நான்கை ஒட்டிய எண் பெற்றவை முல்லைத் திணையாகவும், 6, 16 முதலான ஆறு தொடர்பான எண் பெற்றவை மருதத் திணையாகவும் 10, 20 எனப் பத்துகளாலாய எண் பெற்றவை நெய்தல் திணையாகவும் தொகுக்கப் பட்டுள்ளன. எனவே அகநானூற்றில் ஒரு பாட்டின் எண்ணைச் சொன்னால், உடனே அது இன்ன திணைக் குரிய பாடல் என்பதைச் சொல்லி விடலாம். இவ்வாறு பாட்டுகளைத் தேர்ந்தெண்ணித் தொகுத்த தொகுப்பாசிரி யரின் முயற்சி வியக்கவும் பாராட்டவும் தக்கதாகும்.

அகநானூற்றின் நானூறு பாடல்களும் அகவற் பாட்டுகளால் ஆனவையாகும்.

இந்நூலில் நயங்கண்டு தெளிய வேண்டிய பாடல்கள் பலவற்றைக் காணலாம். உள்ளுறை, இறைச்சி முதலிய குறிப்புப் பொருள்கள் நிறைந்து காணப்படுவது இந் நூலாகும். கோசர், காரி, கொடித் தேர்ச்செழியன், நன்னன், பண்ணன், பிட்டன், பாரி, தித்தன், கெழியன், அத்தி, கோசர், கங்கன், கட்டி, புல்லி முதலிய குறுநில மன்னர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மிகப் பலவாக இந்நூலில் உண்டு. மாமூலனார் தம் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகளை வைத்தே பாடுகின்றார். பரணர் சங்க காலத்தில் வரலாற்றாசிரியரோ என்று எண்ணும் அளவிற்குத் தாம் இயற்றியுள்ள பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகளை வடித்துத் தந்துள்ளார். அடுத்து, ஐவகை நிலங்களின் வருணனை அகநானூற்றுப் பாடல்களில் காணும் அளவிற்கு விரிவாகவும் விளக்கமாகவும், அழகாக வும் அருமைப்பாடாகவும் வேறு எந் நூலினும் காண வியலாது. உவமைகள் மிகச் சிறந்து விளங்குகின்றன குட வோலை மூலம் நாட்டின் நல்லாட்சிக்கு வேண்டியவர்

களைத் தேர்ந்தெடுக்கும் முறை ஒரு பாடலில் குறிப்பிடப் பெறுகிறது.

**குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்க்**
**கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்**
**பொறி கண் டழிக்கும் ஆவண மாக்களின்**

—அகநானூறு 77: 6-8

குழந்தைப் பேற்றின் சிறப்பினைச் சில பாடல்கள் செப்புகின்றன.

**இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி**
**மறுமை யுலகமும் மறுவின்று எய்துப**
**செறுநரும் விழையுஞ் செயிர் தீர் காட்சிச்**
**சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்**
**பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்**
**வாயே யாகுதல் வாய்ந்தனம்**

—அகநானூறு 66: 1-6

பழந்தமிழர் திருமண முறையினைப் பாடல் ஒன்று முறையுற மொழிகின்றது.

**உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை**
**பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரைகால்**
**தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி**
**மனைவிளக் குறுத்து, மாலை தொடரிக்**
**கனைஇருள் அகன்ற கவின்பெறு காலைக்**
**கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்**
**கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென**
**உச்சிக் குடத்தர், புத்தகன் மண்டையர்**
**பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்**
**முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்**

**புதல்வற் பயந்த திதலை அவ்வயிற்று**
**வால்இழை மகளிர் நால்வர் கூடிக்**
**கற்பின் வழாஅ, நற்பல உதவிப்**
**பெற்றோற் பெட்கும் பிணையை ஆகஎன**

—அகநானூறு *86: 1-14*

புலவர் ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த நன் மதிப்பு, சில பாடல்களால் தெரிய வருகின்றன. ஆதிமந்தி என்னும் பெண்பாற்புலவர் பேதுற்று அலைந்த காட்சியினை அகநானூறு அழகுறப் படம்பிடித்துக் காட்டுகிறது.

**கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்**
**வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்**
**சுரியலம் பொருநனைக் காண்டி ரோவென**
**ஆதி மந்தி பேதுற் றினைய**

—அகநானூறு *76: 7-10*

கிளியை முன் கையில் வைத்துக்கொண்டு பொருள் வயிற்பிரிந்து சென்ற தலைவன் வருவானா என வினவும் தலைவியின் சொற்சித்திரம் பொற்சித்திரமாக வளங்குகின்றது.

**பசை கொல் மெல்விரல் பெருந்தோள், புலைத்தி**
**துறைவிட்டன்ன தூமயிர் எகினம்**
**துணையொடு திளைக்கும் காப்புடை வரைப்பிற்**
**செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி,**
**இன்றுவரல் உரைமோ, சென்றிசினோர் திறத்து என**
**இல்லவர் அறிதல் அஞ்சி, மெல்லென**
**மழலை இன் சொல் பயிற்றும்**
**நாணுடை அரிவை மாண்நலம் பெறவே**

—அகநானூறு *34: 11-18*

வினைமுடித்து வண்டுகளின் காதல் வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தாமல் தேரின் மணிகளைப் பிணித்து

விட்டுவரும் தலைவனின் வரவு ஒரு பாடலில் சுட்டப் படுகிறது.

**கார் செய் தன்றே கவின்பெறு கானம்**
**குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி**
**நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்**
**பூத்த பொங்கர்த் துணையொடு வதித்த**
**தாதுண் பறவை பேதுறல் அஞ்சி**
**மணிநா ஆர்த்த மான்வினைத் தேரன்**
**உதுக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்**

—அகநானூறு 4:7-13

இதிகாசக் கதை நிகழ்ச்சிகள் சில பாடல்களில் இடம் பெறுகின்றன. தோழியின் சொல்லாற்றும் திறமும், சூழ்ச்சி வகையும், வரைவு கடாவும் திறமும் விளக்கமுறப் பேசப்படுகின்றன. தலைவனின் கடமை நெஞ்சம் காட்டப்படுகின்றது. இவ்வாறு இன்னோரன்ன பல சிறப்புகள் அகநானூற்றில் அழகுற அமைந்து விளங்கக் காணலாம்.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது முதல் 90 பாடல்களுக்கு மட்டும் குறிப்புரையாக இருக்கின்றது. அடுத்து, 70 பாடல்களுக்கு அகநானூற்றின் முதற் பதிப்பாசிரியரான திரு. வே. இராசகோபால ஐயங்கார் உரை எழுதியிருக்கிறார். தஞ்சை நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும், கரந்தைக்கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையவர்களும் சேர்ந்து நூல் முழுமைக்கும் உரை கண்டுள்ளனர். இவ்வாறே பெருமழைப்புலவர் சோமசுந்தரனாரும் அகநானூறு முழுமைக்கும் உரை எழுதியுள்ளார்.

# 8. புறநானூறு

## முன்னுரை

தமிழிலக்கியப் பரப்பில் இன்று நமக்கு கிடைக்கும் நூல்களில் எட்டுத்தொகை மிகப்பழமையான தொகை நூலாகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்கள் எட்டுத்தொகை எனப்படும். இதில் பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

பலரால் இயற்றப்பெற்ற செய்யுட்களைக் கொண்டு ஏறத்தாழ கி. மு.60-இல் தொகுக்கப்பட்ட 'அந்தாலஜி' (Anthology) என்று கூறப்படும் தொகை நூல் கிரேக்க மொழியில் இருப்பது இங்கு நினைக்க தக்கது.

தமிழிலக்கிய பரப்பில் பலதொகை நூல்கள் அமைந்துள்ளன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பலவும். தனிப்பாடல் திரட்டு போன்ற பலவும் தொகை நூல்களாகவே அமைந்துள்ளன.

தொல்காப்பிய உரையாசிரியர்களான பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைகளின் மூலம் நெடுந்தொகை முதலாக எட்டுத்தொகை நூல்களையெண்ணும் முறையிருந்தது என்று எண்ண இடம் ஏற்படுகின்றது. 'நெடுந்தொகை முதலாகிய தொகை எட்டும்' என்று அவர்கள் குறிக்கின்றனர். பழம்பாடல் ஒன்று நற்றிணை முதலாகத் தொடங்குகின்றது.

## தொகையும் புறமும்

தொகை நூற்கள் எட்டனுள் பதிற்றுப்பத்து, புறநானூறு, பரிபாடலில் சில பாடல்கள் ஆகியவை புறப் பொருள் நுவலுவனவாகும். இதில் பதிற்றுப்பத்தில் சேர அரசர்களின் வரலாறு மட்டும் கூறப்படுகிறது. புறநானூறே பழந்தமிழ் நாட்டின் வரலாற்று நிலையை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

அகத்துள்ளும் புறக்கருத்துகள் பல வருகின்றன. தூதின் காரணமாகவும் நாடுகாவல் காரணமாகவும் காதலரிடையே பிரிவு நிகழும் என்று வரையறுத் திருப்பது வீரத்திற்கு அகவாழ்வில் தந்த சிறப்பினை நன்கு உணர்த்தும் ஒன்றாகும். களவின் பின்னரே கற்பு என்பதுகூட வீரத்தின் அடிப்படையிலேயே தோன்றியது.

புறத்தில் போரும் போருக்கடிப்படையான வீரமும் சிறப்புப்பெற்றாலும் புறம் என்பது வெறும் போரைக் குறிப்பது மட்டுமல்ல. அறம்பொருள் இன்பம் என்று வகுப்பட்ட மூன்றில் அறத்தையும் பொருளையும் விரிவாகத் தன்னுள் ஆட்டடுத்திக்கொண்டிருப்பது புறமேயாம். "புறமாவது மேற்கூறிய ஒத்த அன்புடையாராலேயேயன்றி எல்லாராலும் அனுபவித்து உணரப்பட்டு இஃது இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள்; அதில் அறனும் பொருளும் அடங்கும்" என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் புறத்திற்கு விளக்கம் தருகிறார். (புறநானூறு பதிப்பு; ப. 9)

"போர் மட்டும் குறிப்பது புறமாகாது. புறத்திணையினுள் கடவுள் நெறியும், அறவாழ்வும் பொருளின் தேவையும் பேசப்படுகின்றன ... வெறும் போர் விளக்கமோ, அன்றிப் போர் வெறியோ பற்றிக் கூறாது, அப்போராற்றும் நல்ல வழிதுறைகளையும், அவற்றை அறத்தாற்றின் ஆற்றவேண்டிய அமைதியினையும், போராற்றுங்கால் புவி

மன்னரும் அவர் படையும் காக்கவேண்டிய நல்ல அறநெறிகளையும், மாற்று வேந்தன் அறத்தாறு வழுவி அவலம் புரிந்தவழி ஆற்ற வேண்டிய செயல்களையும் விளக்கமாகப் புறம் எடுத்துக்காட்டுகிறது; இன்னும் மக்கள் வாழ்வில் புரியும் நலங்கேடுகளையும் பிறவற்றையும் விளக்கிக் காட்டுகின்றது'' என்பது பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் தரும் விளக்கமாகும். (கவிதையும் வாழ்க்கையும்; பக்கம்: 312 - 314)

சுருங்கச்சொன்னால் காதலல்லாத பிறவெல்லாம் புறத்தில் அடங்கும். வாழ்வின் இரு பகுதிகளில் காதல் தவிர்த்த மற்ற எல்லா வகை நிகழ்ச்சிகளும் புறத்தில் அடங்கும். புறம் வாழ்க்கைப் பகுதியின் பரந்த விரிவைப் படம் பிடித்துக் காட்டும்.

அகத்திணை ஒன்றுக்குப் புறத்திணை வகுத்து, இரண்டிற்குமுள்ள தொடர்பைத் தொல்காப்பியனார் விரித்துக் காட்டுவார்.

அகத்திணையை மறந்த புறத்திணை இல்லை என்று கூறுவார் போலப் புறத்திணையியலின் முதல் நூற்பாவிலேயே, 'அகத்திணை இலக்கணத்தைத் தெளிவாக உணர்ந்தோர் புறத்திணை இலக்கணத்தைத் திறம்பட உணர்த்துங்கால், வெட்சி என்னும் புறத்திணை குறிஞ்சி என்னும் அகத்திணைப் புறனாக அமையும் என்ற பொருளில்,

**அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
**புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்**
**வெட்சி தானே குறிஞ்சியது புறனே**

—தொல்காப்பியம்; புறத்திணையியல்; 1

என்று தொல்காப்பியனார் கூறுகிறார்.

## ஏழா? பன்னிரண்டா?

அகத்திணைக்கும் புறத்திணைக்கும் முதல், கருப் பொருள்கள் ஒன்றாகவே அமைதலும், உரிப்பொருள் மட்டும் மாறியமைதலும் இங்கு நோக்கத்தக்கன.

வாழ்க்கையில் அகத்திற்கும் புறத்திற்கும் உரிய பங்கு தந்து போற்றிய நுட்பத்தை உணராது, பிற் காலத்தோர் அகத்தைக் காட்டிலும் புறத்திற்கே முதன்மை தரப்பட்ட தாகத் தவறாக உணர்ந்து அல்லற்பட்டனர். அதனில் புறத்திணைகள் பன்னிரண்டு என வகுத்தனர். நிரை கவர் தலாகிய வெட்சி, நிரை மீட்க முயலும் கரந்தை, பகைவர் நாடுகொள்ள எழும் படைச் செலவாகிய வஞ்சி, அவ்வாறு படையெடுத்து வருவோரை எதிர்த்து நிற்கும் காஞ்சி, மதிலை வளைத்தலாகிய உழிஞை, மதிலைக் காக்கும் நொச்சி, இருபடையினரும் போர்புரியும் தும்பை, போரில் வெல்லும் வாகை, புகழ்பாடும் பாடாண், இவைகட்குப் பொதுவாயுள்ள பொதுவியல். ஒருதலைப் பற்றாகிய கைக்கிளை, பொருந்தாக் காமமாகிய பெருந்திணை ஆகிய வையே அப்பன்னிரண்டு புறத்திணைகள். இவ்வாறு வகுப்பது 'இதற்கு இது புறம்' என்று வகுக்கும் தொல் காப்பியனார் கொள்கைக்கு மாறுபட்டு நிற்பதால், முதல் ஏழு திணைகளைப் புறத்திணையென்றும், அடுத்த மூன்றைப் புறப்புறம் என்றும், இறுதியில் உள்ள இரண்டு திணைகளை அகப்புறமெனவும் அவர்கள் குறித்தனர். இவ் வாறு பகுக்கப்பட்ட பகுப்பினை ஆராய்ந்த நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், ''திணையனைத்தும் ஒன்றி லொன்றடங்கா. அகமும் புறமுமாயிருவேறு வகையா மெனக் கொண்ட பிறகு, திணை எதுவும் ஒன்று அகத்தது அன்றேல் புறத்தது எனப்படுதலன்றி, அகப்புறமாமென் றோர் புதுவகைப்படுத்தெண்ணுவது பொய்பொய்யே யாவதன்றி, தனிப்பொய், பொய்ப்பொய், மெய்ப்பொய் என முத்திறப்படுமெனல் போலப் பொருளொடு பொருந்

தாப்போலி முறையேயாகும். புறமெதுவும் அகவகையாகாதது போலவே, அகமெதுவும் எனைத்துவகையானும், புறனிகாமையும் ஒருதலையாத் தேறப்படும். அகத்தில், தனியகம், அகத்தகம், புறத்தகம் எனும் பாகுபாடின்மையால், புறத்துள்ளும் புறமேயன்றி, புறப்புறமும், அகப்புறமும் வேறுகோடலமையாமையறிக. மெய்ப்பொருள்-ஒளியிருள்-பகலிரா என்பன போலவே, அகப்புறத்திணையொன்று கருதுமாறில்லை. இயல் வேறுப்பட்ட இருவகைத் திணைகளைப் புணர்த்து அகப்புறமெனப் புதுவதோர் விரவுத் திணை வகுத்ததோடமையாமல், புறப்புறமெனவொரு வகை கோடல் எற்றுக்கு? அகத்தின்வேறு புறமாதல்போல, புறத்தின் வேறுபடுவது அகமேயாகும். மற்றைப்புறமென்பது பொருளில் கூற்றாம்'' என்று இப்பகுப்பின் முறையின்மையை விளக்குகிறார் (தொல்காப்பியரின் புறத்திணை, வகை முறை; தமிழ்ப் பொழில்; பதினைந்தாம் துணர் 1939 - 40; மலர் 3. பக்கம் 101) இதனால் புறத்திணை ஏழு என்பது புலனாகும்.

## திணை - துறை

புறநானூற்றுப் பாடல்களுக்கு அமைக்கப்பட்ட திணை - துறை வழக்குகள் தொல்காப்பிய நூலினையொட்டி அமைக்கப்பெறவில்லை; பிற்காலத்துப் புறப்பொருள் இலக்கணமரபுரைக்கும் நூல்களைப் பின்பற்றித் திணை - துறைகள் கூறப்பெற்றுள்ளன. இப்பொழுது இந்நூலுள் காணப்பெறும் திணை - துறைக் குறிப்புகள் ஐயனாரிதனாரின் புறப்பொருள் வெண்பாமாலையை அடியொற்றிக் காணப்படுகின்றன. இஃது அந் நூலின் பழமைக்கு ஏலாத அமைப்பாகும் என்று நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் எடுத்துக் காட்டியுள்ளனர். அவர் தம் கருத்துரை வருமாறு:

''தத்தம் புதுநூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே

தொகைகளுக்கு நூலாதலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டும் என்று உணர்க''

(தொல்காப்பியம்; புறத்திணையியல்; 35 உரை)

இங்கே நச்சினார்க்கினியர் தாம் உதாரணமாக எடுத்துக்காட்டிய சில புறப்பாட்டுகளுக்கு (புறநானூறு 5,184) அந்நூலின் உரைகாரர் கொடுத்துள்ள 'செவியறிவுறூஉ' என்னும் துறைக்கு மாறாக 'வாயுறை வாழ்த்து' எனக் குறிப்பிட்டு, உரைகாரர் தொல்காப்பியத்தைப் பின்பற்றி உரைவகுத்திலர் எனக் கருதுகிறார்.

## புறநானூறு

டாக்டர் போப்பையர் முதலிய மேலைநாட்டு அறிஞர்கள் மட்டுமன்றிப் பல தமிழ் அறிஞர்களையும், வரலாற்றாசிரியர்களையும் தன்பால் திருப்பிய பெருமையும் புறநானூற்றிற்குண்டு. இவ்வகையில் எட்டுத்தொகை நூல்களிலேயே ஓர் ஒப்பற்ற இடம் இந்நூலுக்குண்டு. இந்நூல் கிடைத்த பின்புதான் சங்கத்தமிழரின் சமுதாய வாழ்வு, அரசியல் மேன்மை, போர்த்திறம், உயர்ந்த மனப்பாங்கு, வாழ்க்கை அமைப்பு, நாகரிகம், பண்பாடு, தியாக வாழ்வு முதலிய பலப்பல துறைகளில் உண்மையொளி பாய்ந்தது; தெளிவும் பிறந்தது; அன்று அவர்கள் பயன்படுத்திய அணிகலன்கள், போர்க்கருவிகள் உடைகள், உணவு வகைகள், ஊர்திகள், உலோகங்கள், கொடிகள், மாலைகள், இசைக்கருவிகள், முதலியவற்றை அறிவதற்கான பல குறிப்புக்களைப் புறநானூறு தருகின்றது. அன்றிருந்த அரச மரபுகள், குறுநில மன்னர்கள், அவர்களுடைய தலைநகரங்கள், அவர்களிடையே நடந்த போர்கள், அவர்களுடைய வீரச்செயல்கள் முதலியவற்றை இந்நூலில் எங்கும் காணலாம். அன்று வழக்கிலிருந்த பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள், வாணிகம் தொழில், முதலியவை பற்றியும் இந்நூல் பலபட விவரித்துக்

கூறுவதில் முன்நிற்கின்றது. சுருங்கக் கூறினால், இத் தொகை நூல் கிடைத்த பின்புதான் சங்கத்தமிழரின் மேன்மை நன்கு புலப்பட்டது. ஒருவேளை இந்நூல் கிடைத்திராவிட்டால் நம் வரலாற்றின் பல பகுதிகள் இருண்டுபோயிருக்கும். எட்டுத்தொகை நூல்களில் பதிற்றுப் பத்தும் புறநானூறும்தாம் புறப்பொருள் தழுவியவை என்றாலும், 'புறப்பொருள் இவ்வளவு விரிந்ததா?' என வியப்புறும் வண்ணம், புறப்பொருளின் எல்லைகளையெல்லாம் தொட்டுக்கொண்டு செல்லும் ஓர் இலக்கியப் பேராறாகப் புறநானூறு விளங்குகின்றது. இதனைப் பண்டைத்தமிழ்க் கருவூலம் என்றும், பழந் தமிழ்ப் புதையல் என்றும் கூறுவதில் மிகையொன்றும் இல்லை. புறநானூற்றை ஆழக்கற்றவர்கள் இவைகுறைந்த வருணனையே என்பதை நன்கு உணர்வர்.

வரலாறு, சமூகவியல், அரசியல், இலக்கியம், சமயம், தத்துவம் முதலிய பல்வேறு செல்வங்களும் பொதிந்து கிடக்கும் புதையல் என்று தெளிந்த அளவில் பலதுறை அறிஞர்களும் புறநானூற்றை நாடி வரலாயினர். அதன் காரணமாகத் தமிழில் பல அருமையான நூற்கள் தோன்றி யுள்ளன. தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள், பண்டைத் தமிழ் மன்னர்களின் வரலாறுகள், சிற்றரசர் குறுநில மன்னர்களின் வரலாறுகள், வள்ளல்களின் வரலாறுகள், நாகரிகப் பண்பாட்டு வரலாறுகள், சமய வரலாறு முதலிய பலப்பல வரலாறுகள் புறநானூற்றை அடிப்படையாக வைத்துக் கடந்த காலங்களில் எழுதப்பட்டுள்ளன. புற நானூற்றுப் பாடல்களைக் கதைகளாகவும் காட்சிகளாக வும் பல அறிஞர்கள் படைத்துக் காட்டியுள்ளனர். அன்று மக்களிடம் நிலவிய உயர்ந்த மனப்பாங்கு சில அறிஞர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு நூல்வடிவம் பெற் றுள்ளது. மொழியியல் அறிஞர்கள் மொழி அன்றிருந்த நிலையையும், வளர்ந்த வளர்ச்சியையும் புறநானூற்றைக் கொண்டு ஆராய்ந்து பல அரிய ஆராய்ச்சிகளை வெளி

யிட்டுள்ளார்கள். அத்துடன் சமூகவியல், மானிடவியல், அரசியல், உளவியல், புவியியல், வானவியல், தாவரவியல், விலங்கியல் முதலிய துறைகளில் நீண்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் புறநானூற்றுத் புதையலில் செல்வங்கள் உள்ளன. புறநானூற்றின் சிறப்பை இவை உணர்த்தும்.

புறம் எனவும் புறப்பாட்டு எனவும் வழங்கப் பெறும் இந்நூலில் இன்று கிடைப்வை, கடவுள் வாழ்த்தொடு சேர்த்து 398 பாடல்கள்தாம். புறநானூறுப்பாடல்கள் எந்த அடிப்படையில் தொகுக்கப்பெற்றன என்று இன்று விளங்கவில்லை. எனினும் அறிஞர் கி வா.ஜகந்நாதன் இதனை ஆராய முயன்று விளக்கியுள்ளார் "இரண்டாம் பாட்டு முதல் பதினாறாம் பாட்டு வரையில் சேரர், பாண்டியர், சோழர் என்ற முறையில் பாடல்கள் அமைந்திருக்கின்றன. அதன்பின் இம்மூவரும் ஒருமுறை யின்றிப் பாடப் பெறுகின்றனர். சோழர்களும் பாண்டியர்களுமே பலபாடல்களாற் புகழப்படு கின்றனர். முதல் 85 பாடல்கள் முடிமன்னர்களாகிய இம்மூவரின் புகழைச் சொல்வன. அதன்பின் அதிகமான், பாரி, காரி, ஆய், பேகன், ஓரி முதலிய வள்ளல்களும் நாஞ்சில் வள்ளுவன், பிட்டங்கொற்றன் முதலிய வீரர் களும், பல வேளாளர்களும் புகழப்பெறுகின்றனர். 182 முதல் 185 பாடல்கள் வரை சில மன்னர்கள் தாமே இயற்றிய பாடல்கள் உள்ளன. 186 முதல் 195 வரையில் பொதுவகையில் அமைந்த தனிப்பாடல்களும், 196 முதல் 211 வரையில் பரிசில் துறை பற்றிய பாடல்களும், 212 முதல் 223 வரை கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த செயலைப்பற்றிய பாடல்களும் அமைந்துள்ளன. 217 முதல் 256 முடியக் கையறுநிலையும் பிறவுமாகிய அவலச் சுவையமைந்த துறைப்பாடல்களையும், 257 முதல் ஒரு வரையறையின்றிப் பல புறத்துறையமைந்த செய்யுட் களையும் காணலாம். இடையிடையே பாடாண்பாட்டு, பாடாண்டிணை, காஞ்சித்திணை பற்றிய பாடல்கள் பல

ஒருசேரக் காணப்படும். பொதுவாகப் புறநானூறுப் பாடல்களின் தொகுப்புக்குரிய முறை இன்னதுதான் என்று வரையறுத்துச் சொல்லவியலவில்லை'' என்பது அவர் விளக்கம். (புறநானூறும் தமிழரும்: ப. 45-46)

பாடப்பட்டோர், பாடியோர், பாடப்பட்ட திணை, துறை அடிப்படையில் இப்பாகுபாடு அமைந்துள்ளது. எனினும், புறநானூற்றுப் பாடல்களின் தொகுப்பு ஒரு குறிப்பிட்ட அடிப்படையில் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. (இரா. தண்டாயுதம்; சங்க இலக்கியம்: (எட்டுத் தொகை; ப: 387-388)

157 புலவர்கள் பெயர்கள் மட்டும் இப்போது கிடைக்கின்றன.

## வாழ்க்கைத் தத்துவம்

வாழ்க்கையென்பது உயரிய எண்ணங்களின் மேல் அமையும் கோட்டையென்பர். வாழ்க்கை வளம்பெற்றதாகவும், அற உணர்வுடன் கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பது சங்கத்தமிழர் கொள்கை. புகழ்தான் வாழ்க்கையின் உயரிய பொருள் எனக் கண்டனர். எல்லோரும் சகோதரர்கள் என எண்ணினர். உலகமே உறவு என்று எண்ணினர்.

கணியன் பூங்குன்றனார் பாடல் உலக உறவைக் கூறும்போது,

> **யாதும் ஊரே யாவரும் கேளிர்**
> **தீதும் நன்றும் பிறர்தர வாரா**
> **நோதலும் தணிதலும அவற்றோ ரன்ன;**
> **சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்**
> **இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்**
> **இன்னாது என்றலும் இலமே; மின்னொடு**
> **வானம் தண்துளி தலைஇ ஆனாது**

**கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆர்உயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே**

—புறநானூறு : **192**

என்று உலகிலுள்ள அனைத்து ஊர்களும் நமது ஊரே; அனைவரும் நமது சுற்றத்தினரே. நமக்கு வரும் நல்லவை தீயவை யாவையும் விதிவழியால் வருவதன்றி நமக்குப் பிறர் தருபவையல்ல. சாதல் என்பது புதிதன்று; வாழ்வதும் இனிதன்று; மழையால் வீழும் அருவி ஆற்றுவழியில் செல்லும் தெப்பம் போல, உலகமும் அதன் முறைமையிலேயே செல்லும். இதை நமது பட்டறிவால் அறிந்தனம். அதனால் நமக்குப் பெரியோரை வியந்து போற்றுதலோ, நம்மினும் சிறியோரை இகழ்தலோ இல்லோம்.''

இது பழந்தமிழரின் வாழ்க்கைக் கொள்கையெனலாம். வாழ்க்கையில் இப்படித்தான் வாழவேண்டும் என்ற கொள்கையும், எப்படியும் வாழலாம் என்ற கொள்கையும் கொண்டோர் இருப்பர். ஆனால் சங்க காலத் தமிழர் இப்படித்தான்—சீரிய முறையில்தான் வாழவேண்டும் என்ற கொள்கையுடையோராயிருந்தனர். இவ்வாறு உயர்ந்த வாழ்க்கைத் தத்துவத்தைக் கொண்டதனால்தான் அவர்கள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து சிறந்த நாகரிகத்தைப் படைக்க முடிந்தது.

அடுத்து, நரிவெரூஉத்தலையாரின் பாடல் சிறந்த அறக்கருத்துகளை உட்கொண்டு அமைந்துள்ளது.

**பல்சான் றீரே பல்சான் றீரே**
**கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்**
**பயன்இல் மூப்பின் பலசாள் றீரே**
**கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்**

**பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ**
**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்: அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல் ஆற்றுப் படூஉம் நெறியும்மார் அதுவே**

—புறநானூறு ; 195

அறக்கருத்து என்பது எல்லாராலும் பின்பற்றக் கூடியதாக அமைந்தால்தான் அதை மக்கள் பின்பற்ற முடியும். பின்பற்றமுடியாத கட்டுத்திட்டங்கள் அமையுமானால் அவை உடைத்தெறியப்படும் என்பது உலகம் கண்டதுண்டு. சமண, பௌத்த மதங்களின் அழிவுக்கு அதன் கொடுமையான கட்டுத்திட்டங்களே காரணம் என்பது யாரும் அறிந்ததே. இவ் அடிப்படையில்தான் இப்பாட்டிலும் கூறப்பட்டிருக்கிறது. மக்களை விளித்து, நீர்மேற்குமிழியான இவ் உலக வாழ்க்கை என்று முடியும் என்று யாராலும் கூறமுடியாது. திடீரென முடிந்துவிடும். அப்போது வருந்திப் பயனில்லை. ஆதலின் இப்போதே அறங்கள் செய்யுமின்; நல்லதைச் செய்யுங்கள்; நல்லது செய்ய முடியாவிட்டால்கூட நல்லதல்லாதவற்றைச் செய்யாமலிருங்கள். நீங்கள் அவ்வாறு செய்தால் உலகம் இன்புறும். எல்லாரும் விரும்பும் செயலும் இதுதான். நல்லநெறியும் இதுதான் என்று கூறுகிறார். 'நல்லது செய்யுங்கள்: செய்யமுடியாவிட்டால் அல்லது செய்யாதீர்கள்' என்று கூறுவது பெரிதும் போற்றற்குரியது.

கழைதின்யானையார் பாடிய பாடலில் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவம் ஒன்று கூறப்பட்டுள்ளது. எல்லா வளமும் பெற்றவர்கள் உலகில் சிலரே. பலர் பல வளங்கள் பெறாமல் இருப்பதுண்டு. இதனால் ஒருவருக்கொருவர் கொடுப்பதும், வாங்குவதும் இன்றியமையாததாகிறது. இது பண்டமாற்றுப் போன்றது, தான் கொடுத்ததைத் திரும்ப வாங்கிக்கொள்வது. ஆனால் திரும்பப் பெறாத

நிலையில் கொடுப்பதைக் கொடை போன்ற சொற்களால் குறிப்பர். இதில் இரப்பது என்பது இழிந்ததாகக் கருதினர் பழந்தமிழர். இதனால், தானே தனக்கு வேண்டியவற்றைத் தேடி வாழவேண்டும் என்ற தமிழர் கொள்கை புலனாகும்.

**ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்ததன்று**
**கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்ததன்று; அதன் எதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று**
**தெள்நீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்**
**உண்ணார் ஆகுப நீர்வேட் டாரே**
**ஆவும் மாவும் சென்று உணக் கலங்கி**
**சேற்றொடுபட்ட சிறுமைத்து ஆயினும்**
**உண்நீர் மருங்கின் அதர்பல ஆகும்**
**புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை**
**உள்ளிச் சென்றோர் பழியலர்; அதனால்**
**புலவேன்—வாழியர் ஓரி விசும்பில்**
**கருவி வானம் போல**
**வரையாது சுரக்கும் வள்ளியோய்! நின்னே...**

—புறநானூறு ; 204

ஒருவனிடம் சென்று இரத்தல் இழிவானது. அவன் மானமின்றி அவ்வாறு கேட்பதிலும் இழிவானது, தன்னிடம் கொடுக்கப் பொருள் இருந்தும் இல்லையென்று கூறி நிற்றல் ஒருவனுக்கு ‘இதை வைத்துக்கொள்’ என்று கொடுப்பது மிகவும் உயர்ந்த பண்பாகும். தனக்கு வேண்டிய பொருள் தன்னிடம் இருக்கும்போது அவ்வாறு பெறாமல், வேறு ஒருவருக்கு வறியவருக்கு அது பயன் படட்டும் என்ற நன்னோக்கத்தில் அதை மறுப்பது அதை விட உயர்ந்த பண்பாகும். கடலில் எவ்வளவுதான் அதிக அளவில் நீர் நிறைந்திருப்பினும் அது யாருக்கும் குடிக்கப் பயன்படுவதில்லை. கலங்கிய சிறிய நீரையுடைய கிணறு நன்னீரைத் தருகின்றது. மழைபோன்ற வள்ளற்றன்மை கொண்டிருக்கவேண்டும் என்று கூறுகிறார்.

இப்பாடலின் கருத்து மிக நுட்பமுடையது. இவ்வாறு அரிய கருத்துக்களையுடையது புறநானூறு.

இவ் உலகம் ஏன் நிலைபெற்றுள்ளது என்ற வினாவை எழுப்பிக் கொண்டு, அதற்கு விடையாகக் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாட்டு அமைந்துள்ளது.

**உண்டால் அம்ம, இவ்வுலகம் — இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும் 'இனிது' எனத்**
**தமியர் உண்டலும் இலரே; முனிவுஇலர்**
**துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி**
**புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
**அன்ன மாட்சி அனையர் ஆகி**
**தமக்குஎன முயலா நோன்தாள்**
**பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே**

—புறநானூறு: 182

''புகழுக்காகத் தம் உயிரையும் கொடுப்பர்; ஒரு பழிச் செயல் இவ் உலகத்தைக் கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இந்திர உலகத்தில் கிடைக்கும் சாவா மருந்தாகிய அமிழ்தம் கிடைத்தாலும், இனி தாயிற்றே என்றெண்ணித் தாமே உண்ணமாட்டார்கள் பிறரை வெறுத்து ஒதுக்கமாட்டார்கள்; பிறர் அஞ்சத்தக்க செயலைச் செய்யாதவர்கள். ஆகிய இத்தகைய தன்மை யுடைய பெரியோர்களே இவ்வுலகத்தில் இருப்பதால்தான் இவ்வுலகம் அழியாமல் உள்ளது'' என்பது இப்பாடலின் கருத்து.

இத்தகையோர் வாழவேண்டும், எல்லோரும் நல்ல வராக வாழவேண்டும்: உலகம் இனிதாக விளங்கவேண்டும் என்ற அவா, வாழ்க்கைத் தத்துவம் இப்பாடலில் புதைந் திருப்பதைக் காணலாம். இத்தகையோர் தம் சிறப்புகள் பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அல்வழி நல்லை; வாழிய நிலனே!**

—புறநானூறு : 187

என்பது ஒளவையார் பாடலாகும். மாந்தரின் நல்லொழுக்கத்தை வற்புறுத்துகின்றது. நாடாயினும், காடாயினும், மேடாயினும், பள்ளமாயினும் நல்லவர்களைக் கொண்டிருந்தால் நீயும் நல்லதாக இருப்பாய் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

''அதாவது வாழ்நிலம் எதுவாயினும், காடாக இருந்தாலும் பள்ளமாக இருந்தாலும் அதைப்பற்றிக் கருத்துச் செலுத்தாமல், அந்நிலத்தில் வாழும் மக்கள் முயற்சியும், நற்பண்பும் கொண்டவராக இருப்பின் இந்நிலம் சிறப்புற்று விளங்கும். நாடாள்வோரும், மக்களும் நல்லவராக விளங்கினால் அந்நாடு சிறப்புறும்'' என்பது இப்பாடலின் கருத்தாகும்.

இப்பாடல்களால் தமிழிரின் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவம் புலனாகும்.

## பழக்க வழக்கங்கள்

ஒவ்வொரு காலகட்டத்திலும், சமூகத்திலும் சில பழக்கவழக்கங்கள் அமைந்திருக்கும். இது நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் மாறுபட்டு அமைந்திருக்கும். ஒருவருடைய பழக்க வழக்கங்கள் மற்றவருக்கு ஏற்பில்லாமல் இருக்கலாம்.

சங்ககாலத்தில் காணலாகும் பழக்கவழக்கங்களில் முன்பிறவி, பின்பிறவி நம்பிக்கை, உடன்கட்டையேறுதல், கள்ளுண்டல், இறைச்சி உண்டல் போன்ற பலவகைப் பழக்கவழக்கங்களைக் காணலாம். இங்குச் சான்றாகச் சிலவற்றை மட்டும் காணலாம்.

**இம்மைச்செய்தது மறுமைக்கு ஆம்எனும்**
**அறவிலை வணிகன் ஆய்அல்லன்**

—புறநானூறு : 134

என்ற ஏணிச்சேரி முடமோசியார் பாடல்மூலம் பிறவி நம்பிக்கை இருந்ததை யறியலாம்.

விதிபற்றிய நம்பிக்கை மக்களிடம் வேரூன்றி யிருந்ததைப் பல பாடல்கள் நமக்கு விளக்கும். 'ஆருயிர் முறைவழிப்படும்' என்று நம்பினவர்கள் பழந்தமிழர்.

## உடன்கட்டையேறுதல்

'பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாள் சொல்லியது.' என்ற பாடல் (246) கைம்மை நோன்பின் கொடுமையையும், தீப்பாய்தலின் இனிமை யானது கைம்மை கொடுமையானது என்ற கருத்தையும் வெளியிட்டு நிற்பதைக் காண்கிறோம். இப்பாடல் மூலம் அக்காலத்தே கைம்மை நோற்கும் பழக்கமும் இருந்ததை அறியமுடிகிறது. இதனால் பெண்கள் ஆட வரை கணவன்மாரைத் தன்னுயிராக கொண்டு வாழ்ந்தது புலனாகிறது.

## கள்ளுண்டல்

திருக்குறள் முதலிய சங்கம் மருவிய கால நூற்கள், அறநூற்கள் கள்ளுண்டலை ஆதரிக்கவில்லை. ஆனால் சங்க காலத்தில் கள்ளுண்ணும் பழக்கம் பெரிதும் பரவியிருந்தற் கான சான்றுகள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன.

ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும், முதியோரும் புலவோரும் கள்ளுண்ட செய்தி நமக்குக் கிடைக்கிறது கள்ளிலும் பலவகைப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

**சிறியகட் பெறினே எமக்குஈயும் மன்னே**
**பெரிய கட்பெறினே**
**யாம்பாடத் தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே**

—புறநானூறு ; 235

என்று ஔவையார் பாடும் பாடல் கள்ளுண்டலுக்குச் சான்று பகரும். கள்ளுண்டல் பற்றிப் புறத்துறைகள் அமைந்துள்ளன. உண்டாட்டு முதலிய துறைகள் போர் வீரர்கள் போருக்குச் செல்லும்முன்னும், வெற்றிப் பெற்று வந்ததும் கள்ளுண்ணும் செய்தியையும் கூறும்.

## இறைச்சியுண்டல்

மேற் காட்டிய புறநானூற்று ஔவையார் பாடலே இறைச்சி உண்டல் பற்றிய கருத்தையும் கூறுகின்றது.

"என்பொடு தடிபடுவழி எல்லாம் எமக்கு ஈயும் மன்னே!" என்ற அப்பாடல் அடி, புலவரும், பெண்களும் கறியுண்ட செய்தியை விளம்புகிறது.

## நடுகல் செய்தி

அதியமான் நெடுமான் அஞ்சியிறந்தபின்பு, அவனுக்கு நடுகல் நட்டு, அதில் பீலிசூட்டி, சிறுகலத்தில் கள் ஊற்றி வைத்து வணங்கினர். இதைப் பார்த்து ஔவையார் பாடிய பாட்டான,

**இல்லா கியரோ, காலை மாலை**
**அல்லா கியர்யான் வாழும் நாளே**
**நடுகல் பீலி சூட்டி, நார்அரி**
**சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ—**
**கோடுஉயர் பிறங்குமலை கெழீஇய**
**நாடுஉடன் கொடுப்பவும் கொள்ளா தோனே**

—புறநானூறு ; 232

என்ற பாடல் நடுகல் நடுதலையும், அதற்கு மயிற்பீலி சூட்டி, வணங்குதலைதலையும் குறிப்பிடுகின்றது.

நடுகல்லில் இறந்த வீரனின் உருவமும், பெயரும் புகழும் எழுதப்படும்.

## புலவர் நிலை

சங்ககாலப் புலவர்கள் வீரமும், அற உள்ளமும், தேர்ந்த சிறந்த தமிழ்ப் புலமையும் பெற்றுத் திகழ்ந்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல்களால் நன்கு அறியலாம். வறுமையிலும் தளராப் பெருவாழ்வு வாழ்ந்தனர் புலவர். அவர்கள் புரவலரை நாடி அவர்கள் கொடுத்த கொடையைக் கொண்டு வாழ்ந்தனர்; பலதொழில் செய்தவர்களும் புலவோராய் இருந்தனர்.

அரசர்கள் மதிமயங்கிக் குடிமக்களுக்குத் துன்பம் விளைவித்தபோதும், நீதிநெறி பிறழ்ந்தபோதும் அவர்களை இடித்துக்கூறித் திருத்தினர். அவர்களைக் கண்டு அஞ்சாமல் தமது நன்மையை எண்ணாமல் உலக நன்மையையே எண்ணினார்கள். சங்கப் புலவோரது தமக்கென வாழா உயரிய வாழ்க்கை பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

பெருந்தலைச் சாத்தனார் பாடிய பாடல் ஒன்று; கடிய நெடுவேட்டுண் என்றவன் பரிசில் நீட்டித்தான். அப்போது புலவர்,

> **முற்றிய திருவின் மூவர் ஆயினும்**
> **பெட்பின்று ஈதல் யாம்வேண் டலமே**
>
> —புறநானூறு : 205

என்று பாடினார். எவ்வளவு அதிகாரமும், பணமும், படையும், படைத்தவராயினும் அவர்களைக் கண்டு அஞ்சாத புலவர்கள், அவர்களது கொடுமையையும் பாடத் தவறவில்லை.

ஔவையாரும் அதியனும் கொண்டிருந்த நட்பின் திறம் மிகவும் போற்றுதற்குரியது. நீண்ட நாள் உயிர்வாழக்

கூடிய நெல்லிக்கனியை அரிதின் கொண்டு வந்த போது எதிர்ப்பட்ட ஔவையாருக்குக் கொடுத்து, அவரைப் போற்றியவன் அதியன். அவனது வாயிலோனிடம் அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் நீட்டித்த விடத்து,

**வாயி லோயே! வாயி லோயே!**
**வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தி, தாம்**
**உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து**
**வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கைப்**
**பரிசிலாக்கு அடையா வாயி லோயே!**
**கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி**
**தன்அறிய லன்கொல்? என்அறி யலன்கொல்?**

—புறநானூறு ; 206

என்று பாடினார் ஔவையார்,

''அரசர்களின் நெஞ்சிலே இன்பத்தை உண்டாக்கி வாழும் பரிசில் வாழ்க்கை எம் வாழ்க்கை. எமது நிலை பற்றி உமது மன்னனாகிய அதியமான் நெடுமான் அஞ்சி அறியான் போலும். அவன் இல்லாவிட்டால் நாங்கள் அழியப்போவதில்லை. எங்குச் சென்றாலும், எனக்குச்சோறுகிடைக்கும்'' என்றுகூறினார் ஔவையார். பெண்பாற்புலவரான ஔவையாரின் வீரமும், பணியா வள்ளவுறுதியும் இங்கு நன்கு புலப்படுகிறது.

கோவூர்கிழார் ஆவூர்கிழார் போன்றோர் பாடல்களும் புலவர்தம் அஞ்சாநெஞ்சப்பான்மையை நன்கு விளக்கி நிற்கும்.

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை முரசு கட்டில் அறியாது ஏறிய மோசிகீரனைத் தவறுசெய்யாது, அவன்துயில் எழுந்துணையும் கவரிகொண்டு வீசியானை மோசிகீரனார் பாடிய பாடல் அன்றைய

சமூகத்தில் புலவருக்கிருந்த நிலையை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

முரசு கட்டில் என்பது அரசசின்னம். அதை முரசு வைக்கத் தவிர வேறு எதற்கும் பயன்படுத்தமாட்டார்கள். புனிதப்பொருளாக அது கருதப்பட்டது.

ஒருநாள் முரசை நீராட்டக்கொண்டு சென்றிருந்தனர். அப்போது. அங்குவந்த மோசிகீரனார் வழி நடந்த களைப்பால் அதில்படுத்து உறங்கிவிட்டார். எனவே, அவருக்கு மிகப்பெருந் தண்டனை கொடுத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் புலவருக்குக் கவரி வீசினான் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, இதுவொன்றே அன்றைய புலவரின் நிலையை விளக்குகற்குச் சான்றாகும், மோசிகீரனார் பாடிய மற்றொரு பாடல்.

**நெல்லும் உயிர்அன்றே நீரும் உயர்அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான்உயிர் என்பது அறிகை**
**வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே!**

—புறநானூறு ; 186

என்று மன்னர்களே நாட்டின் உயிர் என்று கூறியுள்ளார்.

பிசிராந்தையார்-கோப்பெருஞ்சோழன் நட்பும் புலவர் அரசருக்கிணையாக எண்ணப்பட்ட நிலையை நன்குணர்த்தும்.

கபிலர்(புறம். 201, 202, 203) பாரியுடன் கொண்ட நட்பும், அதனால் அவன் இறந்தபின்னர் அவனுடைய மகளிரை அவர் பேணிய திறமும் சங்கப் புலவர்களின் மேன்மையைப் பறைசாற்றும் நிலையைக் காணலாம்.

கபிலரின் அற உள்ளமும், அஞ்சா நெஞ்சமும் அதில் புலனாகும்.

**பாரி பாரி என்றுபல ஏத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டுஈண்டு உலகு புரப்பதுவே**

*—புறநானூறு ; 107*

என்ற பாடலால் பாரியின் சிறப்பும் ஈகைத்தன்மையும் புலனாகும்.

பெருஞ்சித்திரனார் பாடல்மூலம் அன்றைய புலவர் தம் வறுமை வாழ்க்கையினையும் வாடாத அறவுள்ளத்தையும் நாம் அறியலாம்.

வள்ளல்களைப்பாடியபோது கிடைக்கும் யானைமுதலிய பெரும்பொருளை அவர்கள் சேமித்துத் தங்களுக்கென்று வைத்துக்கொண்டவர் அல்லர். தாம் பெற்றுவந்த பொருளை அனைவருக்கும் கொடுத்து, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாளர்கள் அவர்கள்.

குமணனைப் பாடிப் பரிசில் பெற்று, அதைத் தம் இல்லிற்குக் கொணர்ந்தார் புலவர், அப்போது அவர் தம் தலைவியிடம் கூறுகின்றார் :

**நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்**
**பல்மாண் கற்பின் நின்கிளை முதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசி தீர யாழநின்**
**நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்**
**இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி—மனைகிழ வோயே!**
**பழம்தூங்கு முதிரத்துக் கிழவன்**
**திருந்துவேல் குமணன் நல்கிய வளனே**

*—புறநானூறு ; 163*

என்று 'தன்னைக்கூடக்கேட்காமல் எல்லோருக்கும் கொடு' என்று புலவர் கூறுவது அன்றைய சமூகத்தின் அன்புணர்வையே காட்டுகின்றது.

சங்கப்புலவரின் இத்தனிப்பண்புகள் சமுதாய நலத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதை நன்குணர்ந்திருந்ததால் அன்றிருந்த மன்னர்கள் அவர்களை உயிரினும் மேலாகப் போற்றினர். அறவழியில் குடிமக்கள் நலனை நாடிய மன்னர்களைப் புலவர்களும் மனந்திறந்து பாராட்டினர். இருவழிப்பாதையாக அமைந்த இந்தப்போற்றுதலில் கனிந்த நட்பு, காலங்களை வென்று வாழும் ஆற்றலுடையது. நடப்பிற் சிறந்த இத்தகைய காட்சிகளைப் புறநானூறு நம் கண்முன் இன்று நடப்பதைப்போல் காட்டுகிறது.

புறநானூற்றுப் புலவர்கள் அந்நாளைய மன்னர்களிடம் சிறப்பாகக் கொண்டு போற்றியவை அவர்களுடைய வீரமும் கொடைத்தன்மையும் ஆகும். ஆண்மை என்பதே வீரம் என்று கருதப்பட்ட காலம் அது. உலகின் பிற பாகங்களிலும் வீரமே முதன்மைப் பண்பாகப் போற்றப் பட்டதை அந்நாளைய இலக்கியங்களும் வரலாற்றுச் சான்றுகளும் தெளிவாக விளக்குகின்றன. எனவே வீரத்தை வெளிப்படுத்தும் போர்களுக்கு அன்று குறைவே இருந்ததில்லை. எனினும் எளியோரை வலியோர் போரிட்டு வீழ்த்துதலும், அறவழியில்லாத வழிகளில் பெறும் வெற்றியும் அன்று புலவர்களால் போற்றப் படவில்லை.

போர் என வந்துவிட்டால் அழிவைத் தவிர்க்க இயலாது. இதைப் புலவர்கள் மறந்துவிடவில்லை. எனவே தான் வாய்ப்பு நேரும்போதெல்லாம் போரைத் தவிர்க்கவும், ஒற்றுமையை நிலைநாட்டவும் அவர்கள் முனைந்தனர். அதியமான்மேல் தொண்டமான் படையெடுக்க முனைந்தபோது ஔவையார் தூதுசென்று அதனைத் தடுத்த செயலை ஒரு புறநானூற்றுப்பாடல் செப்புகின்றது

பெருந் திருமாவளவன் என்ற சோழனும் பெருவழுதி என்ற பாண்டியனும், ஒருகால் ஒருசேர இருந்ததைக்

கண்ட காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்ற புலவர், ''இன்றுபோல் என்றும் இணைந்திருங்கள். இவ்வாறு இணைந்திருந்தால் இவ்வுலகம் முழுவதும் உங்கள் கையில்தான் இருக்கும்'' என்று வாழ்த்துவதை மற்றொரு பாடல் (58) காட்டும்.

சேரன் மாவண்கோவும். பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருமுறை ஒருங்கிருந்ததைக் கண்டார் ஔவையார். அவ்வளவிலே அவர் மனத்தில் மகிழ்ச்சி பொங்கியது. ''வேந்தர்களே! நல்வினை புரியுங்கள்! மீனினும் மழைத்துளியினும் பலகாலம் வாழ்வீர்களாக!' என்று அவர்களை மனந்திறந்து பாராட்டுகிறார்.

ஓரினத்தார் போர்புரிந்தபோது புலவர்கள் அதை விலக்கியதைப் பல பாடல்கள் காட்டும்.

இவ்வாறு சங்கக்காலப்புலவர்கள் சிறந்த அறநெஞ்சினராகவும், அரசனுக்கு நண்பர்களாகவும், தூதுவர்களாகவும், ஆசானாகவும், அறிஞராகவும் செயல்பட்டுள்ளனர்.

## அரசியல் நிலை

வீரயுகப் பாடலான சங்கப்பாடல்கள் வீரயுகத்தின் பிரதிபலிப்பைக் காட்டி நிற்கின்றன. ஒருவரையொருவர் கொல்வதும், துன்புறுத்துவம், உலகத்தியற்கை என்று கருதிய காலம் அக்காலகட்டம். அவ்வாறிருந்த காலத்திலும் சங்ககால மன்னர்கள் சிறந்த முறையில் ஆட்சி புரிந்தனர். ஆட்சி நிலைமாறிச் சென்றபோது மன்னர்கள் புலவர்கள் முதலியோரின் இடிப்புரையையேற்று மீண்டும் அறநெறிக்கு வந்தனர். புறநானூற்றுப் பாடல்கள் இதை நன்கு உணர்த்தி நிற்கின்றன.

மன்னனே உலகின் உயிராக எண்ணப்பட்டான் அரசனுக்கு ஆலோசனை வழங்க எண்பேராயம் முதலிய பல குழுக்கள் இருந்தன. முடியாட்சியாயினும் குடியாட்சியே நடைபெற்றது. மன்னன் மக்களிடம் வரிவசூலித்து அரசாட்சி நடத்திவந்தான். அதைவிட்டு அவன் அதிக வரி வசூலிக்க எண்ணியபோது புலவர் ஒருவர், ஒரு வயலில் உள்ள நெல்லை அறுத்துப் பதம் செய்து வைத்திருந்தால் ஒரு யானைக்குப் பல நாட்களுக்கு அதை உணவாகக் கொடுக்கலாம். ஆனால், அதே யானை அவ்வயலில் புகுந்து

தின்னுமானால் அந்த யானை தின்பதைவிட அது தன் காலால் மிதிப்பதே அதிகமாகும் என்று கூறி அவனைத் திருத்துகிறார்.

போர்நெறி அக்காலத்தில் பின்பற்றப்பட்டது என்பதை,

**ஆவும் ஆன்இயற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என**
**அறத்துஆறு நுவலும் பூட்கை மறத்தின்**
**கொல்களிற்று மீமிசைக்கொடி விசும்பு நிழற்றும்**
**எம்கோ வாழிய குடுமி**

—புறநானூறு : 9

என்ற நெட்டிமையார் பாடல் உணர்த்துகின்றது. பசு, பார்ப்பனர், பெண்டிர், பிணியுடையோர், குழந்தை பெறாத இளந்தம்பதியர், முதலியோர்களை விலக்கியே போர் செய்தனர். புறமுதுகு இட்டு ஓடுவோரையும் அவர்கள் அம்பெய்வதில்லை.

பல அரசர்கள் சிறந்த புலவர்களாக விளங்கியுள்ளதிலிருந்து, அன்றைய மக்கள் கல்வியின் பயனை நன்குணர்ந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது, கற்றல் நன்றே**
**பிறப்புஓர் அன்ன உடன்வயிற் றுள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்;**
**ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடை யோன்ஆறு அரசும் செல்லும்**
**வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே**

—புறநானூறு : 183

என்ற ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாட்டு அவனது புலமைக்கும், அச்சமூகம் கல்வி பற்றிக் கொண்டிருந்த எண்ணத்திற்கும் சான்று பகரும்.

## மருத்துக் கருத்து (உளவியல் பாங்கு)

பிசிராந்தையார் பாடிய பாடல் நரைதோன்றாததன் காரணத்தை விளக்குகிறது.

**யாண்டுபல ஆக, நரை இல ஆகுதல்**
**யாங்கு ஆகியர்என வினவுதிர் ஆயின்,**
**மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்**
**யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்**
**அல்லவை செய்யான் காக்கும், அதன்தலை**
**ஆன்றுஅவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர், யான் வாழும் ஊரே!**

—புறநானூறு : 191

இதனால் அன்றைய சமூகச் சூழ்நிலை புலனாகிறது.

### கடமைகள்

பொன்முடியார் பாடலாக அமைந்த பாடலொன்று மாந்தரின் கடமைகளை விளக்கி நிற்கின்றது.

**ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி**
**களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே**

—புறநானூறு : 312

தாயின் கடமையாகிய ஈன்று புறந்தருதலையும், தந்தையின் கடனாகிய அவைசான்றோராக்குதலையும், கொல்லர் கடனாகிய வேல்வடித்துக் கொடுத்தலையும், நல்லொழுக்கமுள்ளவனாக ஆக்குகின்ற வேந்தனது கடமையையும், காளையின் போர்வீரனாம் கடமையையும் குறிக்கின்றது.

### இயற்கை

புறநானூற்றுப் பாடல்களில் இயற்கையும் சுட்டப் பட்டுள்ளது. அகத்திணை இலக்கியங்களில் மனித உணர்ச் சியின் பின்புலமாகவும், பரிவுமிகுந்த அரங்காகவும் அமைந் திருந்தாலும், புறத்திணை இலக்கியங்களில் புறநிலை மெய்ம்மை சார்ந்து ஒன்றாகவே காணப்படுகின்றது.

இங்கும் உவமைகளும் உருவகங்களும் இயற்கையைச் சார்ந்து வந்தாலும், அகப்பாடல்களில் காணப்படும் அளவுக்கு மனித உணர்ச்சிகளும் இயற்கைக் காட்சிகளும் பின்னிப்பிணைந்த ஒரு நிலையைக் காணமுடியாது. புலவர்கள் தங்கள் புரவலர்களில் நாட்டுவளங்களைப் பாடும் இடத்திலும், உவமைகளிலும் புறப்பாடல்களில் இயற்கை வருணனை இடம்பெற்றுள்ளதாக அறிஞர்கள் ஆய்ந்து தெளிநதுள்ளனர். (டாக்டர் மு. வரதராசன்; பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, (ப. 84-44)

## வீரம்

புறநானூற்றின் சிறப்பான பொருளே (பாடு பொருளே) வீரம்தான். வீரச்செயல்களே மிகுதியும் போற்றிப் புகழப்பட்டுள்ளன.

**களம்புகல் ஓம்புமின், தெவ்விர்! போர்எதிர்ந்து**
**எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்**
**எண்தேர் செய்யும் தச்சன்**
**திங்கள் வலித்த கால்அன் னோனே**

—புறநானூறு ; 87

என்ற ஔவையார் பாடல் இதற்குச் சான்றாகலாம் இவ்வாறே எல்லாப் பாடல்களிலும் வீரமும், மனஉறுதியும் கூறப்பட்டுள்ளதை யறியலாம். மைந்தன் கடனாகக் களிறெறிந்து பெயர்தல் என்பது இதை வலியுறுத்துவதாகும்.

## முடிவுரை

இவ்வாறாகப் புறநானூறு சிறந்த வரலாற்றுப் பெட்டகமாகவும், பண்டைத் தமிழரின் வாழ்க்கைநெறிகளின் பேழையாகவும் மிளிர்கிறது. அன்றியும் உலக இலக்கியத்திற்கும் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் மனிதகுல முழுமைக்கும் தமிழினம் தந்த தலையாய கொடைகளிலேயே தலையாயவை எவை என்று கேட்டால், சில பாடல்களை இவைதான் என்று தலைநிமிர்ந்து கூறலாம். அத்தகைய பல சிறந்த பாடல்கள் புறநானூற்றில் புதைந்து கிடைக்கின்றன.



சி. பா.

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3 - 5 - 1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர் கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி ஏ. ஆனர்சு. அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர். 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்., பட்டமும், 'சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி) பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள், நல்ல நடைகொண்ட இந்த நாகரீகர் பேர்சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர். பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னால் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர், தற்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமாவார்.

முப்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருத் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல். 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உருபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற்புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்) சங்க நூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு.

—மா. செ.